விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 28 வியாழக்கிழமை (12.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 083

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## எதிர்ப்பையும் ஆதரிக்கும் மைத்திரி



(லண்டன்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் லண்டன் விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற ஜனாதிபதி, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு புன்முறுவலுடன் கையசைப்பதை படத்தில் காணலாம்.

## நாளை வருகிறார் நரேந்திர மோடி

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்தியப் பிரதமரின் இவ் விஜயத்தின்போது பல்வேறு முக்கியமான விடயங்கள் இடம்பெறவுள்ளதுடன், இரு நாடுகளுக்கும் இடையில் பல உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளன. அத்துடன் ஜனாதிபதி

23ஆம் பக்கம் பார்க்க....





பிரித்தானியாவுக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தை சந்தித்து கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# வார்த்தைகள் வேண்டாம் செயலில் காண்பியுங்கள்

## இலங்கைக்கு ஐ.நா. எடுத்துரைப்பு



(ஜெனிவா)

பொறுப்புக்கூறும் விடயத்தில் வார்த்தைகள் மாத்திரம் போதுமானவையல்ல, பதிலாக நடவடிக்கைகளே தேவையாகவுள்ளன. இலங்கையில் மக்கள் மத்தியில் அரசு குறித்து இன்னமும் நம்பிக்கையின்மை காணப்படுகின்றது. வடக்கில் இந்த சந்தேக மனப்பான்மையை நான் நேரடியாகப் பார்க்க முடிந்தது. குறிப்பாக வடக்கில் அரசாங்கம் தனது வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்ற வேண்டியுள்ளது என இலங்கைக்கு சமீபத்தில் விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகளின் அரசியல் விவகாரங்களுக்கான தலைமை அதிகாரி ஜெவ்ரி பெல்ட்மன் தெரிவித்துள்ளார்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவில் கடற்படைக்கு காணி சுவீகரிப்பு

### பொது அமைப்புகள் கடும் எதிர்ப்பு

(மண்டைதீவு)

மண்டைதீவில் கடற்படைக்கு காணி சுவீகரிக்கும் நடவடிக்கையை மண்டைதீவு பொது அமைப்புக்களும் பொது மக்களும் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

மண்டைதீவில் மூன்று வெவ்வேறு இடங்களில் கடற்படைக்கு காணி சுவீகரிக்கும் நடவடிக்கை இடம்பெறுவதாக அறியப்படுகிறது.

இதில் மண்டைதீவு பூம்புகார் கண்ணகி அம்

23ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்ற காணொளியை இலங்கையில் திரையிட கோரிக்கை



கோப்புப் படம்

(கொழும்பு) இலங்கையின் போர்க்குற்றங்களை சித்திரிக்கும் 'நோ பயர் சோன்' விவரணப்படத்தின் சிங்கள மொழியாக்கத்தை இலங்கையில் திரையிட அனுமதிக்க வேண்டும்

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழின அவலங்கள் தீர மோடி விஜயம் தீர்வாகட்டும்

### மன்னார் ஆயர் கருத்து

(யாழ்ப்பாணம்)

உலகிலேயே தனித்துவமான இனம் தன்னுடைய சுய உரிமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் இலங்கையில் வாழ்ந்து வருகின்ற அவலம் காணப்படுகின்றது.

இவ் அவலத்திற்கு தீர்வை ஏற்படுத்தும் வகையில் இந்திய தேசத்தின் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயம் அமைய வேண்டுமென மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு ஜோசப் தெரிவித்துள்ளார்.

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் ஜெபநேசன் அடிகளாரின பவளவிழா நிகழ்வு நேற்று பிற்பகல் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவில் எத்தனையோ தேசியங்கள் உள்ளன் அத்தேசியங்களை கண்டவர் சிறுபான்மையின மக்களிற்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மைத்திரி வாய்விட்டு சிரிப்பு

(லண்டன்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் மாலை மத்திய லண்டன் பகுதியில் லன்கஸ்டர் ஹோட்டலில் புலம்பெயர்ந்து வாழும் இலங்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனநாயகத்திற்கு உதவத் தயார்–அமெ.

(வாஷிங்டன்)

இலங்கையில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கும், இனப்பதற்றத்தால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கும் இலங்கையின் புதிய அரசாங்கத்துக்கு உதவத் தயாராக

23ஆம் பக்கம் பார்க்க....

## நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதற்காக நான்கு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு பிரித்தானியாவுக்கு சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரித்தானியாவின் எதிர்க்கட்சி தலைவரான தொழிலாளர் கட்சியின் தலைவர் எட்வர்ட் மிலி பான்ட்டை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்தார்.



நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு பிரிட்டன் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அங்கு பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்தினார். பொது நலவாயத்தின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவை நேற்று ஜனாதிபதி சந்தித்து உரையாடுவதை படத்தில் காணலாம்.

# 5 உணவகங்கள் மீது வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் உள்ள 5 உணவகங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் பொது சுதாதாரப் பிரிவுகளுக்கு உட்பட்ட உணவகங்களுக்கு நேற்றைய தினம் சுகாதார பிரிவினர் அதிரடி சோதனை நடத்தினர்.

இதன்போது உரிய சுகாதார முறையினை பேணாத 5 உணவகங்களுக்கு எதிராக யாழ்.நீதிமன்றில் நேற்றையதினம் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கினை விசாரித்த யாழ்.நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் இரு கடைகளை யும் சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டதோடு 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார்.

மேலும ஏனைய மூன்று கடைகளுக்கும் தலா 8 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (செ-11)

## பெயர் மாற்றம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் கிராமசேவையாளர் பிரிவை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட திருமதி கிருபாகரன் விஜயதர்சினி ஆகிய நான், இல-1401 இன் படி எனது பெயர் இராசகுரு பிரியதர்சினி எனப் பதியப்பட்டுள்ளது. எனது சரியான கன்னிப் பெயர் ராஜகுரு விஜயதர்சினி. பிறப்பிலிருந்து இன்று வரை எனது சகல சட்ட ஆவணங்களிலும் விஜயதர்சினி என்னும் பெயரையே வழக்கத்தில் பயன்படுத்தி வருகின்றேன். இப்பெயரையே இன்றிலிருந்து இனிவரும் காலங்களிலும் பயன்படுத்திக் கொள்வேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வாழ் மக்களுக்கு இத்தால் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

தகவல்:-திருமதி கிருபாகரன்
விஜயதர்சினி

(சி-337)

## இரத்த தானம்

(சுதுமலை)

சுதுவை வாழ வைக்கும் வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் கொடையாளிகள் இரத்ததானம் செய்யவுள்ளனர்.

இதில் இரத்ததானம் செய்ய விரும்புவோர் அனைவரும் வருகை தந்து இரத்த தானத்தை வழங்குமாறு செயலாளர் சிவானந்தன் றஜித் அறிவித்துள்ளார். (செ)

## மடுவுக்கான பரீட்சார்த்த தொடருந்து சேவை

(மன்னார்)

தலைமன்னாருக்கான பரீட்சார்த்த தொடருந்து சேவை நேற்று இடம்பெற்றுள்ளது.

மதவாச்சியில் இருந்து மடுவிற்கு வந்த தொடருந்து, அங்கிருந்து தலைமன்னாருக்கு பயணித்துள்ளது.

சுமார் 26 வருடங்களுக்கு பின்னர் இவ்வாறு தீவு பகுதிக்கு தொடருந்து சேவை இடம்பெறுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ள இந்திய பிரதமர் நாளை மறுதினம் 14ஆம் திகதி மன்னார் மடுவிற்கான தொடருந்து சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்க உள்ளார்.

அதனை முன்னிட்டே நேற்று இவ்வாறு மடுவிற்கான பரீட்சார்த்த தொடருந்து சேவை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

## ஒன்றுகூடுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

1987-ம் ஆண்டிலிருந்து வட மாகாணத்தில் புகையிரதக் கடவைக் காப்பாளராகக் கடமையாற்றி வேலையிழந்தவர்களை நாளை வெள்ளிக்கிழமை 9 மணிக்கு புங்கங்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் முதல் காங்கேசன்துறை வரையான பகுதியில் புகையிரதக் கடவைக் காப்பாளராக கடமையாற்றியதற்கான ஆவணங்களுடன் அனைவரையும் சமுகம் தருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-3)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சிவசிவாம்பிள்ளை ரவீந்திரதாஸ்



பிறப்பு 20 - 11 - 1954

இறப்பு 10 - 03 - 2015

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றி 2012ஆம் ஆண்டு ஓய்வுபெற்றுச் சென்று 10.03.2015 அன்று இறைவனடி சேர்ந்த அமரர் சிவசிவாம்பிள்ளை ரவீந்திரதாஸ் அவர்கள் சிவபதமடைந்ததை யிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலர்,
நிர்வாக கிராம அலுவலர்,
மற்றும் கிராம அலுவலர்கள்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். (9760)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## பெண் போராளி கடத்தப்பட்டார்

(முல்லைத்தீவு)

விடுதலைப்புலிகளது முன்னாள் பெண் போராளியொருவர் நேற்று காலை புதுக்குடியிருப்பில் வைத்து கடத்தப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள்களில் வந்த நபர்களே குறித்த யுவதியான முன்னாள் பெண் போராளியினை கடத்தி சென்றுள்ளனர்.

அவ்வாறு கடத்தப்பட்டவர் கைவேலி பகுதியினை சேர்ந்தவரான விசுவலிங்கம் வினோதினி(வயது 26) என அடையாளப் படுத்தப்பட்டுள்ளார்.

தற்போது சிவில் பாதுகாப்பு படைப்பிரிவில் இணைக்கப்பட்டுள்ள அவர் சிறார்களிற்கான முன்பள்ளியொன்றிலும் கல்வி கற்பித்து வந்துள்ளார்.

நேற்று காலை வழமை போலவே முன்பள்ளிக்கு சென்று கொண்டிருந்த அவரை இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்திருந்த நபர்கள் தாக்கிய பின் தமது மோட்டார் சைக்கிளில் தூக்கி சென்றுள்ளனர். மயக்கமுற்ற நிலையில் குறித்த முன்னாள் போராளி கடத்தி செல்லப்பட்டமையை பொலிஸாரும் பொதுமக்களும் அவதானித்ததாக கூறப்படுகின்றது. (செ-4)

## மலர் முன்பள்ளி விளையாட்டு விழா

(புலோலி)

புலோலி வடகிழக்கு அன்பு மலர் முன்பள்ளி விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உத்திராவத்தை ஞானவைரவர் ஆலய முன்றலில் முன்பள்ளி முகாமைத்துவ தலைவரும் பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்தி பணிப்பாளர் தில்லையம்பலம் விமலராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் கலந்து கொள்ளவுள்ளார். (செ)

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)
2. அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்) (வெளிக்களம் / உட்களம்)
3. முகாமைத்துவ உதவியாளர்கள் (இருபாலாரும்)
4. கணனி இயக்குநர்கள்
   - தமிழ் ரைப்பிங்
   - பக்க வடிவமைப்பு
   - விளம்பர வடிவமைப்பு

**தகைமை**

க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி துறைசார் பயிற்சியும் உள்ளவர்கள் தமது தொலைபேசி இலக்கம், முகவரி உள்ளிட்ட தான சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 16.03.2015ஆம் திகதிக்கு முன்னதாக

வலம்புரி இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

யாழ் நகரை அணமித்தவர்கள் விரும்பத்தக்கது.

சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை

பயிற்சி வகுப்புக்கள் பற்றிய விபரங்களுக்கு:
க.துரைராஜா (SLAS)
(இளைப்பாறிய மேலதிக அரச அதிபர்)
தொடர்பு: 0771728348 (9761)

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.




ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284) (சி-333)

பழுது பார்த்தல்
சகல விதமான தையல் மெசின்களும் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
சூரி-0770258694 (9757)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆட்சியில் காணிக்கொள்ளை

## காணி அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**காணிகளை சட்டவிரோதமாக கையகப்படுத்திக் கொண்ட முன்னைய ஆட்சியாளர்கள், அவற்றினை பாதுகாப்பு வலயம், உயர்பாதுகாப்பு வலயம் என்ற பொய்களைக்கூறி அந்த காணிகளை தங்களது குடும்பத்துக்குள்ளேயே பங்கிட்டுக் கொண்டார்கள் என காணி அபிவிருத்தி அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.**

நேற்று முன்தினம் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்ற காணி உறுதி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நானும் ஒரு குடியேற்றத் திட்டத்தில் பிறந்த குடிமகன். அதேபோன்று ஜனாதிபதியும் ஒரு குடியேற்றவாசியின் மகன். இவ்வாறான குடியேற்ற மக்களுக்கு சேவைசெய்யும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதில் சில காலதாமதங்கள் ஏற்படுகின்றன. அமைச்சில் நில அளவையாளர்கள் பற்றாக்குறையே இந்த நிலைக்கு காரணமாகும். இதற்கான பொறுப்பை பெற்றோரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைகளை நில அளவை கற்கைநெறியை கற்பிக்காமல் விடுவதும் காரணமாகும்.



இலங்கையில் 11 மாவட்டங்களில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 14 மாவட்டங்களுக்கும் காணி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றோம்.

கடந்த காலத்தில் வட மாகாணத்தில் 20 ஆயிரம் காணி உறுதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு காரணம் கடந்த காலத்தில் பொறுப்புடன் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானம் ஆகும்.

கடந்த ஜனவரி 8ஆம் திகதி நீங்கள் எடுத்த முக்கிய தீர்மானம் காரணமாக இந்த நாட்டினை அழிவுப் பாதையில் இட்டுச்சென்ற, தரகுப் பணம் பெற்றுக்கொண்டு மரண அச்சுறுத்தல்களைக் காட்டி மக்களை வழிநடத்திச் சென்ற ஆட்சியாளர்கள் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர்.

அதன்காரணமாக இவ்வாறான நல்ல சேவைகளை செய்வதற்குரிய சந்தர்ப்பம் எமக்கு கிடைத்துள்ளது.

இவ் வாறான மாற்றத்திற்கு பெரும்பங்காற்றிய மட்டக்களப்பு மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்களின் பங்களிப்பினை நான் உயர்வாக போற்றுகின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி அவரின் குடும்பத்தினருடன் இணைந்து இந்த நாட்டினை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றார்.

இந்த நாட்டில் காணப்பட்ட பெறுமதியான காணிகளை தமக்கும் தமது பிள்ளைகளுக்கும் தமது உறவினர்களுக்கும் பிரித்து எடுத்துக்கொண்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தெளிவான அறிவிப்பு வேண்டும்

(கொழும்பு)

பொதுத் தேர்தல் அறிவிப்பு மற்றும் அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் தெளிவான அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் மாற்று குழு, அரசாங்கத்திடம் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அதன் இணைப்பாளர் அனுரத்த பொல்கம்பொல இவ்வாறு மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

## வண்ணக் கோலங்கள் நிகழ்வு உடுவிலில்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றமும், சுனேரா நிறுவனமும் இணைந்து வழங்கும் வண்ணக் கோல ங்கள் நிகழ்வு எதிர் வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 4 மணிக்கு உடுவில் ஆர்க்கில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்கு பிரதேச செயலர் முத்துலிங் கம் நந்தகோபனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## ரத்தம் சொட்டச் சொட்ட கொல்லப்பட்ட நபர்கள்

### கைதட்டி ரசித்த மக்கள்

ஈராக்கில் கடவுளுக்கு எதிராக பேசியவரையும், ஓரினச்சேர்க்கையாளர்களையும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்று முன்தினம் கொடூரமாய் தலைதுண்டித்து கொலை செய்துள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ். தொடர்ந்து பல அட்டூழியங்களை நடத்தி வருகிறது.

இந்நிலையில் ஈராக்கின் வடக்கு பகுதியில் உள்ள நைனிவெஹ் (Nineveh) மாகாணத்தில் மூன்று நபர்களை வீதியின் நடுவே இழுத்து வந்த தீவிரவாதிகள், அவர்களின் கண்களை கட்டி மண்டியிட செய்தனர்.

இதில் ஒரு நபர் அல்லாவை அவமதித்து கருத்துகளை வெளியிட்டதாகவும், மற்ற இரு நபர்கள் ஓரினச் சேர்க்கை உறவில் ஈடுபட்டதாகவும் தீவிரவாதி ஒருவன் ஒலிபெருக்கியின் மூலம் அங்குள்ள மக்களுக்கு அறிவித்துள்ளான்.

இதன்பின் பெரிய வாளை ஏந்தியபடி வந்த மற்றொரு தீவிரவாதி, அந்த மூன்று நபர்களையும் தலை துண்டித்து கொலை செய்துள்ளான்.

மேலும் எவரேனும் இது போன்ற குற்றங்களில் ஈடுபட்டால், அவர்களுக்கும் இதே கதி தான் என தீவிரவாதிகள் எச்சரித்துவிட்டு சென்றுள்ளனர்.

இதற்கிடையே ஒவ்வொவரையும் கொல்லும்போது, அங்கிருந்த மக்கள் கைதட்டி தீவிரவாதிகளை உற்சாகப்படுத்தியதாக தெரிய வருகின்றது. (இ-5)

## 25 வருடங்களாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டநபர் கைதானார்

5 கிலோ 14 கிராம் ஹெரொயின் போதைப் பொருளுடன் பிரபல போதைப் பொருள் வர்த்தகர் ஒருவர் நீர்கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் நேரடி மேற்பார்வையில், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கமல் சில்வா இந்த சுற்றிவளைப்பை வழிநடத்தியுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள போதைப்பொருள் வர்த்தகர் 1990 ஆம் ஆண்டில் இருந்து இந்த சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டு வருபவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இராசி பலன்

12.03.2015
மாசி 28, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
சஷ்டி முற்பகல் 7.33 மணிவரை
அனுஷம் முன்னிரவு 9.16 மணிவரை
இராகுகாலம் 1.52-3.22 மணிவரை
சுபநேரம் 7.52-9.22 மணிவரை

வளவன்

**மேடம்:** தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, தேக நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும், போசன சுகக் குறைவான நாள்.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும் நாள், ஆடம்பரப் பொருட்களில் அதிக விருப்பம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையும், தைரியமும் கூடும் நாள், வியாபார விருத்தியுண்டு, கடனில் ஒரு பகுதியைக் கொடுத்து தீர்க்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**கடகம்:** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும், பிரியமான சிலரின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் தீரும், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும்.

**துலாம்:** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், பக்க பலமாக நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும்.

**தனுசு:** தொழில் சம்பந்தமான பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**மகரம்:** மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், ஆரோக்கிமான நாள்.

**கும்பம்:** உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** தடைகள் விலகி தன வரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், தந்தை வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 160

## பயத்தை எதிர்கொள்ளல்

...எல்லா விடயத்திலும் தெளிவாகக் கொண்டு வாருங்கள் என்றுதான் சொல்கிறேன்.

ஒரு சின்னக் கதை....

ஒருமுறை ஒரு ஜென் துறவிக்கு மன்னரால் மரண தண்டனை கொடுக்கப்பட்டது. அடுத்த நாள் அந்த தண்டனை நிறைவேற்றப்படுவதாக இருந்தது. அந்தத் துறவியோ மௌனமாகவும் அமைதியாகவும் இருந்தார். அவருடைய சீடர்களில் ஒருவர், துறவியின் அமைதியால் அதிர்ச்சியடைந்து அவரிடம் கேட்டார். தாங்கள் வாழ்வதற்கு இன்னும் 24 மணி நேரம்தான் இருக்கிறது என்பதை உணர்கிறீர்களா? தங்களுக்கு பயமாக இல்லையா? துறவி அமைதியாக பதிலளித்தார். நான் வாழ்ந்துவிட்டேன். அதனால் எனக்கு மரணமடைவதைப் பற்றி அச்சமில்லை.

அவர் சொன்னதன் பொருள். நான் என் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் கணத்திற்கு கணம், வாழ்ந்துவிட்டேன். ஒவ்வொரு கணமும் எனக்கு மிகவும் நிறைவாக இருந்தது! நான் ஏன் அச்சப்பட வேண்டும்?

நீங்கள் உள்ளே ஆழமாகப் பார்த்தீர்களானால் நம்மில் பெரும்பாலானோர் மரணமடைவதைக் கண்டு அஞ்சவில்லை; நாம் வாழ்க்கையைப் போதுமான அளவு வாழவில்லையே என்றுதான் அஞ்சுகிறோம், என்பதை உணர்ந்து கொள்வீர்கள். நாம் ஒரு பொய்யான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறோம் என்றே அஞ்சுகிறோம். நாம் இந்த அனைத்தையும் பற்றி, ஒரு வகையான ஆழமான விளக்க முடியாத துக்கத்தை உணர்கிறோம். நாம் விரும்



பிய வண்ணம் வாழவில்லை என்று உணர்கிறோம். நாம் நிறைவடைந்ததாக எண்ணவில்லை- மரணத்தைப் பற்றிய பயம் அங்குதான் ஆரம்பிக்கிறது!

தொடர்ந்து மற்றவர்களுக்காக சமரசம் செய்துகொள்வதும், நமக்கு இயல்பற்ற ஒரு வாழ்க்கையை வாழ முயற்சிப்பதும் சமூகம் நமக்காக உருவாக்கிய அச்சுக்குள் பொருந்தயிருக்க முயற்சிப்பதும்... இவையனைத்தும் ஒரு நிறைவின்மையை நோக்கி இட்டுச் செல்லும்! மரணத்தைப் பற்றிய அச்சத்தில் பிரதிபலிப்பது வாழ்க்கையைப் பற்றிய அச்சமே.

நீங்கள் முழு திருப்தியுடன் முடிந்த அளவு ஆழமாக வாழ்ந்து விட்டீர்களானால் உங்களுக்கு மரணத்தைப் பற்றிய அச்சம் இருக்காது. அச்சமின்றி வாழுங்கள்.

உங்களால் முடிந்த அளவிற்கு ஆழமான தனித் தன்மையுடன் வாழுங்கள். உங்களுக்கு பரிபூரண திருப்தி வருமளவிற்கு வாழுங்கள். மரணத்தைப் பற்றிய உங்கள் அச்சம் போய்விடும்.

இன்னொரு விடயம்.... நீங்கள் எந்த ஒரு உணர்வையும் மனதில் தங்கவிடாமல், முழுமையாக உங்கள் உணர்ச்சிகளை மிகத் தெளிவுடன் முழுமையாக வாழ்ந்துவிட்டீர்களானால் உங்கள் குடும்பத்தினரையும் உறவினர்களையும் இழப்பதைப் பற்றி அஞ்ச மாட்டீர்கள்.

பாருங்கள்... ஒருவடைய இழப்பைப் பற்றி நீங்கள் அஞ்சுவதற்குக் காரணம், நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஏதோ ஒரு வழியில் அந்த உறவிற்கு சரியான நியாயத்தை வழங்கவில்லை என்று எண்ணுகிறீர்கள்; நீங்கள் முழுமையாக இல்லாததாக உணர்கிறீர்கள்; நீங்கள் அந்த உறவை விட்டுவிட இன்னும் தயாராகவில்லை. உடல் அளவிலான பிரிவு, அச்சத்தின் ஒரே ஒரு அம்சம் தான்; உண்மையான காரணம் உறவில் நிறைவின்மைதான்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி




### திருடினேன்....திருடினேன்....வெட்கப்படவில்லை!
### திருட்டு ராணி சொல்லும் கதை

பிரித்தானியாவில் பெண்மணி ஒருவர் கடுமையாக திருடி ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார். **கிம்பெர்ரி** என்ற பெண்மணி தனது வாழ்க்கை கதையை ஊடகங்களில் தெரிவித்ததன் மூலம், தற்போது மக்கள் மத்தியில் பிரபலமாகியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது, எனக்கு 9 வயது இருக்கும்போது காலை தூங்கி எழுந்து மாடிப்படியில் இறங்கி வந்தேன். கீழே என் அம்மா கையில் ஒரு முட்டையை வைத்துக்கொண்டு அழுதுகொண்டிருந்தாள். ஏன் அழுகிறீர்கள்? என்று கேட்டதற்கு நம் வீட்டில் சமைப்பதற்கு இருந்த கடைசி முட்டையும் காலியாகப் போகிறது என்றார்.

உடனே அருகிலிருந்த சூப்பர் மார்க்கெட்டிற்கு வேகமாக ஓடினேன். வெறி பிடித்ததைப் போல் அங்கிருந்த உணவுப் பொருள்களை அள்ளிக் கொண்டு வீட்டிற்கு ஓடி வந்துவிட்டேன்.




அன்றுமுதல் சூப்பர் மார்க்கெட் மற்றும் மால்களில் லெதர் கோட், பேஷன் அழகுப் பொருட்கள், முதல் மீன் தொட்டி வரை திருடி பாதி விலைக்கு விற்று வருகிறேன்.

தற்போது எனக்கு 54 வயதாகிறது. 44 வருடங்களாக திருட்டில் ஈடுபட்டு எனது திறமையின் மூலமாக 2 மில்லியன் பவுண்ட் வருமானம் ஈட்டியுள்ளேன்.

இதில் எனது ஆறு குழந்தைகளையும் ஈடுபடுத்தியுள்ளேன், 50 இற்கும் மேற்பட்ட முறை திருடும் போது பிடிபட்டு 7 முறைக்கு மேல் சிறை சென்றுள்ளேன். இதை சொல்வதற்கு நான் வருத்தப்படவில்லை, பெருமைப்படுகிறேன். எல்லோரும் கனவில் மட்டுமே வாழக்கூடிய பணக்கார வாழ்க்கையை நான் நிஜத்தில் வாழ்ந்திருக்கிறேன்.

40 வருடங்களுக்கும் மேலாக ஆடம்பரமாக வாழ்ந்திருக்கிறேன். வாரத்தில் 4 நாட்கள் ஐந்து நட்சத்திர விடுதியில் சாப்பிடுவேன். எங்கு போனாலும் டாக்சியில்தான் போவேன்.

தற்போது, பாரிசில் வசிக்கும் 14 வயதான தனது கடைசி மகளுக்காக கடந்த சில வாரங்களாக எதையும் திருடவில்லை என்று கூறியுள்ளார்.




## சிக்கன் மக்ரோனி

**தே.பொருட்கள்:**

எலும்பில்லாத சிக்கன் - 1/2 கிலோ

மக்ரோனி - 150 கிராம்

வெங்காயம் - 2

தக்காளி - 1

கறிவேப்பிலை - 1 கொத்து

பச்சைமிளகாய் - 2

தயிர் - 2 டேபிள் ஸ்பூன்

மஞ்சள் தூள் - 1/4 டீஸ்பூன்

மிளகாய் தூள் - 1/2 டீஸ்பூன்

சீரகத்தூள் - 1/2 டீஸ்பூன்



இஞ்சி, பூண்டு விழுது - 3 டீஸ்பூன், பட்டை, ஏலக்காய், கிராம்பு (வாசனைத் தூள்) - 1/2 டீஸ்பூன், சிக்கன் மசாலாத் தூள் - 1 டீஸ்பூன், தனியா தூள் - 1/2 டீஸ்பூன, உப்பு - தேவைக்கு, எண்ணெய் - 3 டேபிள் ஸ்பூன், நெய் - 4 டீஸ்பூன்

**செய்முறை:**

மக்ரோனியை உப்பு சேர்த்து அவித்து தண்ணீரை வடித்துக் கொள்ளவும். பாத்திரத்தில் நெய் மற்றும் எண்ணெய் சேர்த்து பட்டை, ஏலக்காய், கிராம்பு சேர்க்கவும். பின்னர் மிளகாய், கறிவேப்பிலை, வெங்காயம் சேர்த்து பொன்னிறமாகும் வரை வதக்கவும். பின் அதில் இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து பச்சை வாசனை போக கிளறவும். அதில் தக்காளி, பின்னர் எல்லாத் தூள்களையும் தயிர் சேர்த்து வதக்கவும். எண்ணெய் மேலே வந்ததும் சிக்கனை சேர்த்து நன்கு வேகவிடவும். சிக்கன் வெந்ததும் வேக வைத்த மக்ரோனியை சேர்த்து மசாலாவில் உள்ள நீர் வற்ற கிளறி பின் இறக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்கரி முறைகேடு வழக்கில் சிக்கிய மன்மோகன்சிங்கிற்கு அழைப்பாணை



**முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு நிலக்கரி சுரங்க முறைகேடு தொடர்பான வழக்கில் சி.பி.ஐ. நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.**

முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் நிலக்கரித்துறை அமைச்சராக இருந்த 2005 ஆம் ஆண்டு குமார் மங்கலம் பிர்லாவுக்கு சொந்தமான ஹிண்டால்கோ நிறுவனத்துக்கு ஒரிஷாவின் தலபிரா நிலக்கரி சுரங்கம் முறைகேடாக ஒதுக்கீடு செய்யப்பட்டதாக வழக்கு தொடரப்பட்டது.

மன்மோகன்சிங்குக்கு குமார் மங்கலம் பிர்லா 2 கடிதங்கள் மூலம் கேட்டுக் கொண்டதால் இந்த ஒதுக்கீடு நடந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்த வழக்கில் மன்மோகன் சிங்கிடம் விசாரணை நடத்த கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி சி.பி.ஐ. நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம் மன்மோகன்சிங்கிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வாக்குமூலமும் பெற்றனர்.

இந்நிலையில் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மன்மோகன்சிங், தொழிலதிபர் குமார்மங்கலம் பிர்லா, முன்னாள் நிலக்கரித் துறை செயலாளர் பி.சி. பாரக் உள்ளிட்டோர், ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று டில்லி சி.பி.ஐ. நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது. (இ-5)

பாரதச் செய்தி

## சி.பி.ஐ. நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டிருப்பது வருத்தமளிக்கிறது

நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டு வழக்கில் தனக்கு நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டிருப்பது வருத்தமளிப்பதாக முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் கவலையுடன் தெரிவித்துள்ளார். நிலக்கரி சுரங்க முறைகேடு வழக்கில் உண்மையே வெல்லும் என்றும் மன்மோகன் சிங் கூறினார். நாடாளுமன்ற வளாகத்துக்கு வெளியே நேற்று செய்தியாளர்களை சந்தித்த மன்மோகன்சிங் இவ்வாறு கூறியுள்ளார்.

நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டு முறைகேடு வழக்கில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், தொழிலதிபர் குமாரமங்கலம் பிர்லா உள்ளிட்ட 4 பேர் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதி மன்றம் அனுப்பியுள்ள அழைப்பாணையில், நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டு வழக்கில் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி பதிலளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடுகள் குறித்து டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் விசாரித்து வருகிறது. அப்போது நில்க்கரி சுரங்கத் துறை அமைச்சகப் பொறுப்பை கவனித்தவர் என்ற முறையில் மன்மோகன் சிங்குக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)





சீசெல்ஸ் சென்றுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோ்டிக்கு நேற்று முன்தினம் அந்நாட்டு விமான நிலையத்தில் வைத்து சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்ட அதேவேளை சீசெல்ஸ் நாட்டு ஜனாதிபதி ஜேம்ஸ் மைக்கேலை பிரதமர் மோடி நேற்று சந்தித்து பேசியுள்ளார்.

# பிரதமர் மோடியின் இலங்கைப் பயணம் குறித்து தமிழகத்திலுள்ள ஈழ உணர்வாளர்களின் கருத்து

இந்திய பிரதமர் நரேந்திரமோடி நாளை அதிகார பூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ள நிலையில் மோடியின் இலங்கை வருகை தொடர்பில் தமிழ் நாட்டைச்சேர்ந்த ஈழ உணர்வாளர்கள் பலரும் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

**உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்:**



மோடி யாழ்ப்பாணம் செல்வதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அவர் யாழ்ப்பாணம் செல்வதாக இருந்தால், அல்லது ஈழத்தின் வேறு எந்தப் பகுதிக்கும் செல்வதாக இருந்தாலும் அவர் தமிழ்மக்களை நேரில் சந்தித்து சுதந்திரமாக உரையாடும் வாய்ப்பு கிடைக்குமா? என்பது தான் எங்களுக்கு உள்ள மிகப்பெரிய கேள்வி? அப்படிக் கிடைத்தால் மட்டுமே அவரின் யாழ்ப்பாணப் பயணத்தில் ஏதாவது பயன் இருக் கும் என நான் கருதுகிறேன் அப்படி நேரில் சந்தித்தால் மக்கள் தங்களின் உள்ளக் குமுறல்களை அள்ளிக் கொட்டுகின்ற வாய்ப்பாக அது இருக்கும். போரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களை சும்மா எட்டிப் பார்த்துவிட்டு வருவதால் எந்தப் பயனும் இல்லை என்று நான் கருதுகின்றேன்.

**தமிழர் தேசிய முன்னணி தலைவர் பழ.நெடுமாறன்:**

மோடியின் இலங்கை விஜயம் தொடர்பாக ஏராளமான எதிர்பார்ப்புக்கள் எம் மிடம் உள்ளன. அவர் இலங்கை செல்வதால் தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்ற



நம்பிக்கை இல்லை. இருப் பினும் மீன்பிடி உரிமை, ஈழத்தமிழர்களின் அடிப்படை உரிமையாவது பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் இலங்கைக்கு போய் விட்டு வந்த பின்னர் தான் அவரது பயணம் தொடர்பாக முழுமை யாக கருத்து தெரிவிக்க முடியும்.

**திராவிடர் விடுதலை கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி:**

மோடியின் இலங்கைப் பயணத்தால் எந்த விதமான பயனும் கிடைக்கும் என்று நாங்கள் கருதவில்லை. இங்கே இருந்து ஈழத்தமிழர்களுக் காக எதுவும் செய்யாதவர் அங்கே போய் மட்டும் என்ன செய்து விடப் போகிறார். அதன் காரணமாக எங்களின் எதிர் ப்பைத் தெரிவிக்கும் முகமாக இங்கே இருக்கின்ற அமைப்புக்கள் இணைந்து இம் மாதம் 7 ஆம் திகதி சென்னையில் ஆர்ப்பாட்டத்தை நடத்தினோம். இதன் முழக்கங்களாக, இந்திய அரசு இலங்கையைப் புறக்கணி. மோடியே இலங்கைப் பயணத்தை இரத்துச் செய், வடக்கு மாகாண சபை தீர்மானத்தை அங்கீகரித்து இந்திய நாடாளுமன்றில் இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்று. ஆகவே, மோடியின் பயணத்துக்கு எல்லோரும் இணைந்து எம் எதிர்ப்பை தெரிவிக்கின்றோம்.

**தமிழ் தேசிய விடுதலை இயக்கத் தலைவர் தோழர் தியாகு:**

இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகி இருப்பதனை ஒரு மாற்றம் என்று நாம் அங்கீகரிக்கவில்லை. இதனை மாற் றம் என்று கருதுகின்றவர்கள் தான் ராஜபக்ஷவுக்கு ஒரு அளவு கோலையும், மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒரு அளவுகோலையும் பின்பற்றுவார்கள். ஆகவே, இனக்கொலை செய்த அரசாங்கம் தமிழர்களுக்கு நீதி கிடைத்து விடும், அதனை தடுப்பதில் முனைப்பாக இருக்கின்றது. இந்த விடயத்தில் மகிந்த ராஜபக்ஷவுக்கும், மைத்திரிபால சிறிசேனவுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேற விடாமல் தடுப்பதிலும் வேறுபாடு இல்லை. இலங்கையைப் புறக்கணிப்போம் என்கிற எங்களுடைய முழக்கம் தொடர்கின்றது. மோடி இலங்கைக்கு செல்லக்கூடாது என்பது தான் எங்களின் கோரிக்கை.



அவர்கள் சம்பூரை பற்றி பேசுவார்கள். பெருந்தொழில் முதலீடு தொடர்பில் பேசுவார்கள். இதில் இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது வெறும் நாடகத்துக்கு தான் பயன்படும். மோடி இலங்கை செல்லக் கூடாது இது தான் எங்களின் ஒற்றை முழக்கம். மோடியை புறக்கணிப்போம். மோடி இலங்கை செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போம்.

**தமிழ்நாடு மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கூட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பிரபாகரன்:**

1987 இல் ராஜீவ்காந்தி இலங்கைக்கு சென்றதன் பிறகு, மோடி அறிவித்திருக்கின்ற இலங்கைப் பயணத்தை சாதாரண விடயமாக நாங்கள் பார்க்க முடியாது. இலங்கையில் நடந்த இனப் படுகொலையில் ஒரு பங்கு வகித்த இந்தியாவினுடைய பிரதமர் இலங்கைக்கு போவது என்பது அங்கு இடம்பெற்ற இனப்படுகொலையை மூடி மறைப்பதற்கான நடவடிக்கையாகவும், அங்கே இருக்கிற தமிழீழக் கோரிக்கையை மட்டுப்படுத்துகின்ற ஒரு செயலாகவும் தான் இதனைப் பார்க்க முடியும். சிங்கள அரசினுடைய ஆட்சிமாற்றம் என்பது மகிந்த ராஜபக்ஷ போய் மைத்திரி வந்தால் கூட இது சிங்களப் பேரினவாதத்தின் தலைமை தான் மாறியிருக்கின்றதே ஒழிய அங்கே உள்ள தமிழர் தரப்புக்கு இதனால் எந்தவித நீதியும் கிடைத்துவிடப் போவதில்லை. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆந்தைகளின் மொழி

அன்று காலை, அக்பரைப் பார்த்த உடனேயே அவர் அன்று என்ன செய்ய நினைக்கிறார் என்று பீர்பாலுக்குத் தெரிந்துவிட்டது.

குதிரைச்சவாரிக்கேற்ற உடையை அவர் அணிந்திருந்தார். வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் வேறு எங்கும் பார்க்காமல் ஆயுதங்களின் மீதே மிகவும் கவனமாக இருந்தார்.

அக்பர் அன்று வேட்டையாடத் திட்டமிட்டிருக்கிறார் என்று பீர்பால் புரிந்து கொண்டார். வேட்டையாடுவது அக்பருக்கு மிகவும் பிடித்த பொழுதுபோக்கு!

ஆனால் அவர் வேட்டையாடுவது பீர்பாலுக்குப் பிடிக்கவில்லை. அதை எப்படித் தடைசெய்வது என்பதைப் பற்றியே அவர் சிந்திப்பார்.

சற்று நேரங்கழித்துத் தன் கவனத்தை ஆயுதங்களிலிருந்து விடுத்து, பீர்பாலின் மீது செலுத்திய அக்பர் “நான் இன்று என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?" என்று பீர்பாலைப் பார்த்துக் கேட்டதும், “மற்றவர்களின் மனதிலுள்ளதை அறிந்து கொள்ளும் திறமை எனக்குக் கிடையாது” என்றார் பீர்பால்.

“பொய் சொல்லாதே, பீர்பால்! நான் என்ன செய்யப் போகிறேன் என்று உனக்கு நன்றாகத் தெரியும். வேண்டுமென்றே தெரியாததுபோல் நடிக்கிறாய். மிதமான குளிர்வீதம் இந்தக் காலைப் பொழுதில் வேட்டையாடச் சென்றால் மிகவும் நன்றாக இருக்கும் என்பது என் கருத்து! உன் கருத்து என்



னவோ?" என்றார். “தங்களின் கருத்தே என்னுடைய கருத்தும்!" என்றார் பீர்பால். "அப்படியானால், நீயும் என்னுடன் வேட்டையாட வர வேணடும்!" என்றார் அக்பர்.

“தங்கள் கட்டளைப்படி நடக்க சித்தமாக இருக்கிறேன்" என்று பணிவுடன் பீர்பால் பதிலளித்தார். “பீர்பால்! நீ உடனிருந்தால் களைப்பே தெரிவதில்லை. நாவில் உனக்கு இத்தனை வலிமையைக் கொடுத்த இறைவன், உடலிலும் கொடுத்து இருக்கிறாரா என்பதையும் அறிய ஆசைப்படுகிறேன்" என்றார். “ஆகட்டும் பிரபு!" என்றார் பீர்பால்.

சற்று நேரத்திற்குப்பின், அக்பர் ஒரு பெரிய படை வீரர்களின் அணியுடன் காட்டை நோக்கிப் புறப்பட்டார். பீர்பாலும் அக்பருடன் சென்றார். காட்டினுள் நுழைந்தபிறகு,



அக்பரின் வீரர்கள் தாரை, தப்பட்டை ஆகியவற்றை உரக்க ஒலித்துக் காடே அதிரச் செய்தனர். அந்த சத்தத்தைக் கேட்டு காட்டு மிருகங்கள் மிரண்டு அங்குமிங்கும் சிதறி ஓட, அக்பரும், மற்றவர்களும் அவற்றைத் துரத்திச் சென்று, கொன்று குவித்தனர்.

திடீரென ஒரு புலி புதரிலிருந்து சீறிப் பாய்ந்து அவர்களை நோக்கி வந்தது. தாரை, தப்பட்டைகளின் ஒலியினால் எரிச்சல் அடைந்த புலி அவர்கள் மீது பாய முனைந்தபோது, அக்பர் தன் கையில் இருந்த ஈட்டியை அதன்மீது எறிய, பயங்கரமாக உறுமிக் கொண்டே புலி மண்ணில் சாய்ந்தது. புலி இறந்து விட்டதால் அக்பர் உற்சாகமுற்றுக் கையை உயர்த்திக் கூச்சலிட, சுற்றியிருந்த வீரர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

மாலைக்குள் அக்பர் மற்றொரு புலியையும் வீரத்துடன் வேட்டையாடிக் கொன்றார். பிறகு அனைவரும் சென்று ஓய்வு எடுக்க, அக்பர் தனியாக அமர்ந்து பீர்பாலுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

மாலை மங்கிய நேரம்! பகல் முழுவதும் வானில் பறந்து திரிந்து கொண்டிருந்த பறவைகள் தங்கள்



கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டு இருந்தன. அவற்றின் இனிமையான குரல்களை இருவரும் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அமர்ந்து இருந்த இடத்திற்கு அருகில் இருந்த ஒரு மரத்தில் இரு ஆந்தைகள் பறந்து வந்து உட்கார்ந்து ஒலியெழுப்பத் தொடங்கின.

அவற்றின் ஒலியை வெகு நேரம் உன்னிப்பாகக் கவனித்த அக்பர், “இந்த ஆந்தைகளின் மொழி நமக்குப் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்றார்.

“பிரபு! அவற்றின் மொழி எனக்குத் தெரியும்!" என்றார் பீர்பால்.

“அப்படியா? பிறகு ஏன் சும்மாயிருக்கிறாய்? அவை என்ன பேசுகின்றன என்று உடனே சொல்!" என்றார் அக்பர். “பிரபு! அவையிரண்டில் ஒன்று மணப்பெண்ணின் தந்தை! மற்றொன்று பிள்ளையின் தந்தை! அவை வரதட்சிணையைப் பற்றி விவாதம் செய்துகொண்டு இருக்கின்றன. பிள்ளையின் தந்தை மிருகங்களே இல்லாத நாற்பது காடுகள் சீர்வரிசையாகத் தர வேணடும் எனக் கேட்கிறது. பெண்ணின் தந்தை தன்னால் இருபது காடுகள் மட்டுமே தரமுடியும் என்று சொல்கிறது," என்றார் பீர்பால்.

தொடர்ந்து, "பெண்ணின் தந்தையான அந்த ஆந்தை மேலும் தனக்கு ஆறு வாரகாலம் அவகாசம் தந்தால், மீதி இருபது காடுகளையும் ஏற்பாடு செய்ய முடியும் என்கிறது," என்றார். “இது என்ன உளறல்? மிருகங்களே இல்லாத காடுகள் அதற்கு எங்கிருந்து கிடைக்கும்? இருபது காடுகள் தருவதாக அது எப்படி ஒப்புக்கொண்டது?" என்றார் அக்பர்.

“அது உளறவில்லை! சரியாகத்தான் சொல்கிறது. நீங்கள் இருக்கும் தைரியத்தில்தான் அது அப்படிப் பேசுகிறது!" என்றார் பீர்பால். "சரிதான்! ஆந்தைதான் உளறுகிறது என்று நினைத்தால் நீயும் உளறுகிறாயே!" என்றார் அக்பர். “நான் உளறவில்லை, பிரபு! ஆந்தையும் உளறவில்லை! நீங்கள் ஒருமுறை வேட்டையாட வந்தாலே, காட்டில் உள்ள மிருகங்கள் அனைத்தும் கொல்லப்பட்டு விடுகிறது.

அதுபோல் இதுவரை நீங்கள் இருபது காடுகளை மிருகங்களேயில்லாமல் செய்துவிட்டீர்கள். இன்னும் அடுத்த ஆறு வாரத்தில் நீங்கள் இருபது முறை வேட்டையாடினால், மீதியுள்ள இருபது காடுகளும் காலியாகிவிடும்! அந்த தைரியத்தில்தான் அந்த ஆந்தை அவ்வாறு கூறுகிறது!" என்றார் பீர்பால்.

பளீரென முகத்தில் அறைந்தது போல் இருந்த பீர்பாலின் விளக்கம் அக்பரை மௌனமாக்கி விட்டது. தன் செய்கைக்கு முதன்முதலாக வெட்கித் தலை குனிந்த அக்பர், “பீர்பால்! என் கண்களை நீ இன்று திறந்துவிட்டாய்! என்னுடைய மகிழ்ச்சிக்காக காட்டில் வாழும் மிருகங்களைக் கொன்று குவிப்பது ஈனமான செயல் என்று புரிந்து கொண்டேன். இன்றுமுதல் வேட்டையாடுவதை நிறுத்தி விடப் போகிறேன்" என்றார் அக்பர்.

பீர்பாலுக்குத் தன் செவிகளையே நம்ப முடியவில்லை. இத்தனை எளிதாக அக்பரின் மனம் மாறும் என்று அவர் நினைக்கவில்லை. “பீர்பால்! என்ன அப்படிப் பார்க்கிறாய்? நான் இப்போது சொன்னதைக் கேட்டு அந்த ஆந்தை என்ன சொல்கிறது என்று எனக்குச் சொல்!" என்றார் அக்பர்.

"சக்கரவர்த்தியின் மனம் மாறி விட்டதால், இனி என்னால் மிருகங்கள் அற்ற காடுகளை வரதட்சிணையாக அளிக்க முடியாது என்று அது கூறுகிறது!" என்று பீர்பால் கூறவும், அக்பர் பலமாகச் சிரித்தார்.

## 03.2015 12 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1610 -ஜேக்கப் டி லா கார்டி தலைமையில் சுவீடன் படைகள் மாஸ்கோவைக் கைப்பற்றின.
- 1664 - நியூ ஜேர்சி பிரித்தானியாவின் குடியேற்ற நாடானது.
- 1879 - ஆங்கிலேய படைகள்-சூலு போர்: நூற்றுக்கும் அதிகமான ஆங்கிலப் படைகள் சூலுக்களினால் சுற்றிவளைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.
- 1894 - முதற் தடவையாக கொக்கா-கோலா மென்பானம் கண்ணாடிப் புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.
- 1913 - ஆஸ்திரேலியாவின் வருங்கால தலைநகர் அதிகாரபூர்வமாக கான்பரா எனப் பெயரிடப்பட்டது. கான்பரா அமைக்கப்படும் வரையில்- 1927 வ்ரையில் மெல்பேர்ண் தற்காலிகத் தலைநகராக இருந்தது.
- 1918 - 215 ஆண்டுகளாக ரஷ்யாவின் தலைநகராக இருந்த சென் பீட்டர்ஸ்பேர்க் தலைநகர் அந்தஸ்து மாற்றப்பட்டு மொஸ்கோ தலைநகராக்கப்பட்டது.
- 1930 - மகாத்மா காந்தி பிரித்தானிய ஆட்சியாளரின் உப்பு ஆதிக்கத்துக்கு எதிராக 200 மைல் நீள் தண்டி யாத்திரையை ஆரம்பித்தார்.
- 1938 - ஜேர்மனியப் படைகள் ஆஸ்திரியாவை ஆக்கிரமித்தன. அடுத்த நாள் இணைப்பு அறிவிக்கப்பட்டது.
- 1940 - குளிர் காலப் போர்: பின்லாந்து மொஸ்கோவுடன் அமைதி உடன்பாட்டிற்கு வந்தது. கரேலியாப் பகுதி முழுவதும் சோவியத் ஒன்றியம் பெற்றுக் கொண்டது. பின்லாந்துப் படைகளும் மீதமிருந்த மக்களும் உடனடியாக வெளியேறினர்.
- 1954 - சாகித்ய அகாதெமி இந்திய அரசினால் தொடங்கப்பட்டது.
- 1967 - சுகார்ட்டோ இந்தோனசியாவின் ஜனாதிபதியானார்.
- 1968 - மொரீசியஸ் பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது
- 1992 - மொரீசியஸ் பொதுநலவாய அமைப்பினுள் குடியரசானது.
- 2003 - செர்பியாவின் பிரதமர் சொரான் டின்டிச் கொல்லப்பட்டார்.
- 2006 - தென்னாபிரிக்கா ஒரு நாள் சர்வதேச துடுப்பாட்டமொன்றில் 438/9 ஓட்டங்களைப் பெற்று ஆஸ்திரேலியாவை (434) வென்று சாதனை படைத்தது.
- 2007 - கலிபோர்னியாவில் ஏற்பட்ட பெரும் காட்டுத் தீயினால் 2000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு எரிந்து நாசமடைந்தன.

### பிறப்புக்கள்

- 1925 - லியோ எசக்கி, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியர்

### இறப்புக்கள்

- 1991 - றாக்னர் கிறனிற், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

**குழந்தைகள்**

இந்தக் காட்சியின் மூலம், தமிழ்நாட்டுக் குழந்தைகளின் மனதை ரஜினி வெகுவாகக் கவர்ந்தார். எங்கு போனாலும், "ரஜினி அங்கிள், ரஜினி அங்கிள்" என்று குழந்தைகள் கூடிவிடுவார்கள். ஒருநாள் மூணாறில் படப்பிடிப்பை முடித்துவிட்டு, ரஜினியும், படப்பிடிப்புக் குழுவினரும் திரும்பிக் கொண்டிருந்தோம். ஒரு இடத்தில் ரோட்டில் சுமார் நூறு குழந்தைகள் கூடி நின்றார்கள். அனைவரும் பள்ளிக்கூட சீருடை அணிந்திருந்தார்கள்.

"ரஜினி அங்கிள் இந்த வழியாக வருவதாகக் கேள்விப்பட்டோம். அவரைப் பார்த்துவிட்டுப் போக, பள்ளிக்கூடத்திலிருந்து நேராக இங்கே வந்திருக்கிறோம்" என்றார்கள்.

அவர்களுடன் ரஜினி அன்புடன் பழகினார். ஆட்டோகிராப் போட்டுக் கொடுத்தார். "நன்றாகப் படிக்க வேண்டும்" என்று முத்தம் கொடுத்து வாழ்த்தினார்.

இவ்வாறு எஸ்.பி.முத்துராமன் கூறினார். 20-7-1989 அன்று வெளிவந்த **"ராஜா சின்ன ரோஜா"** 7 தியேட்டர்களில் நூறு நாட்கள் ஓடியது. அதன்பின் பகல்காட்சியாக தொடர்ந்து ஓடி வெள்ளி விழா கொண்டாடியது. இந்தப்படம், தெலுங்கில் மொழி மாற்றம் செய்யப்பட்டு, அங்கும் வெற்றிகரமாக ஓடியது.

**சிவா**

கே.பாலசந்தரின் கவிதாலயா தயாரித்த படம் **"சிவா."** இதில் ரஜினிகாந்த், சோபனா நடித்தனர்.



ரஜினி- கௌதமி படம் பணக்காரன்.

வசனத்தை கண்ணன் எழுத, அமீர்ஜான் இயக்கினார். இசை: இளையராஜா. 05-05-1989 இல் வெளிவந்த இப்படம் 75 நாள் ஓடியது. ஆர்.எம்.வீரப்பனின் சத்யா மூவிஸ் அதன் வெள்ளி விழா ஆண்டையொட்டி, ரஜினியை வைத்து **"பணக்காரன்"** என்ற படத்தைத் தயாரித்தது. அது 25 வாரங்களுக்கு மேல் ஓடி, வெள்ளி விழா கொண்டாடியது. "லாவரிஸ" என்ற இந்திப்படம், "நாதேசம்" என்ற பெயரில் தெலுங்கில் தயாரிக்கப்பட்டது. அந்த கதையை வைத்து தமிழில் தயாரிக்கப்பட்ட படம் **"பணக்காரன்."** இந்தப் படத்துக்கு வசனம் எழுதி, டைரக்ட் செய்தவர் பி.வாசு. ரஜினியுடன், கௌதமி இணைந்து நடித்தார்.

**கதை**

திருப்பங்கள் நிறைந்த குடும்பக் கதை "பணக்காரன்"

கோடீஸ்வரரான விஜயகுமார், ஏழை சுமித்ராவை ஏமாற்றி திருமணம் செய்து கொள்கிறார். தனது தேவைகள் தீர்ந்தவுடன், மனைவியை எச்சிலையாகக் கருதி நிராகரித்துவிடுகிறார்.

கர்ப்பிணியான சுமித்ராவுக்கு ஆண் குழந்தை பிறக்கிறது. மாமா ராதாரவி, தாயார் சுமித்ரா ஆகியோரின் வாழ்க்கைப் போராட்டத்தில் குழந்தை ஒரு ரவுடியிடம் வந்து சேர்கிறது.

சிறுவன் வாலிபனாகிறான். வேலை தேடும்போது தனது அப்பா யார் என்பது தெரிகிறது. அவர் கோடீஸ்வரர். இப்போது அவருக்கு இன்னொரு குடும்பம், குழந்தைகள் இருக்கிறார்கள்.

என்றாலும் தன் தாயார் மீதான களங்கம் துடைக்கப்பட முயற்சிகள் மேற்கொள்கிறான். பல்வேறு அவமானங்கள் அடைகிறான். ஆனாலும் எடுத்துக்கொண்ட முயற்சியில் வென்று, கோடீஸ்வரரான விஜயகுமாருடன் தனது தாயாரை மறுபடியும் இணைத்து வைக்கிறான்.

உறவுகள் புனிதமானவை. அதை "பணம்" என்ற போர்வைக்குள் போட்டு புதைத்து விடக்கூடாது என்பதை விளக்கிய படம்.

**பெண் வேடம்**

அனாதை இளைஞனாக - தாயின அவமானத்தை துடைக்கப் போராடும் இளைஞனாக ரஜினி அற்புதமாக நடித்தார்.

ஒரு கட்டத்தில் பெண் வேடத்தில் தோன்றி அசத்தினார். ரஜினிக்கு ஜோடியாக நடித்தவர் கௌதமி. ரஜினி - கௌதமி கடிகார முட்களுடன் இணைந்து பாடும், **"இரண்டும் ஒன்றோடு ஒன்று சேர்ந்தது"** என்ற பாடல் புதுமையாக படமாக்கப்பட்டு ரசிகர்களை கவர்ந்தது.

தனது நிலையை எண்ணிரஜினி பாடுவதாக வரும், **"நான் உள்ளுககுள்ள சக்கரவர்த்தி ஆனா உண்மையிலே மெழுகுவர்த்தி"** என்ற பாடல் காட்சியில் ரஜினியின் உருக்கமான நடிப்பு நெகிழ வைத் தது. படத்தில் வரும **"நூறு வருடம் இந்த மாப்பிள ளையும் பொண்ணுமதான் பேரு விளங்க இங்கே வாழணும்"** என்ற பாடல், திருமண வீடுகளில் நிரந்தரமாகிவிட்டது.

புவனா ஒரு கேள்விக்குறி படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்த சுமித்ரா, இந்தப் படத்தில் ரஜினிக்கு அம்மாவாக நடித்திருந்தார். 1990 பொங்கலுக்கு வெளிவந்த இந்தப் படம், 25 வாரங்கள் ஓடி, வெள்ளி விழா கொண்டாடியது.

*(தொடரும்)*

# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- 98

...வாழ்ந்த பொண்ணு வாழா வெட்டியா இருக்கா. வளந்த பொண்ணு வீட்ல இருக்கா.

நான் வைரமோதிரம் போடுவேனா? வந்தவளக் கரைசேர்ப்பனா?

ரெண்டும் ஒரே வேலையாப் போச்சுன்னா? என்ன சொல்றீக மாப்ள.

எளையவளயும் கட்டிட்டு மூத்தவளயும் கூட்டிட்டுப் போயிடறேங்கிறேன்.

வைர மோதிரம் மட்டும் போட்டு விட்ருங்க.

மூத்தவளக் கரசேத்ததாவும் இருக்கும்.

எளையவள எனக்கொரு பிள்ளப் பெத்துக் குடுத்ததாவும் இருக்கும் என்ன நான் சொல்றது.

மூணு பேருக்கும் நெஞ்சுக்கூட்டுச் சத்தம் நின்னு போச்சு.

மூச்சுப் பேச்சும் நின்னு போச்சு.

கத்துற காக்கா உறுமுற நாயு ஒலக்கைச் சத்தம் சகலமும் நின்னு போச்சு.

அவன் எலும்பு கடிக்கிற சத்தம் மட்டும் கேட்டுக்கிட்டேயிருக்கு.

நகச்சுத்து வந்தாலும் வீக்கம் வெரலுக்குத்தான..

கனகாம்பரம்மும் பவளமும் நெஞ்சுக்கூடு ஒடஞ்சு வந்தா அடை மழையா அழுகவும் கண்ணுமுழி கலங்கிப் போனா கருவாச்சி.

ஒடைஞ்ச மனச ஒண்ணு சேத்துக்கிட்டு அக்கா தங்கச்சிக ரெண்டு பேருக்கும் நல்ல வார்த்தையா நாலு வார்த்த சொல்றா.

மூத்தவளுக்குப் பிள்ளையில்லை. இளையவளக் கட்டிக் குடுன்னு கேக்குறாரு அந்த ஆளு.

பொண்ணுக்கேக்குற ஆள ரெண்டு மூணு கேள்வி கேளுங்கடி.

வருசம் நாலு தான் ஆச்சு.

அதுக்குள்ள மலடின்னா எப்படி கல்யாணமாகிப் பத்து வருசம் கழிச்சு பிள்ளையெடுக்கிறவ இருக்காளா இல்லையா இன்னொண்ணு கேக்கணும்.

பிள்ளையில்லாததுக்குக் காரணம் மலடியா மலடனா? அதை எதை வச்சு அளக்குறது.

சரி ஒன் புருசன் விரியக்காரன்னே



வக்கக்க கட்டிட்டுப் போன ஒந் தங்கச்சிக்கு பிள்ளையில்லாமப் போச்சுன்னா அதுக்குமேல கட்டிக்குடுக்க ஒனக்குத் தங்கச்சியில்ல.

மூணாவது பொண்டாட்டி கட்ட வேற யாரு தங்கச்சியத் தேடுவான்.

இருக்கட்டும் பொண்டாட்டி ரெண்டுன்னு ஆன பெறகு பொட்டைப்பய அவன்தான்னு முடிவாகிப் போச்சுன்னு வச்சுக்க. ஒரு மலட்டுப் பயலுக்கு ரெண்டு பொண்டாட்டின்னு ஆகிப் போகுமே நியாயமா.

மூக்குல குத்துற மாதிரி இன்னொரு கேள்வியும் கேளுங்கடி.

தண்டியும் தரமும் கொப்பும் குலையுமா அக்கா இருக்க ஏன் கேட்டு வாரன் எளையவள வா்ரிசுக்கா அவ வயசுக்கா இன்னொரு வைர மோதிரத்துக்கா.

கருவாச்சி பேசப் பேச அவ வாயையே பாத்து வாயடைச்சு நிக்கிறாக கனகாம்பரமும் பவளமும்.

ஏண்டி கருவாச்சி எங்கிட்டிருந்துடி வந்துச்சு இத்தந்தண்டி அறிவு.

பல்லாங்குழியில புளிய வெதைய எண்ணிப் போடக்கூடப் புத்தியில்லாம இருந்தவ -சொட்டாங்கல் வெளையாடறப்ப ஒத்தைக் கல்லை ஒழுங்கா எடுத்துட்டு ரெட்டைக்கல் எடுக்கக் குட்டிக்காரணம் போடுறவ- அயிர மீனப் புடிக்கப்போறேன்னு போயி அரட்டாவளய அள்ளிட்டு வந்து ஆத்தாக்கிட்ட நொக்குப் பெத்தவ- என்னைக்கிடி வந்துச்சு ஒனக்கு இம்புட்டுப்புத்தி?

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸை உளவுபார்த்தவர் நெல்லியடியில் கைதானார்!

(கரணவாய்)

**சட்ட விரோதமாக மணல் ஏற்றி விற்பனை செய்ப வர்களுக்கு, பொலிஸார் பொலிஸ் நிலையத்திலி ருந்து புறப்படுகின்றபோது கைத்தொலைபேசி மூலம் தகவல்களை வழங்கி வந்த இளைஞர் ஒருவர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.**

சம்பவம் பற்றிமேலும்தெரியவருவதாவது,

நெல்லியடி பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிஸார் வாகனத்தில் புறப்படுகின்றபோது அதனை உளவுபார்த்து களவாக மணல் ஏற்றுவோருக்கு தகவல் வழங்கி வந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இவ்வாறு பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் இருந்து புறப்படுகின்றபோது பிரஸ்தாப இளைஞர் தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி தகவலை வழங்கியுள்ளார்.

இதனை அவதானித்த பொலிஸார் சந்தேகம் கொண்டு பிரஸ்தாப இளைஞரிடமிருந்து கைத்தொலைபேசியைப் பெற்றுக் கொண்டதுடன் அழைப்பிலிருந்தவருடன் கதைத்துள்ளனர்.

இதன் மூலம் களவாக மணல் ஏற்றுபவர்களுக்கு பிரஸ்தாப இளைஞர் தகவல் வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இளைஞரைக் கைது செய்த பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர். குறித்த இளைஞர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பிணை வழங்குமாறு கோரினார்.

எனினும் பிணை வழங்க மறுத்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராஜா அவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் பொலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பான விபரங்களைப் பெற்று விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-3-60)

# பேசும் படம் - 50

இடம்:-கொழும்பு, வெள்ளவத்தை



திடீர் என்று மழை வந்தால்? அதுக்காகத்தான் இந்த செட்டப்...

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி: ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
க.மதீசன்
திருநெல்வேலி

உங்கள் புகைப்படங்களை பிரசுரிக்க விரும்பினால் பேசும் படத்துடன் அனுப்பி வைக்கவும்.

# இ.போ.ச. வட பிராந்தியசாலை ஊழியர்கள் நேற்று பகிஷ்கரிப்பு

இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய சாலையின் ஊழியர்கள் ஒருமணிநேர பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர். நேற்று முற்பகல் 10 மணியிலிருந்து 11 மணிவரையே இப் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.



யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுமலசலகூடத்தில் இருந்து மலக்கழிவுகள் 15 நாட்களாக அகற்றப்படாமையினால் பொது மலசலகூடம் பூட்டப்பட்டுள்ளதுடன் துர்நாற்றமும் வீசு வருகின்றது.

இதனால் அதிகாலையில் தூர இடங்களில் இருந்து வரும் பிரயாணிகளும். இ.போ.சபை ஊழியர்களும் பெரிதும் சிரமங்களினையும் பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டும் வருகின்றனர். எனவே தங்களுக்கு தற்காலிக மலசலகூடம் ஒன்றினை அமைத்துத் தரவேண்டும்.

இல்லாவிடில் உடனடியாக மலக்கழிவை அகற்றித்தருவதற்கு உரிய நடவடிக்கையினை யாழ்.மாநகர சபை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியே போராட்டத்தை மேற்கொண்டனர். மேலும் யாழ்.மாநகர சபை மலக்கழிவை அகற்றாவிடில் பணிப் பகிஷ்கரிப்பு தீர்வு கிடைக்கும் வரை தொடரும் என்று இ.போ. சபை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த காலங்களில் கல்லுண்டாய் வெளியிலேயே மலக்கழிவுகள் கொட்டப் பட்டு வந்தன.எனினும் குறித்த பகுதி மக்களின் நியாயமான கோரிக்கையினை அடுத்து வடமாகாண சுற்றுச்சூழல் அமைச்சும், உள்ளூராட்சி அமைச்சும் இணைந்து குறித்த இடத்தில் மலக்கழிவை கொட்டுவதற்கு அனுமதிக்க முடியாது என யாழ்.மாநகர சபைக்கு அறிவித்துள்ளதுடன் மலக்கழிவை கொட்டுவதற்கு மாற்று இடம் ஒன்றினை தேடுமாறும் பணிக்கப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறான மாற்று இடம் எதனையும் மாநகர சபை தேடிக்கொள்ளவில்லை. இதனாலேயே மலக்கழிவு அகற்றும் பணிகளையும்,மாநகர சபை நிறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

# திருநெல்வேலி பொதுச்சந்தையில் மோசடியில் ஈடுபட்ட வர்த்தகர்கள்

## 90 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்

அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்களம் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது திருநெல்வேலி பொதுச் சந்தை வளாகத்தில் நிறையில் மோசடி மேற்கொண்டு விற்பனையில் ஈடுபட்டு வந்த 6 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் 90 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி மேற்படி அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்கள அதிகாரிகள் மூவர் மற்றும் இரண்டு பொலிஸார் உட்பட 5 பேர் கொண்ட குழுவினர் இப்பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது இலத்திரனியல் தராசில் பொறிக்கப்பட்ட ஈயத்தினாலான முத்திரை அகற்றப்பட்டு நிறையில் மாற்றம் செய்யப்பட்டிருந்தது பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டது.

20 கிராம் முதல் 100 கிராம் வரையில் நிறையில் மாற்றம் செய்யப்பட்டிருந்தது இதன்போது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து 6 வர்த்தகர்களுக்கும் எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் 90 ஆயிரம் ரூபா குற்றப் பணம் அறவிடுமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் நேற்று உத்தரவிட்டார்.

இதேவேளை நிறைகளில் மோசடி செய்து விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்கும் அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்களத்தில் தற்போது அளவீட்டு அலகுகளுக்கு முத்திரையிடும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் திணைக்கள பொறுப்பதிகாரி பா.இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் சட்ட திட்டங்களை மீறி செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டின பேரில் வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு குற்றப் பணம் அறவிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-3)



றோட்டரி மாவட்டம் 3230 இன் றோட்டரி கழகமாகிய சென்னை கலக்சியின் நிதி உதவியுடன் நல்லூர் றோட்டரி கழகத்தினால் கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கு இரண்டு வகுப்பறைகள் புனரமைப்பு செய்யப்பட்டன. அவற்றினை திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, றோட்டரி மாவட்டம் 3230 இன் முன்னாள் மாவட்ட ஆளுநர் றோட்டேரியன் ஆ.சம்பத்குமார் ஆகியோர் திறந்து வைப்பதையும் அவற்றிற்கான பெயர் பலகையை நல்லூர் றோட்டரி கழக தலைவர் றோட்டேரியன் த.நவீனதாஸ், றோட்டரி மாவட்டம் 3230 இன் முன்னாள் ஆளுநர் ஆகியோர் இணைந்து திரை நீக்கம் செய்வதையும் படங்களில் காணலாம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிக்குற்றச்சாட்டு சுமத்துபவர்களின் உள்ளங்களில் கருணை உண்டாகட்டும்!

(கொழும்பு)

போலிக் குற்றச்சாட்டு சுமத்தும் நபர்களின் உள்ளங்களில் கருணை உண்டாகட்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். யாபஹுவ ரஜமஹா விஹாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய வழிபாட்டு நிகழ்வுகளில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆசீர்வாத போதிபூஜையில் பங்கேற்கக் கிடைத்தமை மகிழ்ச்சி அளிக்கின்றது.

போதி பூஜையின் ஊடாக நாட்டுக்கும் படைவீரர்களுக்கும் நல்லாசி வேண்டுகின்றோம்.ஆட்சியாளர்களின் மனங்களிலிருந்து குரோதம், பொறாமை, பழிவாங்கும் எண்ணங்கள் இல்லாமல் போக வேண்டும் என வேண்டுகின்றோம்.

தொழில்களிலிருந்து நீக்கப்படும் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு மீளவும் தொழில் வழங்க இந்த ஆட்சியாளர்களுக்கு மனம் வர வேண்டும். எமக்கு வாக்களித்த 58 இலட்ச மக்களின் நலன்களுக்காக எப்போதும் குரல் கொடுப்போம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்து ள்ளார். (இ-5)

## அலங்கார உற்சவம் இன்று ஆரம்பம்

சுன்னாகம் வருஷப்புலம் பூந்தோட்ட ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் இன்று 12 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 21 ஆம் திகதிசனிக்கிழமைவைரவப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகம் நடைபெற்று மகேஸ்வரபூசையும்இம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (இ

## ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத்தால் தொழிற்றிணைக்கள ஆணையாளருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய சாலைகளான யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய சாலைகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் ஊழியர் சேமலாப நிதி கடந்த 2011 ஆம் நவம்பர் மாதம் தொடக்கம் மாதாந்த சம்பளத்தில் கழிக்கப்பட்டும் சேமலாப நிதி வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படவில்லை எனத் தெரிவித்து வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத் தலைவரினால் வடமாகாண தொழிற்றிணைக்கள ஆணையாளருக்கு நேற்று முன்தினம் மகஜர் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இளைப்பாறுகின்ற உத்தியோகத்தர்கள் தமது சேமலாப நிதியை முழுமையாகப் பெறமுடியாமல் உள்ளதுடன் சேமலாப நிதியிலிருந்து பெறப்படுகின்ற வீடமைப்புக் கடன்கள் மற்றும் வைத்தியக் கடன்கள் என்பவற்றைப் பெறமுடியாமல் உள்ளது. மேலும் மத்திய வங்கியினால் அனுப்பப்படும் ஊழியர் சேமலாப இருப்பு விபரம் தற்போது அனுப்பப்படுவதில்லை.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை எடுத்து செலுத்தப்படாமலும் ஊழியர் சேமலாப நிதியை வைப்பிலிட நடவடிக்கை எடுக்குமாறு அம்மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உட்பட சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (இ-3)


**கோப்பாய் இராஜவீதியில் காணி விற்பனைக்கு**

கோப்பாய் இராஜவீதியில் 110 இற்கும் மேற்பட்ட நிலப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வாங்க ஆர்வம் உள்ளவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள எங்களின் சட்டத்தரணிகளைத் தொடர்பு கொள்ளவும்.

நீலகண்ட & நீலகண்டன் சட்டத்தரணிகள்
இல. 2, டீல் வீதி, (5 ஆம் மாடி)
கொழும்பு- 03.
தொ.பேசி. 011 237 1100
தொ.நகல். 011 237 1111
மின்னஞ்சல். neela@mnlaw.lk



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**திரு.ஆறுமுகம் பேரின்பநாயகம் (SLPS-I)**




10.05.2015 கொழும்பு ராஜகீய வித்தியாலயத்தின் புதிய நாடக மண்டபத்தில் இடம்பெற்ற பதவி உயர்வு வழங்கும் நிகழ்வில் 28.04.2011 திகதி முதல் முதலாம் தர அதிபர் சேவை நியமனத்தை பெற்ற எமது வித்தியாலய முதல்வர் திரு.ஆ.பேரின்பநாயகம் அவர்களைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்தி நின்கின்றோம்.

(9753)

ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்



**அதிபர் திரு. செபமாலை அல்பிரட் அவர்கள்**

(BA Dip in Edu.DSM. M.Ed. SLPS-I 2008)

தனது வாழ்வில் அன்பால் பண்பால் சிறந்த நிர்வாகத்தால் மேலோங்கி நின்றவர்
2008 இல் இருந்து அதிபர் தரம் I இற்கு
தரமுயர்த்தப்பட்டதையிட்டு பாடசாலை ஆசிரியர்கள்,
மாணவர்கள் , ஊழியர்களாகிய நாம் பேருவகை
அடைவதோடு வாழ்வில் மேலும் சிறக்கவும் ஆரோக்கியமாக
வாழவும் வாழ்த்தி நிற்கின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.**

(சி-335)



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 50 செவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4280 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 35 1/4 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: உதவி முகாமையாளர்<br>தொ.இ: G/4224 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 42 1/2 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSC/ நில அளவையாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4281 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 9 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/4286 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 42 1/2 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4282 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 12 1/4 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4289 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 18 செவ் 1 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4283 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 13<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/4296 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திசேவா சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 5 ஆம் திகதி யாழ்ப்பாண த்தில் நடைபெற்றது. இதன்போது சங்கத்தின் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக தி.இராசநாயகம், பொதுச் செயலராக எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, உப தலைவர்களாக பேராசிரியர் மா.சின்னத்தம்பி, ந.சிவகரன், பொருளாளராக மா.லீலா விநோதன் ஆகியோரும் சங்கத்தின் சிரேஷ்ட ஆலோசகராக சோ.க.தம்பிப்பிள்ளையும் தெரிவாகினர்.

சங்கத்தின் கீழ் இயங்கும் கிளிநொச்சி சிறுவர் இல்ல (காந்தி நிலையம்-உருத்திரபுரம்) குழுவுக்கு தி.இராசநாயகம் (தலைவர்), ப.சதானந்தன் (செயலாளர்), மா.லீலா விநோதன் (பொருளாளர்), கா.கார்த்திகேசு, செல்வராணிசோமசேகரம்பிள்ளை, து.இரத்தினசிங்கம், தே.சுபாகரன், செ.கோபிதர்சன், ப.சபாரத்தினம், த.நேசராஜ்குமார், இரா.செல்வராசா, த.தேவராசா, க.பிரதீஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காந்தியக் கல்விக் குழுவுக்குத் தலைவராக பேராசிரியர் மா.சின்னத்தம்பியும் உறுப்பினர்களாக பேராசிரியர் சு.மோகனதாஸ், ந.சிவகரன், க.செல்வக்குமாரன், எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ




# வளலாய் கிராமத்தை பார்வையிட அனுமதி!

## பாதுகாப்பு அமைச்சு வழங்கியது

(யாழ்ப்பாணம்)

**உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள வளலாய் கிராமத்தினை பார்வையிடுவதற்கு மட்டும் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. தமது காணிகளினை அடையாளப்படுத்த விரும்பும் வளலாயினைச் சேர்ந்த மக்களினை நாளை வெள்ளிக்கிழமை காலை வளலாய் எல்லைப் பகுதியில் ஒன்று கூடுமாறு யாழ்.மாவட்ட அரச அதிபரும் மீள்குடியேற்ற அதிகார சபையின் தலைவரும் அறிவித்துள்ளனர்.**



காணிகளினை பார்வையிடுவதற்கு மட்டுமே மக்கள் அனுமதிக்கப்படுவர் எனவும் வேறு எந்தவிதமான நடவடிக்கைகளும் காணியில் மேற்கொள்ள முடியாது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மீள்குடியேற்ற அதிகார சபையின் பணிப்பாளர் ஹரின் பீரிஸும் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள வளலாய் கிராம மக்கள் தமது காணிகளினை பார்வையிடுவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் வளலாயினை சேர்ந்தவர்களில் 253 குடும்பங்களினைச் சேர்ந்த 858 பேர் யாழ். மாவட்டத்திலும் 19 குடும்பங்களினை சேர்ந்த 62 பேர் வேறு மாவட்டங்களிலும் தற்போது வசித்து வருகின்றனர்.

மொத்தமாக 272 குடும்பங்களினை சேர்ந்த 233 ஏக்கரும் வளலாயில் விடுவிக்கப்படவுள்ளதோடு முதற்கட்டமாக இக்காணிகளினை பார்வையிடுவதற்கு மக்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதற்கேற்ப நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் வளலாய் கிராமத்தின் எல்லைப்பகுதிக்கு வளலாயினை சேர்ந்த மக்கள் அனைவரினையும் ஒன்றுகூடுமாறு ஊடகங்கள் வாயிலாக அழைப்பு விடுத்துள்ளோம் என்றனர்.

வலி.வடக்கில் ஆயிரத்து 200 ஏக்கர் நிலம் விடுவிப்பதாக அறிவித்துவிட்டு தற்போது வலி.கிழக்கில் உள்ள 233 ஏக்கர் நிலம் மட்டுமே விடுவிக்கப்படுவது சரியானதா? அதன் நோக்கம் என்ன? என்று ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்டபோது,

இம்மாத இறுதிப்பகுதிக்குள் அறிவிக்கப்பட்ட அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும் எனவும் அதன் முதற்கட்டமாகவே வளலாய் கிராம மக்கள் தமது காணிகளினை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் தடைகள் ஒவ்வொன்றும் அகற்றப்பட படிப்படியாக ஏனைய இடங்களில் மீள்குடியேற்றம் இடம்பெறும் என்றனர்.

வளலாய் கிராம மக்களிளை நிரந்தரமாக அனுமதிக்காதது ஏன் என்று கேட்டபோது;

பாதுகாப்பு காரணங்கள் சில இருக்கலாம். எனினும் காலை முதல் மாலை வரை அங்கு நிற்க முடியும் இரவு நிற்க முடியாது என தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபனும் கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

# அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சிங்கள மொழி பயிற்சி வகுப்புக்கள்-III

(யாழ்ப்பாணம்)

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு, அரச ஊழியர்களுக்கான சிங்கள மொழி மட்டம் III பயிற்சி வகுப்பினை 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சகல மாவட்டங்களிலும் ஆரம்பிக்கவுள்ளது.

இவ் வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்பும் அரச உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட நேரத்தில் தமக்கு வசதியான இடத்தினை தெரிவு செய்து அந்த இடத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்ற விரும்பும் அரச உத்தியோகத்தர்கள் அன்றைய தினம் மாத்திரம் தங்களது பதிவுகளை மேற்கொள்ள முடியும். மற்றும் வகுப்புக்களில் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை ஆகக்கூடுதலாக 40 பேர் என வரையறை செய்யப்படும்.

மேலதிகமாக வருபவர்கள் வெறொரு இடத்தில் நடைபெறும் வகுப்புகளுக்கே அனுமதிக்கப்படுவார்கள்.

வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள் வருமாறு,

யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மானிப்பாய் இந்துக் கல்லூரி, பருத்தித்துறை திரு இருதயக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், முல்லைத்தீவு மகா வித்தியாலயம், வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் மன்னார் ஆங்கில துணைவள நிலையம் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது என வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகின் பணிப்பாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார். (இ




# போக்குவரத்து சபையினரின் பிள்ளைகளுக்கு கௌரவிப்பு



இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் பொதுப் பரீட்சையில் உயர்சித்தி பெற்ற சாலை ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கௌரவிப்பு விழா யாழ்.சாலையின் முகாமையாளர் செ.குணபாலசெல்வம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.அஸ்கரும் சிறப்பு விருந்தினராககோப்பாய் ஆசிரியகலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.சாலையின் முன்னாள் பொறியியலாளர் க. குமாரகுலசிங்கமும் கலந்து கொண் டனர்.

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல்பெற்றவர்களும், க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் 7 ஏ சித்திக்கு மேல்பெற்றவர்களும் உயர்தரப் பரீட்சையினூடாக பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களும் அவர்களுடைய பெற்றோரும் பாராட்டுப் பத்திரம் வழங்கியும் பொற்கிழி வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

அறிவுப் பொருளாதாரத்தை நோக்கிய பயணம் என்ற தொனிப் பொருளில் சிறப்பு விருந்தினர் உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மதுபோதையில் இடையூறு விளைவித்தவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதத்துடன் 4 மாதச் சிறை

(கரணவாய்)

மதுபோதையில் பயணிகளுக்கு இடையூறு விளைவித்த குடும்பஸ்தர் ஒருவர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட அவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ அறிக்கையும் பெறப்பட்டது.மருத்துவ அறிக்கையின் அடிப்ப டையில் நேற்று முன்தினம் தொடர ப்பட்ட வழக்கில் 10 ஆயிரம் ரூபா அப ராதம் விதிக்கப்பட்டதுடன், 4 மாத சிறைத் தண்டனையையும் விதித்து பருத்தித்துறை நீதவான் எம். கணேசராஜா உத்தர விட்டுள்ளார். (இ-3-60)

# மெய்வல்லுநர் போட்டி

யாழ்கோண்டாவில்சிவபூமிசிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப 3 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகவும் யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் த.கோபிசங்கர் தம்பதிகள் சிறப்பு விருந்தினராகவும் யாழ்.மாவட்ட சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் ந... சுகிர்தராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெங்கல செட்டிகுள

# பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

**வவுனியா வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலகத் தில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் நேற்றுக்காலை குறித்த பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.**



இது தொடர்பில் தெரியவருவதாவது,

சூடுவெந்தபுலம் கிராமத்தில் இந்திய அரசினால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் பயனாளிகள் தெரிவு தொடர்பானகூட்டத்தில் பிரதேச செயலாளர், கிராமசேவையாளருடன் முரண்பட்டமை மற்றும் அரச ஊழியர்களை தாக்க முற்பட்டமை போன்றவற்றைக் கண்டித்து வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலக ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அவர்கள், 'மக்கள் சேவைக்குமதிப்பளியுங்கள்; அரச ஊழியர்கள்மீது வன்முறை வேண்டாம்.

அரச ஊழியர்கள் மீது அழுத்தங்களை பிரயோகிக்காதே! நியாயமான சேவையை நிந்திக்காதே!; நியாயமற்ற கோரிக்கையை நிறைவேற்ற நிர்ப்பந்திக்காதே ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகள் தாங்கிப்பிடித்தவாறு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.(2-250)

## பனைசார் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன



மன்னார் மாவட்டத்தில் பனைசார் உற்பத்தி திறனை ஊக்குவிக்கும் வகையில் பனை சார் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் உற்பத்தியாளர்களுக்கு மன்னார் மாவட்ட பனை அபிவிருத்தி சபையினால் தொழில்சார் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இவ் உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீனின் பணிப்புரைக்கு அமைவாக குறித்த தொழில சார் உபகரணங்கள் சுமார் 100 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

பதநீர் உற்பத்தி, ஒடியல் தயாரித்தல் போன்றவற்றுக்கான உபகரணங்களே இவ்வாறு வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்ட பனை அபிவிருத்தி சபையினால் மாவட்ட இணைப்பாளர் பெனில்டெஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் கமல்நாதன் விஜிதன் மற்றும் அதிகாரிகள் கலந்துகொணடு தொழில்சார் உபகரணங்களை வழங்கி வைத்தனர். (2)




## நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வருகின்ற மக்களை மீள்குடியேற்ற காணி ஒதுக்கீடு

(வவுனியா)

வவுனியா, பூந்தோட்டம் அகதி முகாம் மக்கள் கடந்த 18 வருடங்களாக நலன்புரி நிலையத்தி லேயே வசித்து வருகிறார்கள். இவர்களை நிரந்தர இடத்தில் குடியேற்ற நெடுங்கேணி சின்ன அடம்பனில் இராசபுரம் பகுதியில் 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட் டுள்ளது என வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், நெடுங் கேணி பிரதேச செயலாளர் எஸ்.பரந் தாமன் ஆகியோர் அந்தப் பகுதியை சென்று அண்மையில் பார்வையிட்டனர்.

இதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

1990ஆம் ஆண்டின்பின்னர் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களும், 1995 இல் இந்தியாவிலிருந்து வந்த மக்களும் கடந்த 25 வருடங்களாக எந்தவிதமான அடிப்படை வசதிகளுமின்றி வவுனியா, பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தற்காலிக முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களை மீள்குடியேற்றம் செய்வதற்கு வவுனியா அரசாங்க அதிபரால் முன்மொழியப்பட்ட திட் டத்தினபடி இந்தப் பிரதேசத்தில் 100 ஏக்கர் நிலம் தயார்ப்படுத்தப்பட் டுள்ளது.

இவற்றை அவர்களுக்கு பிரித்துக் கொடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு பூந்தோட்டம் நலன்புரி முகாமில் வசிக்கும் மக்கள் இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில் வடக்கு மாகாண சபை மத்திய புனர்வாழ்வு அமைச்சுடன் இணைந்து இம் மக்களை அனைத்து வசதிகளுடனும் மீள்குடியேற்றுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

குடியேற்றப்படும் மக்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்கள், வருமானத்திற்கான காணித் துண்டுகள் வழங்கப்படுவதுடன் அவர்கள் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க வடக்கு மாகாண சபை உறுதுணையாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## சர்வதேச மகளிர் தினம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிமாவட்டசெயலகமும்அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து சர்வதேசமகளிர்தினத்தை இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில்நடத்தவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்புவிருந்தினராகயாழ்ப்பாணம் பெண்கள் அபிவிருத்தி நிலை யத்தின் இயக்குநர்திருமதிசரோஜினிசிவச்சந்திரன் கலந்து கொள் ளவுள்ளார்.

இதன்போது பெண்களுக்கான ஓவியப் போட்டி விநோத விளையாட்டு கருத்துக்கள அரங்கம், மாற்றுவலுவுடையோருக்கான விளையாட்டு நிகழ்வு என்பன நடைபெறும்.

அத்தோடு பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட கைவினைப் பொருட்களின் கண்காட்சி இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட பெண்களைத்தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் முன்னேற்றத்திற்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள், கிராம அபிவிருத்தி சங்களின் உறுப்பினர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2-277)

## நெல் மூடைகளுக்கான காசு சிட்டைக்குரிய பணம் வங்கிகளில் வைப்பிலிடப்படவில்லை

### பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அனுசரணையுடன் கமநல சேவை நிலையங்களின் ஊடாக நெல் மூடைகள் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கமைய ஒரு விவசாயிகளிடமிருந்து 2 ஆயிரம் கிலோ வரையிலான நெல் மூடைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதில் அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு அமைவாக சம்பா இன நெல் 50 ரூபாவிற்கும் சிவப்பு இன நெல் 45 ரூபாவிற்கும் கொள்வனவு விலையாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது.

15 நாட்களில் வங்கிகளுக்கூடாக இதற்கான பணத்தினை பெற்றுக் கொள்ள முடியுமென கொள்வனவு செய்வோரால் தெரிவிக்கப்பட்டு காசு சிட்டை விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது.

இவ்வாறு வழங்கப்பட்டுள்ள சிட்டைகள் மூலம் ஒரு சில விவசாயிகளுக்குமட்டுமேபணம்கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் ஏனையோருக்கு ஒருமாத காலமாகியும் இச் சிட் டைக்கான பணம் கிடைக்கவில்லையெனவும் பாதிக்கப்பட்ட விவசாயி களினால்கவலைதெரிவிக்கப்படுகின்றது.

இந்த நெல்மூடைகளின் கொள்வனவிற்கான சிட்டைகள் வழங்கப்படும் போது இலங்கை வங்கியில் பணத்தை பெற்றுக்கொள்ள முடியுமென கொள்வனவாளர்களால்தெரிவிக்கப்பட்டதையடுத்து வங்கியில் சென்று விவசாயிகள் காசு சிட்டைக்கான பணத்தை பெற முயலும் போது உரிய பணம் வைப்பிலிடப்படவில்லையென வங்கியினர் கைவிரிக்கின்றனர்.

இதனால் நெல்லை விற்பனை செய்த விவசாயிகள் உரிய காலத்தில் பணம்கிடைக்கப்பெறாமை யால் தாம் வங்கிகளின் ஊடாகவும் ஏனைய வழிகளிலும் கடனாகப் பெற்ற பணத்தை உரிய காலத்தில் செலுத்த முடியாது அவதியுறுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனம் செலுத்தி தமக்கான பணத்தை காலம் தாழ்த்தாது பெற்றுக் கொள்ள ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)

## கிளிநொச்சி வைத்தியசாலையில் முன்னுரிமை அடிப்படையில் சிகிச்சை

### பாதிக்கப்பட்ட நோயாளர்கள் ஆதங்கம்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளர்கள் வைத்தியசாலை பணியாளர்களின் தவறான நிர்வாக நடைமுறைகளால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்கின்ற போதிலும் முன்னுரிமை அடிப்படையில் சில நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதால் ஏனைய நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருந்தே சிகிச்சை பெற்று வீடு திரும்புவதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மருத்துவ ஆய்வுகூடத்தில் இரத்தப் பரிசோதனை உட்பட ஏனைய பரிசோதனைகள் முற்பகல் 11 மணியுடன் முடிவுறுத்தப்படுகின்றது. அதன்பின்னர் நடவடிக்கைகள் அனைத்தும் மீளவும் பிற்பகல் 2 மணிக்கே ஆரம்பமாகின்றது.

இதனால் தூர இடங்களில் இருந்து வருகின்ற நோயாளர்கள் தமக்கான சேவையினைப் பெறுவதில் இடர்பாடுகளை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர். எனவே இது தொடர்பான விட யத்தில் பொறுப்பு வாய்ந்த வைத்திய அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து சீரான நடைமுறைக்கு அமைய இச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட நோயாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநோயாளிகளையும் மனிதர்களாக மதிப்போம்!

வன்னி இறுதிப்போரில் உறவுகளைப் பறிகொடுத்தவர்களும் மற்றும் நெருக்கடிகுள் சிக்கித் தவிப்பவர்களும் அழுத்தங்களுக்கு உள்ளாகி மனநோயாளிகளாக எம்மத்தியில் உலா வருகின்றனர். இவர்களை எமது சமூகம் ஏனைய மனிதர்கள் போன்று மதிப்பது மிகமிகக் குறைவென்றே கூறலாம்.

தடிமன், காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்படுமிடத்து வீட்டு வைத்தியம் மூலமோ வேறு மருந்துகளை வைத்தியர் ஒருவரின் ஆலோசனைப்படி உட்கொண்டு மீட்டுவிடும் நமக்கு உள நோயாளர்களை மட்டும் ஏனோ ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. பைத்தியம், மென்டல் இப்படியான பெயர்களைச் சூட்டி அவர்களை ஒதுக்கி வைத்து விடுகின்றோம். இது தவறு அவர்களும் ஆரோக்கிய மானவர்களாக இச்சமூகத்தில் வாழ்வதற்கு உரித்துடையவர்கள்.

உரிய உளவளத்துணையுடனோ அல்லது சிகிச்சையுடனோ அவர்களும் எம்மைப் போல் வாழமுடியும் என்பதனை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நமது வாழ்வு ஒருமுறைதான் இந்த எமது வாழ்க்கையை எவ்வாறு முழுமையாக சந்தோசமான மனப்பாங்குடன் எம்மைத் திருப்திப்படுத்தும் நோக்குடன் அதேவேளை மற்றவர்களிற்கு உதவக்கூடிய வகையிலும் வாழவழிவகுப்பதற்காக சற்றுச் சிந்திக்க வேண்டும்.

ஓர் குழந்தையால் வயது வந்தவரைப் போல் சந்தோசமாக இருப்பதாக நடிக்க முடிவதில்லை. எம்மைத்தவிர எமக்கு யாராலும் மகிழ்ச்சியைத் தரமுடியாது. எனினும் மனித மனங்கள் எப்போதும் கடந்தகால, நிகழ்கால ,எதிர்கால நினைவுகளிலேயேதான் வாழ்கின்றன. இதனால் பதற்றம் ஏற்படுகின்றது.

இதனைத்தவிர்ப்பதற்காக உங்கள் கல்வியிலோ வேலைகளிலோ மட்டும் கவனத்தை திசை திருப்புங்கள். ஒரு வேலையை முழுமனதாகச் செய்யும்போது அதனை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும். இதற்காக உங்கள் திறனை(Skill)நீங்களே பாராட்டிக் கொள்ளுங்கள். மனதை ஒருநிலைப்படுத்தத் தவறுவதனாலேயே மன அழுத்தங்களும் (Stress) மனபதகளிப்பும்(Tention) உருவாகின்றன.

ஓர் இலக்கை வெற்றிகரமாக அடைவதற்கு மன ஒருநிலைப்படுத்தல் மிகவும் அவசிமானது. இதனால் கிடைக்கும் வெற்றி எமக்கு இன்பத்தையே தருகின்றது.

ஒரு மனிதனால் ஒரு நேரத்தில் ஒரு வேலையைத்தான் வெற்றிகரமாகச் செய்ய முடிகின்றது. பாடிக்கொண்டு நடனமாடும் ஒருவரின் பாடலில் தரம் படிப்படியாக குறையும். இது யதார்த்த உண்மை. ஒரு நேரத்தில் ஒருவர் பல வேலைகளைச் செய்யும் போது பதகளிப்பு ஏற்படுவதுடன் களைப்பும் அடைகின்றார்கள். நாம் வேலைகளை முன்னுரிமை அடிப்படையில் செய்ய வேண்டும். இதனால் வேலைகளை விரைவாகவும் வினைத்திறனுடனும் செய்யமுடியும்.

எம்மில் பலர் Busy ஆக இருக்கின்றோம் என்பதற்காக காட்டிக்கொள்வதற்காகப் பல வேலைகள் செய்வதாகப் பாவனை செய்கின்றோம். இதனால் என்ன பயன்? எமது செயலுக்கு /வாழ்க்கைக்கு கட்டாயம் ஒரு இலக்கு/ தேவை இருக்க வேண்டும்.

பகல் கனவும் நேர் சிந்தனையும்(Positive thinking) முற்றிலும் வேறுபட்டவை. எந்த மனம் போதும் என்று திருப்தி கொள்கின்றதோ அது என்றும் சந்தோசமாக இருக்கின்றது. ஒருவர் உங்களைக் காரணமின்றி குறை சுமத்தும் போது அவர் என்னை அசிங்கப் படுத்தி விட்டாரே உதாசீனப்படுத்தி விட்டாரே என நினைக்காது அவர் உங்களிற்காகச் செய்த நல்ல விடயங்களை நினைத்துப் பாருங்கள். அப்போது நீங்கள் உங்கள் மனதளவில் புனிதனாகி விடுவீர்கள். நேரான சிந்தனைகள் எமது மனதில் தன்னம் பிக்கையை வளர்த்து மனதை சந்தோசமாக வைத்திருக்க உதவுகின்றது.

எதற்குமே கவலைப்படும் ஒருவரால் வாழ்க்கையில் சந்தோசமாக வாழ முடியாது. பூக்களைப் பாருங்கள் பொதுவாக அவை மலர்ந்த அன்றே மடிந்தும் விடுகின்றன. அதற்காக அவை மலர மறுக்கின்றனவா? பயப்படுவதனால் நாம் என்னத்தைச் சாதிக்க போகின்றோம்? இறந்து விடுவேன் எனப் பயந்து நீச்சல் குளத்தில் இறங்காதவன் என்றுமே நீச்சல் கற்றுக் கொள்ளப் போவதி ல்லை. ஆசை அனைத்துத் துன்பங்களி ற்கும் வடிகாலாகின்றது. ஆசை இல்லாவிட் டால் எதனையும் அடையவும் முடியாது. ஆதலால் நியாயமாக ஆசைப்பட்டால் நிச்சயம் குறித்த இலக்கினை அடையலாம்.

மரியாதையை மற்றவர்களிற்குக் கொடுங்கள் உங்களிற்கு நிச்சயம் மரியாதை கிடைக்கும். தேவையில்லாது வார்த்தைகளை வெளிப்படுத்தி பின்னர் அதற்காக நாம் வருந்துவதால் என்ன பயன்? எனவே நமது உரையாடல் எப்போதும் ஆரோக் கியமாக நேர் சிந்தனை உடையதாக விளை வைப் பெருக்கக்கூடியதாக இருக்கட்டும்.

நாம் பொதுவாக எப்போதும் எதிர்காலத்திலேயே வாழ்கின்றோம். அதாவது நான் நிச்சயம் நாளை சந்தோசமாக இருப்பேன் என்றே கற்பனை செய்கின்றோம். ஏன் நான் இன்று சந்தோசமாக இருக்கின்றேன் மற்றவர்களையும் சந்தோசமாக வைத்தி ருக்கின்றேன் என்றுஇன்றைய நிலை பற்றி நினைக்க மறுக்கின்றோம். இந்த நிமிடத்தில் இன்று வாழ்ந்து பாருங்கள்

நோய்களை நாம் மற்றவர்களிற்கு தொற்ற வைக்கின்றோம் ஏன் நாம் மற்றவர்களிற்கு சந்தோசத்தை தொற்ற வைக்க கூடாது என்று இன்றே சிந்திப்போமாக!

**நன்றி:-ஞானச்சுடர்**

# "தென்அருவி-2015" வர்த்தகக்கண்காட்சி

தென்மராட்சி கல்விவலயத்தில் கற்கும் வர்த்தகத்துறை மாணவர்களாலும் அத்துறை சார்ந்த ஆசிரியர்களாலும் வாணிபம் பேண் வளம் காண் எனும் தொனிப் பொருளிலான தென்அருவி 2015 எனும் வர்த்தகக்கண்காட்சி நாளை வெள்ளிக் கிழமையும் நாளைமறுதினம் சனிக்கிழமையும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியின் முதல்நாளான 13ஆம் திகதிபாடசாலை மாணவர்களும் மறுநாளான 14ஆம் திகதி பொதுமக்களும் முற்பகல் 10மணி தொடக்கம் பிற்பகல் 4மணிவரை பார்த்து பயன்பெற முடியும்.

தென்மராட்சி வலயக் கல்விப்பணிப் பாளர் சு.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சி.சத்திய சீலன், வடமாகாண கல்விப் பணிப் பாளர் ஆ.இ.ராஜேந்திரன், வடமாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் திருமதி பா.செல்வின், தென்மராட்சி பிரதேச செய லாளர் திருமதி அ.சாந்தசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ் விருந்தினர்களாக சாவகச்சேரி நகராட்சிமன்ற செயலாளர் இ.தேவசகாயம், வேல்ட் விசன் பிரதேச முகாமையாளர் அ.கி.றொசைறோ,வர்த்தகசங்க தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ்,நூாகினிய நிறுவன நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் ச.ஜ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கண்காட்சியில்உள்ளூர் உற்பத்தி நிறுவனங்களின் வெளியீட்டுப் பொருட்கள், வணிகஅமைப்புகளின் வெளியீடுகள, நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள், தென் மராட்சியின் எதிர்கால வணிகவாய்ப்புகளுக்கான உத்திகள், மாணவர்களை வணிக முயற்சியில் ஈடுபாடு கொள்ளவைப்பதற்கான செயற்பாடுகள் ஆகியன பல்பகுதிகாட்சி அறைகளாக வகுக்கப்பட்டு நடத்தப்படவுள்ளது.

அதேவேளை மற்றுமொரு புறத்தில் இவ்வணிக செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்கள் குவிந்த நாடக ஆற்றுகைகளும் மாணவர்களால் நடத்தப்படவுள்ளது.

வலயக்கல்வித்திணைக்களத்தின் மேற்பார்வையிலும் வேல்ட்விசன் நிறுவனத்தினதும் ஏனைய வணிக நிதி நிறுவனங்களதும் தனிநபர்களினதும் அனுசரணையில் இச்செயற்பாடு நடைபெறவுள்ளது.

மேலும் தென்மராட்சி கல்விவலயத்தின் ஆசிரிய மத்திய நிலையத்தில் இயங்கும் தொழில் வழிகாட்டல் ஆலோசனை அலகு மற்றும் தொழில் வழிகாட்டல் ஆசிரியர்கள் மூலமும் தொழில்நுட்பக்கல்லூரி, உயர் தொழில்நுட்பக்கல்லூரி,திறந்த பல்கலைக் கழகம் என்பனவற்றின் காட்சிப்படுத்தல்கள் ஊடான வழிகாட்டல்களும் உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்கான ஆலோசனைகளும் மேற்குறித்த விடயப் பரப்பு தொடர்பாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-20)

# மகிந்த ராஜபக்ஷ கோரினால் வாய்ப்பு வழங்கத் தயாராம்!

## டிலான் பெரேரா தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தால் வாய்ப்பு வழங்கத் தயார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட விரும்பி அது தொடர்பில் மகிந்த கோரிக்கை விடுத்தால், கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்தத் தயார்.

மகிந்தவிற்கு பிரதமர் வேட்பாளர் பதவி தேவையென்றால் அது குறித்தும் கவனம் செலுத்தத் தயார்.

பிரதமர் வேட்பாளராக போட்டியிட விரும்பினால் அது குறித்து சரியான முறையில் கட்சிக்கு அறிவித்து, கோர வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு கூடி இறுதித் தீர்மானம் எடுக்கும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு சொந்தமில்லாத கட்சிகளின் ஊடாக சந்திக்கு சந்தி கூக்குரல் இடுவதனால் எவ்வித பயனும் கிடையாது.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த தோற்றதன் பின்னர் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றிற்கு அழைத்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க சுதந்திரக் கட்சி முயற்சித்தது.

அதனை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொள்ளவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டார நாயக்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை இணைத்துக் கொண்டு பிரசாரத்தில் ஈடுபடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான முனைப்புக்களை கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மேற்கொண்டு வருகின்றனர் என டிலான் பெரேரா சிங்கள ஊடக்மொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் வேட்பாளராக மகிந்தவை போட்டியிடச் செய்வது குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்க ஆட்சிக்காலத்தில் டிலான் பெரேரா, மகிந்த ராஜபக்ஷவிற்கு மிகவும் நெருக்கமான விசுவாசமானவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், அண்மைக்காலமாக மகிந்தவை மறைமுகமாக அரசியலிலிருந்து ஓரம் கட்டும் வகையில் டிலான் கருத்துக்களை தெரிவித்து வருவதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.தே.கூவுக்கு நன்றி கூற நான் கடமைப்பட்டுள்ளேன்

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

**(கொழும்பு) கிழக்கு மாகாணத்தில் புதிய ஆட்சியை நாங்கள் கொண்டு வந்துள்ளோம். எவ்வாறு மத்தியில் ஒரு கூட்டாட்சி நிலவுகின்றதோ, அதை விட சிறந்த ஆட்சியை கிழக்கு மாகாண சபையில் நிறுவியுள்ளோம். அதற்காக பங்களித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற காணி உறுதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் பிரிந்துசெல்லாமல் ஒன்றுபட்டு உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார். நல்லாட்சியை மேற்கொண்டு வருகின்றார். அதன் அடிப்படையில் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்படுகின்றன.

இந்த நிலையில் இன, மத வேறுபாடுகளை, கட்சி வேறுபாடுகளை மறந்து, விட்டுக்கொடுப்புகளை செய்து செயற்படுவதற்கு நாங்களும் இணைந்துள்ளோம்.

கிழக்கு மாகாண மக்களின் முன்னேற்றத்துக்காக, வளர்ச்சிக்காக, அவர்களின் கண்ணீரை துடைப்பதற்காக இந்த இணைவை தொடர்ந்து பேணுவோம். அதற்காக எந்த விட்டுக்கொடுப்பையும் செய்ய நாங்கள் தயாராகவுள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் 98 சதவீதமாக உள்ளன. இந்த மாவட்டத்தில் இரண்டு இனங்களும் ஒற்றுமைப்படவேண்டிய காலகட்டமாகும். கடந்த 30 வருடங்களாக மறக்கமுடியாத பல துர்ப்பாக்கிய சம்பவங்களினால் நாங்கள் பிரிந்து நின்றோம். ஆனால், தொடர்ந்து நாங்கள் பிரிந்திருக்கமுடியாது. அரசியல்வாதிகள் ஒற்றுமைப்படுவது போன்று, அதிகாரிகளும் பொதுமக்களும் ஒன்றுபடவேண்டிய காலம் தற்போது ஏற்பட்டுள்ளது. அவ்வாறு ஒன்றுபட்டால் எங்களை யாராலும் பிரிக்கமுடியாது. ஒன்றுபடும்போது எங்களது உரிமைகளை யாராலும் தடுத்துநிறுத்த முடியாது என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறான நிலையில் நாங்கள் பிரிந்துநிற்காமல், எங்களது உரிமைகளை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பது தொடர்பில் சிந்தித்து செயற்படவேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# கொழும்பு துறைமுகம் இந்தியாவுக்குரியதா? இலங்கைக்குரியதா?

## சீனத்தூதுவர் கேள்வி



(கொழும்பு)

கொழும்பு துறைமுகம் இந்தியாவுக்குரியதா? அல்லது இலங்கைக் குரியதா? என இலங்கைக்கான சீனாவின் புதிய தூதுவர் ஜி சியான் லயாங் கேள்வி எழுப்பியுள்ளார். கொழும்பில் உள்ள தூதரகத்தில் நேற்று முன் தினம் செய்தியாளர்களைச் சந்தித்தவேளை அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இலங்கை துறைமுகத்துக்கு சீன நீர்மூழ்கிகள் வந்தவேளை பலரும் அதனை பெரிதுபடுத்தி கூச்சலிட்டதை கண்டு தான் அதிர்ச்சியடைந்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீன நீர்மூழ்கிகள் இலங்கைக்கு வரும் வேளைகளில் மாத்திரம் அது பெரிதுபடுத்தப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீர்முழ்கிகள் குறித்து இந்தியா கரிசனை வெளியிட்டிருந்தால் நான் அது குறித்து இங்குள்ள எனது இந்திய நண்பருடன் ஆராய்வேன்.

இது அரசியல் அல்லது தந்திரோபாய காரணங்களுக்காக அல்ல. மாறாக தொழில்நுட்ப காரணங்களுக்காக. கொழும்பு துறைமுகம் ஒரு வர்த்தக துறைமுகம், அமெரிக்கா, இந்தியா, சீனா உட்பட பல நாடுகள் அதனை பயன்படுத்துகின்றன. அதனால் சீனாவின் நீர்மூழ்கிகளுக்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்ததன் அர்த்தம் எனக்கு புரியவில்லை. இலங்கை துறைமுகத்தை வேறு எந்த நாடாவது இராணுவத் தளமாகப் பயன்படுத்த முடியுமா? கொழும்பு துறைமுகம் இந்தியாவுக்குரியதா? அல்லது இலங்கைக்குரியதா, என அவர் மேலும் கேள்வியெழுப்பியுள்ளார். (இ-5)



அமரர் சண்முகநாதன் மகாலட்சுமியின் நினைவாக லண்டனில் இருந்து வருகை தந்த அவரின் புதல்வர்களாலும் நண்பர்களாலும் யாழ் எயிட் ஊடாக அண்மையில் யாழ்.கீரிமலை நகுலேஸ்வரா மாணவர்களுக்கு அறுசுவை மதிய உணவும் யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கென கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# பூஸா முகாமிலுள்ள கைதிகளை புனர்வாழ்வுக்கு அனுப்ப முயற்சி

(கொழும்பு)

பூஸா தடுப்பு முகாமை மூடிவிடுமாறு கிடைத்துள்ள வெளிநாட்டு அழுத்தங்களையடுத்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை முன்னறிவித்தல் எதுவுமின்றி அவர்களின் விருப்பத்துக்கு மாறாக புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்படுவதாக சட்டத்தரணி கே.எஸ்.ரத்னவேல் தெரிவித்தார்.

எந்தவித குற்றச்சாட்டுகளும் இன்றி பல வருட காலம் பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தினமும் 10 பேர் 15 பேர் என நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

இது சட்டத்துக்கு முரணானது என்று தெரிவித்த சட்டத்தரணி ர்த்னவேல் இது தொடர்பாக தமிழ்க் கட்சிகள், தமிழ் அரசியல்வாதிகள் கவனிப்பதாக தெரியவில்லை என்றும் மனவேதனையுடன் தெரிவித்தார்.

ஜெயகுமாரி நேற்று முன்தினம் பிணையில் விடுதலை செய்யப்பட்ட போது அவருக்கு சார்பாக ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜெயகுமாரியை நீதிமன்றத்துக்கு ஆஜராக்குவதாக கூறப்பட்ட போதும் அவருடன் 6 பெண்கள் உட்பட 13 பேர் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதில் 8 பேர் நேற்று முன்தினம் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன் ஏனையோர் மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இது தொடர்பாக அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

## வெளிநாடுகளுக்குப் பெண்களை அனுப்ப எதிர்பார்க்கவில்லையாம்

### பிரதி வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

இலங்கை பெண்களை வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்கு தொடர்ந்தும் அனுப்ப எதிர்பார்க்கவில்லை என பதில் வெளிவிவகார அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு வீட்டு பணிப்பெண்களாக செல்லும் அநேக இலங்கை பெண்கள் பல இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனாலேயே எதிர்வரும் காலங்களில் இலங்கை பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கையை தொடர்ந்தும் முன்னெடுக்க போவதில்லை என பதில் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் தொழில்வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்பவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க கூடிய முறை குறித்த அடிப்படை கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தூதரகத்தினை முற்றுகையிட இளைஞர் காங்கிரஸ் முயற்சி

மீனவர் பிரச்சினை குறித்து இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிய கருத்துகளை கண்டித்து சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் முயன்றனர்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அண்மையில் பேட்டி யளித்த இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "கடற்படை சில சமயங்களில் அப்பாவி மீனவர்களையும் சுட்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. எங்கள் கடல் பகுதிக்குள் நீங்கள் ஏன் வருகிறீர்கள்? ஒருவர் என் வீட்டில் கொள்ளை அடிக்க முயன்றால் அவரை சுடலாம். சட்டம் அதை அனுமதிக்கிறது" என்று கூறினார். அவரது இந்தப் பேச்சு தமிழகம் முழுவதும் பெரிய அளவில் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இலங்கை பிரதமரின் இந்தப் பேச்சைக் கண்டித்து சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகை யிடப் போவதாக இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் அறிவித்திருந்தனர். இதற்காக நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கை தூதரகம் அருகே ஏராளமான இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியள வில் திரண்டனர்.

இந்த முற்றுகைப் போராட்டத்தையொட்டி ஏராளமான பொலிஸார் முன்கூட்டியே குவிக்கப்பட்டிருந்தனர். இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் தூதரகத்தை முற்று கையிட முயன்ற போது, அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதையடுத்து தூதரகத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் காங்கிரஸார், ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். ரணில்விக்கிரமசிங்கவின் உருவ பொம்மையை அடித்தும் தங் களது கண்டனத்தை தெரிவித்தனர். இந்தப் போராட்டத்தில் இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆபிரகாம் மணி, மத்திய சென்னை மாவட்ட பொதுச் செயலா ளர் எஸ்.எஸ்.குமார் உட்பட ஏராள மானவர்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஐ.தே.கவுக்கு சொந்தமாகி விட்டாராம்!

## அமைச்சர் கிரியெல்ல விளக்கம்

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்பொழுது ஐக்கிய தேசிய கட்சிக்கு சொந்தமாகி விட்டார் என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அதனை புரிந்து கொண்டுள்ளார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்டுகஸ்தொட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தல் எந்த முறையின் கீழ் நடைபெறவுள்ளதென இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

எந்த முறையின் கீழ் தேர்தல் நடைபெற்றாலும் அந்தத் தேர்த லில ஐக்கிய தேசிய கட்சி பெரும்பான்மையுடன் வெற்றி பெறும் எனவும் அவர நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-5)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் இதுவரை ஆயிரம் முறைப்பாடுகள்

(கொழும்பு)

பொது மக்களிடமிருந்து கடந்த இரண்டரை மாதங்களில் சுமார் ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முன்னிலை அரசியல்வாதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராகவே அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் டில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இம் முறைப்பாடுகளில் அநேகமானவை இலஞ்ச ஒழிப்புச் சட்டத்திற்குரியவை அல்லவென்பது முதற்கட்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் அந்த முறைப்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான கட்டமைப்பு ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் குறித்து முறைப்பாடுகள் இருப்பின் ஆணைக்குழுவிற்கு அறிவிக்குமாறு அவர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பொதுத் தேர்தலின் பின்னர் 100நாள்திட்டம் குப்பையில்

## மஹிந்தானந்த கூறுகிறார்



(கொழும்பு)

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டம் எதிர்வரும் பொது தேர்தலுக்கு பின்னர் குப்பைத் தொட்டியில் வீசப்படும் என முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

வானொலி நிகழ்வொன்றில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

குறித்த 100 நாள் வேலைத் திட்டம் மக்கள் மத்தியில் பல எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திவிட்டாலும் 100 நாள் திட்டத்தில் குறிப்பிடப்பட்டது போன்று நடைமுறைப் படுத்தபடவில்லை என தெரிவிததார்.

மேலும் இதற்கு முன்னர் என்றுமில்லாதவாறு விளையாட்டுத்துறை அரசியலாகியுள்ளதெனவும் முன்னாள் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-5)

# ஆளுநர் மீதான குற்றச்சாட்டினை விசாரணை செய்ய குழு நியமனம்

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மீது சுமத்தப்பட்டுள்ள உட்சந்தை மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைக்கென மூன்று பேர் குழு ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைத்துள்ளார்.

30வருட முறிகளை மகேந்திரனின் மருமகன் கொள்வனவு செய்ததாக கூறப்படுவது தொடர்பிலேயே இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் காமினி பிட்டிபன, மஹேஸ் கலுகம்பிட்டிய மற்றும் சந்திமால் மெண்டிஸ் ஆகியோரைக்கொண்டு பிரதமர் விசாரணை குழு அமைத்துள்ளார்.

இந்த குழுவை அமைப்பதற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க, பிரித்தானியாவில் உள்ள ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் தொலைபேசியின் மூலம் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார் எனத் தெரிய வருகிறது. (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு

### சிவசிவாயப்பிள்ளை ரவீந்திரதாஸ்



(ஓய்வு பெற்ற கிராம அலுவலர் ஜே/86)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கலட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது பொற்பதி வீதி கொக்குவிலில் வசித்தவருமான சிவசிவாயப்பிள்ளை ரவீந்திரதாஸ் நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

### கணபதிப்பிள்ளை கந்தவனம்



திக்கம் அல்வாயைப் பிறப்பிடமாகவும் கொற்றாவத்தை வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஊரணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### அருட்தந்தை ச்காயதேவன் அந்தோனி



(அருட்பணியாளர், பங்குத்தந்தை மன்னார் மறை மாவட்டம்)

மன்னார் முருங்கன் சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சகாயதேவன் அந்தோனி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் மன்னார் ஆயர் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இன்று வியாழக்கிழமை மன்னார் அருட்தந்தையர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி.சிதம்பரமூர்த்தி இலட்சுமிப்பிள்ளை



வட்டுக்கோட்டை வட்டு மேற்கு கண்ணகை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பர மூர்த்தி இலட்சுமிப்பிள்ளை கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி.காராளசிங்கம் இலட்சாவதி



சங்கரத்தைஎய்ப் பிறப்பிடமாகவும் வட்டு.கிழக்கு சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட காராளசிங்கம் இலட்சாவதி நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுக்காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வழுக்கையாற்று இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

### அருளம்பலம் சண்முகலிங்கம்



வவுனியா கனகராயன்குளத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் சண்முகலிங்கம் கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் Chapel Ridge Funeral Home, 8911 Wood bine Ave, Markhamm ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் தகனம் செய்யப்படும்.

### திருமதி.இளையதம்பி தெய்வானைப்பிள்ளை



கைதடியைப் பிறப்பிடமாகவும், மலேசியா, இங்கிலாந்து ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி தெய்வானைப்பிள்ளை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 9 மணி தொடக்கம் 11 மணி வரை St. Marylebone Crematorium, East End Road, East Finchley, London, N2 ORZ, United Kingdom என்னும் முகவரியில் நடைபெறும்.

### வைரவநாதர் விஸ்வலிங்கம்



(இளைப்பாறிய ஆசிரியர்)

விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கு மத்திய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவநாதர் விஸ்வலிங்கம் கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

### இரத்தினம் சிவானந்தம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Hagen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சிவானந்தம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1மணி வரை Stadt Andachts Halle Haspe, Budding str 34a, 58135 Hagen, Germany என்னும் முகவரியில் நடைபெறும்.

### வீரபாகு ஜெயரட்ணம்



உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட வீரபாகு ஜெயரட்ணம் கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருவுடல் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிதொடக்கம் பி.ப 1.30 மணிவரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markhamm ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் திருவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி.மொன்பேட் மேரி ஜோன்ஒவ் ஆர்க்



சுன்னாகம் சூராவத்தை நாக்கியம்புலத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மென்பேட் மேரி ஜோன்ஒவ்ஆர்க் நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### கனகரட்ணம் இரத்தினசபாபதி



(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் இல.20/2 பாரதி வீதி கச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் இரத்தினசபாபதி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளுடன் சிக்கினால் இனி கடூழியச் சிறைத்தண்டனை!

(கொழும்பு)

**நாட்டில் கிராமிய மட்டத்தில் மிகத் துரிதமாக விஸ்தரிக்கப்பட்டு வரும் சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடும் தரப்பினருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது.**

இதன்படி 3 தடவைகளுக்கு மேலாக குற்றச் செயல்களில் ஈடுபட்ட தரப்பினர்களுக்கு எதிராக அபராதங்களை விதிப்பதை விட கடூழிய சிறைத்தண்டனையை விதிக்க தீர்மானித்துள்ளதாக நீதி மற்றும் தொழிலுறவு அமைச்சு நேற்று முன்தினம் அதிரடியாக அறிவித்தது.

இது தொடர்பாக நேற்று நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தலைமையில் போதைப்பொருள் தடுப்பு ஒன்றிணைந்த செயலணி அமர்வுகளின் போது ஆராயப்பட்டுள்ளது.

கசிப்பு. கஞ்சா, கள்ளு போன்ற போதைப்பொருள் தயாரிப்பு மற்றும் விநியோக செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினாலும் அபராதம் செலுத்தி அவர்கள் விடுதலையாகும் நிலைமை உள்ளது.

பின்னர் அவர்கள் மீண்டும் அதே குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இந்தநிலைமைகளை தவிர்க்கும் வகையில் புதிய சட்டத்திட்டங்கள் வலுப்படுத்தப் படவுள்ளதாக அந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# இரட்டை வெளிநாட்டு கொள்கை

தற்போதைய அரசாங்கம் இரட்டை வெளிநாட்டு கொள்கையை பின்பற்றுவதாக தேசிய சுதந்திர முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது. கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அரசியல் குழு உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி இங்கிலாந்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் இந்தியப் பிரதமர் இலங்கை வரவுள்ள நிலையிலும் சீனாவுடன் தொடர்புகள் என தெரிவித்து துறைமுக செயற்றிட்டத்தை கைவிட்டுள்ளனர்.

இந்தியாவின் பிரதமரை மகிழ்விக்கவும் பிரித்தானிய பிரதமரை சந்தோசப்படுத்தவும் ஒரு கொள்கையை பின்பற்றுகின்றனர். ஜனாதிபதி சீனாவிற்கான விஜயத்தை மேற்கொள்ளும் போதும் துறைமுக செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படும். இன்று இருந்த குடும்ப நிர்வாகத்திற்கு பதிலாக இனறு 100 குடும்ப நிர்வாகம் உருவாகியுள்ளதாக பியசிறி விஜேநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 100 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 60 | 100 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 | 80 | 60-80 | 80 |
| தக்காளி | 20 | 50 | 70 | 50 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 60 | 40 | 50 |
| கோவா | 40 | 50 | 60 | 60 | 40 | 40 |
| கரட் | 200 | 120 | 100 | 120 | 100-120 | 100 |
| பூசணி | 60 | 60 | 40 | 80 | 60-80 | 60 |
| புடோல் | 40 | 50 | 60 | 60 | 50 | 50 |
| வாழைக்காய் | 100 | 60 | 60 | 80 | 50-80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 70 | 80-100 | 60-80 | 40 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 60 | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 70 | 80 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 60 | 100 | 40-50 | 40 |
| கருணைக் கிழங்கு | — | 60 | 60 | 80 | 50 | 50 |
| பயற்றங்காய் | 100 | 80 | 50 | 120 | 60 | 60 |
| லீக்ஸ் | 200 | 160 | 120 | 200 | 160 | 160 |
| பீற்றூட் | 50 | 60 | — | 80 | 40 | 50 |
| கறிமிளகாய் | 250 | 140 | 100 | 120 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 150-250 | 400 | 160 | 320 | 200 | 400 |
| போஞ்சி | 120 | 120 | 70 | 160 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 50 | 80 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 30 | 60 | 50 | 40 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50 | 40-50 | 60 | 60 |
| இராசவள்ளி | 120 | 140 | 100 | 100 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 80-120 | 150 | — | 160 | 80 | 100 |
| முள்ளங்கி | 20 | 20 | — | 60 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 50 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

# ஜயந்த கெட்டகொட சு.கட்சியில் இணைந்து கொள்ளத்தீர்மானம்

சர்ச்சைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் தலைமையிலான ஜனநாயகக் கட்சியின் பிரதித் தலைவராக ஜயந்த கெட்டகொட கடமையாற்றி வந்தார்.

இதேவேளை ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ளத் தீர்மானித்துள்ளதாக ஜயந்த கெட்டகொட ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் ஊடாக போட்டியிட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

எந்த ஆசனத்தின் ஊடாக போட்டியிடுவது என்பது குறித்து இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற ஆசனத்தினை மீள வழங்கவில்லை என கெட்டகொடவிற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 308

சாகி சாகித்தியா




மோகன் ராஜ்




பவானி சங்கர்




ரகு ரகுராம்




தனு தனுசன்




மாது மாதுசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இந்தியப் பிரதமரின் வருகை தீர்வை தருமா?"

## இந்திய வீட்டுத்திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் வவுனியாவில் நேற்று கவனயீர்ப்பு ஊர்வலம்

(குருமன்காடு)

வவுனியாவில் வழங்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டத்தில் முறைகேடுகள் இருப்பதாகவும் தெரிவித்து யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறியோருக்கு இந்திய வீட்டுத்திட்டத்தை வழங்கக் கோரியும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு, மீள்குடியோருக்கான நலன் பேணும் அமைப்பு ஆகியன இணைந்து கவனயீர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தியதுடன் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர். இக்கவனயீர்ப்பு ஊர்வலம் நேற்று முற்பகல் 10 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் ஆரம்பித்து ஏ-9 வீதி வழியாக வவுனியா மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.



வவுனியா மாவட்ட செயலக மைதானத்தில் ஒன்று கூடிய பாதிக்கப்பட்ட மக்கள் இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட போது தமிழ் மக்களாகிய நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த அரசாங்கம் ஜனாதிபதி செயலணி ஊடாக பாரபட்சமாக வீடுகளை வழங்கியிருந்ததாகவும் தெரிவித்தனர்.

அத்தோடு இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வருகையானது தீர்வை தருமா?, வாழ்ந்த வீட்டையும் இடித்தாய், தந்த வீட்டையும் பறித்தாய், அடிக்காதே! அடிக்காதே! தமிழர்கள் வயிற்றில் அடிக்காதே!, வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் இழந்து விட்டோம் என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கிப் பிடித்தவாறு அம்மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அதன் பின்னர் ஜனாதிபதி மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு வழங்குமாறு கோரி வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திரவிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இம்மகஜரினை வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாணசபை உறுப்பினர்கள், பிரஜைகள் குழு மற்றும் மீள்குடியேறியோருக்கான நலன் பேணும் அமைப்பினர் இணைந்து கையளித்தனர்.

அத்துடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட அரச அதிபர் அங்கு குழுமி நின்ற மக்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், இம் மகஜரை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு தான் அனுப்பி வைப்பதாகவும் அரசாங்கத்தால் நடை முறைப்படுத்தப்படும் விடயங்களையே தன்னால் மேற்கொள்ள முடியுமே தவிர வேறு எதனையும் செய்ய முடியாது எனவும் வீட்டுத்திட்டம் தொடர்பில் கவனமெடுப்பதாகவும் தெரிவித்ததையடுத்து ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் கலைந்து சென்றிருந்தனர். இந்த ஊர்வலத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், விநோ நோதராதலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.தியாகராஜா, ஆர். இந்திரராஜா, ஜி.ரி. லிங்கநாதன், முன்னாள் நகரசபை உபதலைவர் சந்திரகுலசிங்கம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் ந.ரஜீபன், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் வன்னி அமைப்பாளர் எஸ்.கோவிந்தராஜ் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## வெலிஓயா பிரதேச செயலக பிரிவில் 445 பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழுள்ள வெலிஓயா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 9 கிராம சேவையாளர் பிரிவுகளில் வன்னி போர் நடவடிக்கை காரணமாகவும் மற்றும் ஏனைய காரணங்களாலும் வாழ்க்கைத்துணையை இழந்த நிலையில் 445 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களும் கணவனால் கைவிடப்பட்ட நிலையில், 196 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் உட்பட மனைவியை இழந்த நிலையில் 225 தபுதாரர்களும் வாழ்வாதாரத்திற்குரிய தொழில் வாய்ப்புக்களின்றி தமது குடும்ப சுமையை சுமக்க முடியாது அவலவாழ்க்கை வாழ்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் மீள்குடியேற்றத்தின் பின்னர் புதிதாக உருவாக்கப்பட்ட ஆறாவது பிரதேச செயலக பிரிவு வெலிஓயா ஆகும்.

இங்கு 9 கிராம சேவையாளர் பிரிவுகளில் தமிழ், சிங்கள மக்கள் உள்ளடங்கிய 3 ஆயிரத்து 336 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 189 குடும்ப அங்கத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் 445 குடும்பங்கள் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு வாழ்வதாகவும் போரின் பின்னர் எழுந்த பொருளாதார பிரச்சினைகள் உட்பட குடும்ப பிணக்குகள் காரணமாக 196 பெண்கள் கணவனால் கைவிடப்பட்ட நிலையில் வசிக்கின்றனர்.

இக்குடும்பங்களின் சுமையை சுமக்கும் அவலநிலை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அத்துடன் தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் அவல நிலைப்படுகின்றனர்.

இவர்களுடன் போர் நட்வடிக்கைகள் காரணமாகவும் மற்றும் ஏனைய வழிகளாலும் மனைவியை இழந்த நிலையில் உள்ள 225 ஆண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் தமது பிள்ளைகளைப் பராமரிக்க முடியாமலும் தொழில் முயற்சிகள் இன்றியும் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே தமக்கான வாழ்வாதார உதவிகளை புலம்பெயர்வாழ் உறவுகளும் மற்றும் அரச, அரசசார்பற்ற அமைப்புக்களும் அமைத்துத் தரவேண்டுமென பாதிக்கப்பட்டுள்ளவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)

## பாலத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

கிளிநொச்சி கோணாவில் கிராமத்தினூடாக செல்லும் வீதியில் குளத்துடன் அமைந்துள்ள பாலம், விசேட திட்டத்தின் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இந்த பாலம் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் உள்ளதால் இந்த பாலத்தினூடாக போக்குவரத்து செய்யும் வாகனங்களும் பொதுமக்களும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

ஆயிரத்து 100 குடும்பங்கள் வாழ்கின்ற கோணாவில் கிராமத்தின முக்கிய பாலமாக இந்தப் பாலம் விளங்குகின்றது. மீள்குடியேற்றம்



மேற்கொள்ளப்பட்டு 5 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இந்தப் பாலம் இன்னமும் புனரமைக்கப்படாமல் இருக்கின்றது. இது தொடர்பில் மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவிக்கையில்,

அக்கராயன்குளத்திலிருந்து வலதுகரை வாய்க்கால் ஊடாக கோணாவில் கிராமத்துக்கு நீர் செல்லும் வாய்க்காலுக்கு அருகில் இந்த பாலம் அமைந்துள்ளது.

அக்கராயன்குளத்தின் வாய்க்கால்கள் புனரமைக்கப்படும்போது இந்த பாலம் புனரமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. வீதி அபிவிருத்தித் திணைக்களமும் இப்பாலத்தை புனரமைக்க முயற்சி மேற்கொண்டுள்ளது.

நீர்ப்பாசன திணைக்களத்துக்கும் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கும் இப்பாலத்தை புனரமைக்கவேண்டிய தேவையுள்ளது. எனவே, விசேட திட்டத்தின் மூலம் இந்த பாலத்தை புனரமைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். (2)




## மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ்ப்பெண்களின் பங்களிப்பு குறைவாகவுள்ளது வினோ எம்.பி. தெரிவிப்பு

(வவுனியா)

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழுத்தங்களை பிரயோகியுங்கள் என்று கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்ட போது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் அவர், "நாடாளுமன்ற அரசியலில் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பெண்கள் கணிசமான அளவில் பங்கேற்கும் வேளையில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் பெண்களின் அரசியல் வகிபாகம் மிக மிகக் குறைவாகவுள்ளது.

அதேபோல், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்களிலும் தமிழ்ப் பெண்களின் பங்களிப்பு மிக மிகக் குறைவாகவுள்ளது.

அதற்கு ஆண்கள் காரணம் என்று சாட்டை கூறமுடியாது. அதற்கும் நீங்களே காரணமாக உள்ளீர்கள்.

பெண் அமைப்புகள் அல்லது பெண்ணியியல்வாதிகள், பெண்களின் உரிமைக்காக போராடுகின்றவர்கள் அல்லது அமைப்புக்கள் வழங்குகின்ற அழுத்தங்களின் மூலமே அரசியல் அமைப்பில் கூட பெண்களுக்கு கணிசமான ஒதுக்கீட்டை கொண்டுவரமுடியும்.

இவ்வாறான செயற்பாடு மூலமே பெணகளின் போராட்டங்கள், புரட்சிகளுக்கு அப்பால், தங்களுககான அரசியல் அந்தஸ்தை பெற்று வலுவாக குரல் கொடுக்கமுடியும்.

அதுவே பெண்களுக்கான போராட்டங்களில் பயனுள்ளதாக இருக்கும். இன்று வடமாகாணசபையில் இரண்டு பெண்கள் இருக்கின்றார்கள். அவர்கள் தாங்கள் சார்ந்துள்ள துறைகளின் மூலம் போராடுகின்றார்கள்.

ஆனால், அது போதாமலுள்ளது. உள்ளூராட்சிமன்ற வேட்புமனுவில் 40 சதவீதம் இளைஞர்களது பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. அதுபோல் பெண்களது பிரதிநிதித்துவத்தையும் கோர வேண்டும்" என்றார். (2)

## கசிப்பு உற்பத்தியைத் தடுக்க விசேட பொலிஸ் குழு அமைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கசிப்பு உற்பத்தி உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்குரிய விசேட செயற்பாடொன்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தால் முன்னெடுக்கப்படுவதாக கிளிநொச்சி பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் ஊரியான், தர்மபுரம் ஆகிய பகுதிகளில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை என்பன அதிகரித்துள்ளன. இவற்றால் சமூகத்தில் பல பிரச்சினைகளான குடும்ப சச்சரவுகள், கைகலப்புக்கள் என்பவற்றுடன் கொலைகள் கூட இடம்பெற்று வருகின்றன என்று அவர் சுட்டிக் காட்டினார்.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையை தடுத்து நிறுத்துவதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு, 24 மணிநேரமும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. இதனால், கசிப்பு காய்ச்சி விற்பனை செய்பவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

தமிழ் தெரிந்த பொலிஸார் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். சட்டவிரோத செயல்களுக்கு எதிராக தொடர்ந்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் கூறினார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களை தீவிரவாதிகளாக மாற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினர்!

இஸ்ரேல் உளவாளி என கருதப்படும் ஒருவனை, 10 வயது மதிக்கத்தக்க சிறுவன் சுட்டுக் கொல்லும் காணொலி காட்சியை வெளியிட்டு ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் வழக்கமாக தண்டனை நிறைவேற்றும் போது, அந்த இயக்கத்தை சேர்ந்த முகமூடி அணிந்த ஒருவர் தான் சுட்டுக் கொல்வது, தலையை துண்டிப்பது போன்றவற்றை செய்வார்கள். ஆனால் சிறுவர்களும் கொலை சம்பவங்களில் ஈடுபடுவது உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



இஸ்ரேலை சேர்ந்த முகமது முஸ்லாம் என்ற இளைஞர் ஐ.எஸ். ஐ.எஸ் இயக்கத்தில் சேர்ந்து செயற்பட்டு வந்தார். அவரை, இஸ்ரேலின் உளவு நிறுவனமான மொசாட்டுக்கு உளவு வேலை பார்த்ததாக கூறி, 10 வயது சிறுவனை கொண்டு ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றுள்ளனர்.

முகமுது முஸ்லாமை சிறுவன் தலையில் சுட்டுக்கொல்லும் அதிர்ச்சி தரக்கூடிய காணொலியை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்த காணொலியின் நம்பகத்தன்மை பற்றி சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 10 வயதுச் சிறுமி மனித வெடிகுண்டு

## 34 பேர் பலி!

(அபுஜா)

நைஜீரியாவின் வடமேற்கு பகுதியில் மைதுகுரி நகரம் உள்ளது. இங்கு நகரின் மையத்தில் சந்தை உள்ளது. அங்கு அதிக அளவில் மக்கள் கூடுவர். நேற்று முன்தினம் மதியம் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. அப்போது கூட்டத்துக்குள் புகுந்த தற்கொலை படை சிறுமி (வயது-10) தனது உடலில் கட்டியிருந்த சக்தி வாய்ந்த குண்டுகளை வெடிக்க செய்தாள்.

இந்த தாக்குதலில் 34 பேர் அதே இடத்தில் உடல் சிதறி பலியாகினர். கடைகள் மற்றும் கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின. இடிபாடுகளில் சிக்கி பலர் காயம் அடைந்தனர்.

இத்தாக்குதலுக்கு எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. ஆனால் இதில் 'போகோஹறாம்' தீவிரவாத அமைப்பு சம்பந்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவில் போகோஹறாம் தீவிரவாதிகள் சிறுவர்களை கடத்திச் சென்று இவ்வாறான நாச வேலைகளை தொடர்ந்து வருவது உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்நிலையில் மேற்படி பத்து வயதுச் சிறுமியின் வெடி குண்டுத் தாக்குதல் உலகத் தலைவர்களையும் ஐக்கிய நாடுகள் சபையையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. (இ-5)

# இராணுவத் தாக்குதலில் 300 தீவிரவாதிகள் பலி!

(நியாமி)

**நைஜீரியாவில் போகோஹறாம் தீவிரவாதிகளுக்கு எதிராக போராடி வரும் கூட்டு இராணுவப் படையினர் நடத்திய திடீர்த் தாக்குதலில் 300 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதுடன் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த இரு நகரங்களையும் மீட்டுள்ளனர்.**

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் நாசவேலைகளில் ஈடுபட்டுவரும் போகோஹறாம் தீவிரவாதிகள் அயல் நாடுகளான நைஜர் மற்றும் சாட் நாடுகளிலும் புகுந்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள். அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் நைஜீரிய இராணுவத்துடன் நைஜர், சாட் மற்றும் கேமரூன் நாடுகளின் படைகளும் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில் நைஜர் மற்றும் சாட் நாடுகளின் கூட்டு இராணுவப் படையைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வீரர்கள் தீவிரவாதிகளின் பிடியில் உள்ள மலாம் படோவ்ரி மற்றும் டமாஸ்க் நகரங்களை மீட்கும் அதிரடி நடவடிக்கையில் கடந்த திங்கட்கிழமை ஈடுபட்டனர். இதில் தீவிரவாதிகள் 300 பேர் கொல்லப்பட்டனர். 2 நகரங்களும் மீட்கப்பட்டன. இந்தச் சண்டையில் 30 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களும் படுகாயம் அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# லண்டனில் தோண்டத் தோண்ட வெளிப்படும் எலும்புக் கூடுகள்

(லண்டன்)

லண்டனில் புகையிரத சுரங்கப் பாதையில் தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள் வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. லண்டனில் புகையிரத சுரங்கப் பாதை அமைக்க பள்ளம் தோண்டும் போது, யாரும் எதிர்பாராத வகையில் ஆயிரக்கணக்கான எலும்புக் கூடுகள் மண்ணில் புதைந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டன.

உடனடியாக சுரங்கப் பாதை தோண்டும் பணிகள் நிறுத்தப்பட்டு, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் மேற்கொண்ட ஆய்வில், லண்டனின் இந்தப் பகுதி, பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு இடுகாட்டுப் பகுதியாக இருந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மனித எலும்புக் கூடுகளை ஆராய்ச்சி செய்வதன் மூலம், லண்டனில் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு மனித இனம் வாழ்ந்திருக்கிறது என்பதைக்கண்டறியலாம் என்றும் தெரிய வந்துள்ளது. சுமார் 16 மற்றும் 17 ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த சுமார் 3000 எலும்புக் கூடுகள் அப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு குழந்தையின் எலும்புக்கூடும், அது புதைக்கப்பட்ட மரத்தால் ஆன கல்லறைப் பெட்டியும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளது [illegible] தக்கது. (இ-5)






# போகோஹறாம் தீவிரவாதிகளின் முகாமிலிருந்த 80 சிறார்கள் மீட்பு

ஆபிரிக்காவின் கேமரூன் பகுதியில் உள்ள போகோஹறாம் தீவிர வாதிகளின் முகாமிலிருந்த சுமார் 80 சிறார்கள் மீட்கப்பட்டுள்ளனர். எனினும், அவர்களின் பெயர் மற்றும் எந்த பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விபரங்கள் அறியப்படவில்லை என மீட்புப் படையணியின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

5 தொடக்கம் 18 வயது மட்டங்களை உடைய சிறார்களே தம்மால் மீட்கப்பட்டதாக அமெரிக்காவை தலைமையகமாக கொண்ட தன்னிச்சையான தேசிய மீட்பு நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், குறித்த சிறார்கள் ஆங்கிலம், பிரான்ஸ் அல்லது ஆபிரிக்காவின் உள்ளூர் மொழிகள் எதிலும் உரையாட முடியாத நிலையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த சிறார்கள் கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் வடக்கு கேமரூனில் உள்ள முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

நைஜீரியாவைமையமாககொண்ட போகோஹறாம் தீவிரவாதிகள் தமது போராட்டங்களை கேமரூன் வரை விஸ்தரித்துள்ளமை இதனூடாக புலப்படுகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு நைஜீரியாவில் இஸ்லாமிய அரசியல் அல்லது சமயத்துறை கடமைப் பணிமனை மற்றும் நிர்வாகத்தை நிலைநாட்டும் நோக்கிலேயே போகோஹறாம் தீவிரவாதிகள் தமது மோதல்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன்படி, பல நகரங்களையும், கிராமங்களையும் கைப்பற்றியுள்ள தீவிரவாதிகள், அண்மையில் சிரியா மற்றும் ஈராக்கின் பெருவாரியான பகுதிகளை தம்வசம் கொண்டுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கும் தமது ஆதரவை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆட்சி மாற்றத்தின் பின் சீனா எதிர்கொள்ளும் சவால்கள்...!



...இத்துறைமுக அபிவிருத்தித் திட்டம் தொடர்பான சூழல் மதிப்பீடுகள் தொடர்பான அறிக்கையை சிறப்பு ஆணைக்குழு ஒன்று மீள ஆராய்ந்த பின்னர், அமைச்சரவையின் பிரதி ஆணைக்குழு தனது தலைமையின் கீழ் ஏனைய பாதிப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்த பின்னரே இத்திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாகத் தீர்மானிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றில் தெளிவாக அறிவித்துள்ளார.

'இது மிகப் பெரிய திட்டம். இது சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டமாகும். இவ்வாறான திட்டங்களை நாங்கள் திடீரென நிறுத்த முடியாது. இத்திட்டம் முற்றுமுழுதாக நிறுத்தப்பட வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டை நாங்கள் எடுக்கவில்லை' என ரணில் விக்ரமசிங்க இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை எடுத்து விளக்கியுள்ளார்.

2012 தொடக்கம் 2014 வரை 2.18 மில்லியன் டொலர்கள் முதலீடு செய்யப்பட்ட சீனாவின் உதவி இலங்கைக்கு மேலும் தேவைப்படும் என்பதையே கரையோர மீள்கட்டுமானத் திட்டம் சுட்டிக்காட்டுகிறது. கடந்த ஆண்டு கைச்சாத்திடப்பட்ட சீனா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்பாடு வருகின்ற ஆண்டுகளில் இருதரப்பினதும் வர்த்தக மற்றும் வணிகச் செயற்பாடுகளை மேலும ஊக்குவிப்பதற்கான வழியை ஏற்படுத்தும்.

ஏற்கனவே இலங்கையில் சீன சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதன்மூலம் சீனாவின் மிகவும் விருப்பத்திற்குரிய சுற்றுலா மையமாக இலங்கை மாறுவதற்கான நல்லதொரு வாய்ப்புக் காணப்படுகிறது.

கடந்த மாதம் 27, 28 ஆம் திகதிகளில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்ததன் மூலம், மார்ச் மாதத்தில் சிறிசேனவின் சீனாவுக்கான சுற்றுப் பயணத்திற்கான தயார்ப்படுத்தலை மேற்கொண்டிருந்தார்.

இலங்கையில் தற்போது சர்ச்சைக்குரிய கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக சீனாவுக்கான தனது சுற்றுப் பயணத்தின் போது சீன வெளியுறவு அமைச்சரைச் சந்தித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தனது ஒப்புதலை வழங்கியுள்ளதையே 'உலகில் வளர்ந்து வரும் வல்லரசு நாடுகளில் ஒன்றான சீனாவின் முதலீட்டை நாம் எப்போதும் வரவேற்போம்' என மங்கள சமரவீரவின் கருத்து உறுதிப்படுத்துகிறது.

இத்திட்டம் தொடர்பான மீள் பரிசோதனையானது சீனாவை இலக்காகக் கொண்டதல்ல எனவும், ஏனைய நாடுகளால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் மீள ஆராய்வது தமது வழமை எனவும் மங்கள சமரவீர ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

'சீன முதலீட்டுடன் தொடர்புபட்ட எந்தவொரு விடயம் தொடர்பாக நாம் இறுதித் தீர்மானம் எட்டுவதற்கு முன்னர் சீன அரசாங்கத்துடன் இது தொடர்பாக கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டு, கலந்துரையாடுவோம்' இலங்கை வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

'இலங்கையில் புதிய மறுமலர்ச்சி ஏற்படுவதன் மூலம் இங்கு சட்ட ஆட்சி மற்றும் வெளிப்படையான ஆட்சி போன்றன இடம்பெறும் என நான் நம்புகிறேன். இதற்கு முன்னர் இருந்ததை விட இலங்கையில் முதலீடு செய்வதற்கு சீன முதலீட்டாளர்கள் முன்வருவார்கள்' என சமரவீர குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை ஜனாதிபதி சீனாவுக்கான தனது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு சீன ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடாத்தும்போது அவரது நிகழ்ச்சி நிரலில் இலங்கையில் சீனாவின் எதிர்கால முதலீடுகள் தொடர்பான விடயம் முன்னுரிமைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கலாம். சீனத் திட்டங்கள் சிலவற்றில் மீள்சமரசத்தை இலங்கை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதுஎவ்வாறிருப்பினும், ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் நடைமுறைகள் தொடர்பாக மீள் சமரசத்திற்கு சீனா தமது ஒப்புதலை வழங்குவதாக மார்ச் 2, 2015 அன்று சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் அறிவித்துள்ளதா னது சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறது.

'இலங்கைத் தரப்பின் வேண்டுகோளுக்கு அமைவாகவே' கடன்கள் வழங்கப்பட்டன என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

'இலங்கையினதும் அதன் மக்களினதும் நலன் கருதியே கடன் ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்படுகிறது. இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை அதிகரிப்பதற்கான சாதகமான பங்களிப்பை இந்தக் கடன் வழங்கியுள்ளது.

இலங்கை அமைச்சரின் சீனாவுக்கான பயணமானது இலங்கைத் தரப்பினர் சீனாவின் உதவியை வரவேற்கின்றனர் என்பதையே சுட்டி நிற்கிறது. இரண்டு நாடுகளினதும் இரண்டு நாட்டு மக்களினதும் அடிப்படை நலன்களை தளமாகக் கொண்டு எமது நடைமுறை சார் ஒத்துழைப்பு முன்னெடுத்துச் செல்லப்படும்' என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மேலும் சுட்டிக்காட்டினார்.

எனினும், சீன உதவிகளை அல்லது திட்டங்களை நிறுத்துவதை விட சீனாவின் திட்ட அமுலாக்கலில் ராஜபக்ச, அவரது குடும்பத்தினர் மற்றும் அவரது கூட்டாளிகளால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களை வெளிக்கொண்டு வருவதே சிறிசேன அரசாங்கத்தின் பிரதான நோக்கம்போல் தெரிகிறது.

மூலோபாய பாதுகாப்பு விடயத்தைப் பொறுத்தளவில் சீனாவானது சிறிசேன அரசாங்கத்தின் இரு வேறு நிலைப்பாடுகள் தொடர்பாக கவலை கொள்கிறது. இதில் ஒன்று இந்தியாவுடனான இலங்கையின் நெருங்கிய உறவில் விரிசலை ஏற்படுத்தி சீனாவுடன் நல்லுறவைப் பேணிய ராஜபக்சவின் தவறைத் திருத்துவேன் என இலங்கையின் புதிய அரசாங்கம் மீண்டும் மீண்டும் உறுதி வழங்குவதுடன் தொடர்புபட்டதாகும்.

மற்றையது 'சீனாவின் கனவு' என சீன ஜனாதிபதியின் கூற்றை உறுதிப்படுத்தும் விதமாக தென்னாசியாவிலும் இந்திய மாக்கடல் பிராந்தியத்திலும் செல்வாக்குச் செலுத்தும் சீனாவின் திட்டத்துடன் தொடர்புபட்டதாகும்.

ராஜபக்ச தனது ஆட்சிக் காலத்தில் சீனாவின் செல்வாக்கைப் பெற்றுக் கொண்டதன் மூலம் சீனா, இலங்கைத் தீவில் தனது இருப்பைப் பலப்படுத்தவும் அதன் மூலம் இந்தியா மற்றும் இந்திய மாக்கடல் பிராந்தியத்துடன் தொடர்புபட்ட மூலோபாய இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் வழிவகுத்துள்ளது.

சீனாவின் உதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட துறைமுக அபிவிருத்தி மற்றும் ஏனைய கட்டுமானத் திட்டங்கள், சீன இராணுவம் குறிப்பாக சீனக் கடற்படை இந்தியத் தீபகற்பத்தின் கடற்பரப்பில் தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான வழியை உருவாக்கியுள்ளன.

இந்த வசதி வாய்ப்புக்கள் வரும் ஆண்டுகளில் சீனக் கடற்படை இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் நிலவும் இந்தியாவின் மூலோபாய மேலாதிக்கத்தை சவாலாக்குவதற்குப் பயன்படும்.

இந்திய மாக்கடலில் இராணுவ நிலைகளைப் பலப்படுத்தும் நோக்குடன் ஏற்கனவே சீனாவின் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் உட்பட சீனக் கடற்படைக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்றுள்ளன. சீனா தனது கரையோர பட்டுப் பாதைத் திட்டத்தை நிறைவு செய்யும் போது இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் சீனாவின் அதிகரித்த செல்வாக்கைப் பாதுகாப்பதற்காக சீன கடற்படைக் கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

2014 செப்ரெம்பரில் சீன ஜனாதிபதி இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான தனது முதலாவது பயணத்தை மேற்கொண்டபோது, இவ்விரு நாடுகளும் தாம் சீனாவின் கரையோர பட்டுப்பாதைத் திட்டத்தில் இணைவதற்குத் தயாராக உள்ளதாக தெரிவித்திருந்தன. இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பாகவும் கருத்திற்கொள்ளாது இலங்கை தனது பொருளாதார நலன்களை அடைந்துகொள்வதற்காக சீனாவுடன் கைகோர்த்து நின்றது.

இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்த சீன ஜனாதிபதி செப்ரெம்பர் 16, 2014 அன்று ராஜபக்சவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான ஒத்துழைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திட்டார்.

'பாதுகாப்பு ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதற்கும், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்துடன் தொடர்புபட்ட பாதுகாப்பு விவகாரங்களில் ஒத்துழைப்பை வழங்குவதற்கும் இராணுவம் சார் பயிற்சிகளை பரிமாறிக் கொள்வதற்கும் வளங்களை வழங்குவதற்காக' உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதாக இவ்விரு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

தென்னாசியாவிலும் இந்திய மாக்கடல் பிராந்தியத்திலும் சீனா தனது பொருளாதார மற்றும் இராணுவ ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான சீன ஜனாதிபதியின் மூலோபாய முயற்சிகளுக்கான முக்கிய சக்தியாக தற்போது இலங்கை காணப்படுகிறது.

சீனாவின் கடற்படையானது இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் மிகவும் அண்மைக்காலத்தில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்த முடியாவிட்டாலும்கூட, சீனா இதற்கான சாத்தியத்தை உருவாக்கும் போது இது இந்தியா மற்றும் தென்னாசியாவுக்கு மட்டுமல்ல இந்திய மாக்கடலை அதிகம் பயன்படுத்தும் அமெரிக்கா, யப்பான், அவுஸ்திரேலியா உட்பட இதன் மேற்குலக மற்றும் தென்கிழக்காசிய நட்பு நாடுகளுக்கும் அச்சுறுத்தலாகவே அமையும்.

(தொடரும்)

-நித்யபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசு அமைவதை நான் விரும்பவேயில்லை

## ஜோன் செனவிரட்ன போர்க்கொடி



தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்படுவதனை தாமும் விரும்பவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

சில காரணங்களுக்காக இவ்வாறு தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவதனை விரும்பவில்லை.

நாடு ஸ்திரமற்ற நிலைமைகளை எதிர்நோக்கினால் தேசிய அரசாங்கமொன்றை அமைக்க முடியும்.

தற்போதைய நிலைமையில் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

தேசிய அரசாங்கம் பற்றிய எனது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது.

இது குறித்து விரைவில் கட்சிக்கு அறிவிப்பேன் என ஜோன் செனவிரட்ன சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கட்சியின் தீர்மானத்திற்கு முரணான வகையில் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# குற்றவாளிகளை காப்பாற்றும் நடவடிக்கைகளில் அரசாங்கம்

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

**முன்னைய அரசாங்கத்தின் குற்றங்களை மறைத்து குற்றவாளிகளை காப்பாற்றும் நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொள்கின்றது. கடந்தகால தவறு களை இவர்களும் செய்யக்கூடாது எனவும் தெரிவிக்கும் மக்கள் விடுதலை முன்னணி ஐக்கிய தேசியக் கட்சிக்கு கட்டுப்படவில்லை எனவும் ஆனால் தேசிய அரசுக்கு எதிரிகளில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.**

மக்கள் விடுதலை முன்னணியினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆட்சியில் பல தவறுகள் இடம்பெற்றதுடன் அனைத்து துறைகளிலும் ஊழலும் கொள்ளையும் இடம்பெற்றன. அதனை தாங்கிக் கொள்ள முடியாத சூழ்நிலையிலேயே மக்களாக ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தியிருந்தனர். மத்திய வங்கி உள்ளிட்ட நாட்டின் மூலதனத்தினை தீர்மானிக்கும் சகல விடயங்களிலும் முன்னைய குடும்ப அரசியலின் ஆதிக்கம் காணப்பட்டது.

அதனை உடனடியாக ஆதாரமெதுவுமின்றி தண்டிக்க முடியாது என்பது எமக்குத் தெரியும். ஆனால் நிரூபிக்க முடிந்த பல குற்றச்சாட்டுக்கள் இருந்தும் அவை தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காதது ஏன் என்பதும் விசாரணைகள் எடுக்கப்படாததும் ஏன் என மக்கள் கேள்வி எழுப்பும் நிலை ஏற்பட்டு விட்டது.

முன்னைய அரசாங்கத்தின் குற்றங்களை மறைத்து குற்றவாளிகளை பாதுகாப்பதில் இந்த அரசாங்கம் துணை நிற்கின்றது. ஆரம்பமே இவ்வாறு குற்றச்சாட்டுக்களுடன் அரசாங்கம் பயணிக்குமாயின் எதிர்வரும் காலங்களில் நிலைமைகள் என்னவாகும்? எனவே இவ்விடயத்தில் பாரிய குற்றச்சாட்டுக்கள் இருக்கும் நபர்களுக்கு எதிராக அரசாங்கம் காலம் கடத்தி நடவடிக்கை எடுப்பதும் குற்றவாளிகளின் குற்றங்களை மூடி மறைக்க முயற்சிப்பதையும் மக்கள் விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

மேலும் நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கட்டுப்பட்டுள்ளதாக எழுப்பும் கேள்விகள் அனைத்துமே தவறானவை. ஜே.வி.பி யாருக்கும் அடி பணியும் கட்சியோ யாரையும் அடக்கும் கட்சியோ அல்ல. எமக்கு மக்களின் பலம் உள்ளது. அவர்களுக்காகவே குரல் எழுப்புகின்றோம். இன்று நாம் தேசிய அரசின் அனைத்து செயற்பாடுகளையும் விமர்சிக்க முடியும் என்றார்.

ஆனால் அது அர்த்தமற்றது. அதேபோல் தேசிய அரசின் பிளவுகளை சரி செய்ய அதை விட சிறந்த மார்க்கம் வேறொன்றும் இல்லை. எனவே நாமும் தேசிய அரசின் எல்லா செயற்பாடுகளுடன் இணைந்து செல்ல வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ரஞ்சன் ராமநாயக்க வீரவன்சவுக்கு சவால்

கால்நடை அபிவிருத்தித்துறை பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவை பகிரங்க விவாதத்துக்கு அழைத்துள்ளார்.

இது தொடர்பான அழைப்பை அவர் தமது முகநூலில் பிரசுரித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கண்டிக்கூட்டத்தில் 10ஆயிரம் பேர் பங்கேற்றால் தூக்கிட்டு கொல்வதாக தாம் சவால் விடுத்ததாக விமல் வீரவன்ச குறிப்பிட்டிருந்தார்.

இதற்கமைய கண்டிக்கூட்டத்தில் 10 ஆயிரம் பேர் பங்கேற்றமையால் தாம் தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்றும் விமல் வீரவன்ச கூறி வருவதாக ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார். எனினும் தாம் ஒருபோதும் கண்டி கூட்டம் தொடர்பில் சவால் எதனையும் விடுக்கவில்லை எனறு ராமநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார். இந்தநிலையில் தாம் கூறிய தாக வெளியிட்ட கருத்து தொடர்பில் உறுதிப்படுத்த விமல் வீரவன்சவுக்கு முடியுமாக இருந்தால் அவர் தம்முடன் பகிரங்க விவாதத்துக்கு வரவேண்டும் எனறு ரஞ்சன் ராமநாயக்க கோரியுள்ளார்.

இதேவேளை விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, கலகொடஅத்தே ஞான சார தேரர் போன்றோரே மகிந்த ராஜ பக்ஷவின் தோல்விக்கு காரணம் என்றும் ராமநாயக்க தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## கல்வி

எழுத்தறிவு பெறுவதும் சிறந்த கல்வி அறிவு பெறுவதும் ஒவ்வொரு மனிதனுக்கும் நிச்சயமான கடமையாக இருக்கிறது இல்லையா? அதை உணராமல் இருக்கிறவர்களுக்காக அறிஞர்கள் பல கருத்துக்களையெல்லாம் சொல்கிறார்கள். அறிஞர் பிளேட்டோ சொல்கிறார் கற்காமல் இருப்பதைவிட இறப்பதே மேல். ஏனென்றால் அனைத்துத் துன்பங்களுக்கும் ஆணிவேர் அதுதான். அப்படியென்று சொல்கிறார் அவர்.

பெர்னாட்ஷா வேறு ஒரு கருத்தைச் சொல்கிறார். குழந்தைகளுக்கு விருப்பமில்லாத கல்வி முறைகளை அவர்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்க எண்ணாதீர்கள். அப்படிச் செய்வது சத்தற்ற மரத்தூள்களை வற்புறுத்தி உண்ணச் செய்வதற்கு ஒப்பாகும் அப்படியென்று. மிகவும் சிந்திக்க வேண்டிய கருத்துத்தான் இது இல்லையா?

அதாவது நாம் நினைத்ததை குழந்தைகளிடம் திணிக்கக் கூடாது. குழந்தைகள் ஏற்கத்தக்க இயல்புள்ள ஆற்றல் எதென்று கண்டுபிடித்து அதற்கு விருப்பமான கல்வியைக் கொடுப்பது தான் உண்மையான கல்வி.

அறிஞர் எமர்சன் ஒரு கருத்தைச் சொன்னார். பாடசாலைகளில் நம்முடைய பிள்ளைகளுக்குக் கற்றுத் தருகின்ற கல்வியைக் கல்வி என்று சொல்லமுடியாது. உண்மையான கல்வியைப் பெறுவதற்கான வழிகள்தான் அது அப்படியென்று சொல்கிறார். அதுதான் கல்வியென்று நம்மில் பலபேர் நினைத்துக்கொண்டிருக்கின்றோம். அப்படி இல்லை. கல்வி அப்படி என்பதற்கு சுவாமி விவேகானந்தர் சொல்கிற கருத்து மிகவும் ஆழமாக யோசிக்க வேண்டியதாயிருக்கிறது.

ஆண்மை அளிப்பதே கல்வியின் இலட்சியம். அப்படியென்கிறார் அவர். ஒழுக்கம் அளிப்பது, மனவலிமையைத் தருவது, புத்தியை விசாலமடையச் செய்வது, அவனுடைய வலிமையை அவனை உணரச் செய்வது. இந்த ஆற்றல்களை வளர்ப்பது தான் உண்மையான கல்வி என்று சொல்கிறார் அவர். ஔவை என்கிற இன்னொரு அறிஞர் சொல்கிறார். ஒருத்தருக்கு ஆகாரத்தை அளிப்பதைவிட அவரே அதைத் தேடிக்கொள்கிற வழிமுறையைச் சொல்லிக் கொடுப்பதுதான் சரியான கல்வி முறையென்று.

ஒரு சீனப் பழமொழியைக்கூட நாம் கேள்விப்பட்டிருக்கிறோமே. ஒருவருக்கு மீனைக் கொடுப்பதைவிட மீன்பிடிப்பது எப்படியென்று கற்றுக்கொடுப்பதுதான் சிறப்பான கல்வி.

மகாகவி பாரதி அதை இன்னும் அழுத்தமாகச் சொல்கிறார். எழுத்தறிவு பெறுவது அல்லது எழுத்தறிவு பெறுவதற்கு உதவிக்கரமாக இருப்பது எவ்வளவு சிறப்பானதென்பதற்கு அவர் சொல்கின்ற கவிதை வரிகளைப் பாருங்கள்.

"அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்று சொல்கிறார் பாரதி. அதுமட்டுமல்ல, ஓர் ஆவேசமான கருத்தையும் அவர் வெளியிடுகிறார். "தேடுகல்வி இல்லாத ஊரைத் தீயினுக்கு இரையாக மடுத்தல்" அப்படியென்று.

ஆக, இந்த எழுத்தறிவித்தல், எழுத்தைக் கற்றுக்கொள்ளுதல் எவ்வளவு முக்கியமானது என்பதை அறிஞர்களும் கவிஞர்களும் ஆழமாக நம்முடைய மனதில் பதிய வைக்கிறார்கள்.

கல்வி அறிஞர் நே.து. சுந்தரவடிவேல் ஒரு கருத்தைச் சொல்கிறார். கல்வி என்பது தொட்டிலில் தண்ணீரை ஊற்றி நிரப்புகிற மாதிரி இல்லை. அதுமாதிரி நினைத்துக் கொண்டு குழந்தை யின் மூளையில் செய்திகள்நிரப்புவது நல்லதல்ல. வளரும் செடிக்கு நீர் ஊற்றிஎரு இடுவதைப் போல குழந்தைகளுக்குக் கல்வியை ஊட்டுவது அமையவேண்டும் என்று அவர் சொல்கிறார்.

ஆன்மீகவாதியான திருஞானசம்பந்தப்பெருமான் சொல்லும் கருத்தைப் பாருங்கள். "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" ஆக, இறையருள் பெறவேண்டும் என்றால்கூட அதற்குக்கல்வியறிவு தேவைப்படுகிறது என்பது அவருடைய கருத்து.

வள்ளுவப்பெருமான் இதைப்பற்றி அதிகமாகவே சொல்லியிருக்கிறார். மிகவும் ஆழமாக அவர் சொல்கின்ற கருத்து என்ன தெரியுமா? "கண்ணுடையோர் என்போர் கற்றோர் அகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதவர்" ஆக, நம்முடைய உடம்பில் இருக்கின்ற இந்தக் கண்கள் அது எப்போது கண்களாக மாறி இருக்கும் என்றால் கல்வியைக் கற்கும்போதுதான். இல்லாவிட்டால் அந்த உறுப்புக்கு மதிப்பில்லை என்று அவர் சொல்கிறார்.

நம்முடைய சங்க இலக்கியங்களில் புறநானூறு இதைப் பற்றி ஒரு கருத்து சொல்கிறது. "எக்குடிப்பிறந்தோர் யாவரேயாயினும் அக்குடியில் மூத்தோன் வருகை எண்ணாது அவருள் அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" நாலடியார் சொல்கின்ற கருத்தைப் பாருங்கள். "இம்மை பயக்குமால், ஈய குறைவென்றால் தம்மை விளக்குமால், தாமுணரா கேடென்றால் எம்மை உலகத்தும் யாம் காணோம் கல்விபோல் மம்மர் அறுக்கும் மருந்து" இவ்வளவு கருத்துக்கள் கல்வியின் மேன்மையைப் பற்றி சொல்கிறார்கள். இல்லாவிட்டால் சாதாரண விடயங்களில் கூட நாம் தடுமாறிப் போய்விடுவோம்.

டாக்டர் ஒருவர் நோயாளியைப் பார்த்து ஒரு மருந்துச்சீட்டுக் கொடுத்து 3 வேளை சாப்பிடு என்றார். அதற்கு அந்த நோயாளி கேட்டார், இந்தச் சீட்டை எப்படி சேர் மிகவும் சின்னதாக இருக்கிறது. இதைப்போய் 3 வேளை எப்படிச் சாப்பிடுவது என்று.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீல்ட் மார்ஷல் கனவு: சர்ச்சையில் சரத் பொன்சேகா



முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகக் கட்சியின் தலைவருமான ஜெனரல் சரத் பொன்சேகாவைச் சுற்றிச் சர்ச்சைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

அவருக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி பீல்ட் மார்ஷல் என்ற இராணுவப் பதவிநிலைப் பட்டம் அளிக்கப்படவுள்ளதாக கடந்த வாரம் செய்திகள் வெளியாகின.

பாதுகாப்பு அமைச்சு இதற்கான நிகழ்வு ஒன்றுக்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்பட்டது. ஆனால், அவருக்கு அந்தப் பட்டத்தை வழங்குவதற்கு அரசாங்கத்துக்குள்ளேயே எதிர்ப்பு கிளம்பியுள்ளதாக கூறப்படுகிறது.

வெறுமனே பீல்ட் மார்ஷல் பட்டத்தை அவருக்குக் கொடுப்பதற்கு எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு இராணுவத்தில், பீல்ட் மார்ஷலாகப் பணியாற்றும் ஆசையும் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தன்னை மீண்டும் இராணுவ சேவைக்குள் ஈர்த்து, அந்தப் பட்டத்தை வழங்க வேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பதாகவும், அதற்கு அரசாங்கத்தில் உள்ள முக்கிய பிரமுகர்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாகவும், ஊடகங்களில் செய்திகள் பரவுகின்றன.

அவ்வாறு இராணுவத்துக்குள் மீண்டும் உள்ளீர்க்கப்பட்டால், அவர் இராணுவத்துக்கு உத்தரவிடும் அதிகாரம் கொண்டவராக மாறிவிடுவார் என்று அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனராம்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததுமே, மூன்று நட்சத்திர ஜெனரலாக இருந்த லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நான்கு நட்சத்திர ஜெனரலாகப் பதவி உயர்வு வழங்கினார்.

அதுவரைக்கும், சேவையில் இருந்த இராணுவத் தளபதிகள் எவருமே, நான்கு நட்சத்திர ஜெனரலாகப் பதவி வகித்ததில்லை. இலங்கையின் இராணுவ வரலாற்றில் சேவையில் இருந்த போதே, ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்ட முதல் தளபதி என்ற பெருமையைப் பெற்றிருந்தார் ஜெனரல் சரத் பொன்சேகா.

அப்போதைக்கு அவருக்கு அந்த பதவி உயர்வு திருப்தியளிக்கவும் செய்தது. ஏனென்றால், இலங்கை இராணுவத் தளபதிகளின் உயர்நிலைப் பதவியாக லெப்.ஜெனரல் பதவியே இருந்து வந்தது.

முதல்முறையாக ஜெனரல் பட்டத்தை எட்டிய இராணுவத் தளபதி என்ற பெருமை இலங்கை இராணுவத்திலேயே தனக்கு மட்டுமே கிடைத்துள்ளது என்பதையிட்டு அவர் திருப்திபட்டுக் கொண்டார். என்றாலும், அவர் அரசியலில் இறங்க முடிவு செய்த பின்னர், எல்லாமே தலைகீழாக மாறியது.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில், மஹிந்த ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிட்ட அவர், எவ்வாறு புகழின் உச்சிக்கு சென்றாரோ, அதேபோல வேகமாக கீழ் இறங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இராணுவ நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புகளுக்கமைய, சரத் பொன்சேகாவிடம் இருந்து, ஜெனரல் பட்டம் பறிக்கப்பட்டது. இராணுவத் தளபதியாக இருந்தவர் என்ற பெருமையைக்கூட அவர் இழந்தார்.

இலங்கை இராணுவத்தில் சரத் பொன்சேகா என்ற பெயரே இல்லாமல் செய்யப்பட்டது. அந்தளவுக்கு அவரது பெயரை வரலாற்றிலிருந்து அழிக்க நடவடிக்கை எடுத்திருந்தார் மஹிந்த ராஜபக்ச. அதுமட்டுமன்றி, சரத் பொன்செகாவை அடுத்து இராணுவத் தளபதியாக பதவியேற்ற இப்போதைய கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரியவையும், ஜெனரலாகப் பதவி உயர்த்தினார் மஹிந்த ராஜபக்ச.

இதன்மூலம், இலங்கை இராணுவத்தில், சேவையிலிருந்த போது ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்ட ஒரே அதிகாரி என்ற பெருமையும் சரத் பொன்செகாவிடம் இருந்து பறிக்கப்பட்டது. இந்தளவுக்கும், ஜெனரல் சரத் பொன்சேகா விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரைத் திட்டமிட்டு வழிநடத்தியிருந்தார்.

ஆனால், ஜெனரல் ஜகத் ஜயசூரியவோ, வன்னிப் படைகளின் தளபதியாக மட்டும் பதவியிலிருந்தார். அவரை சரத்பொன்செகா வெறும் டம்மியாகவே வைத்திருந்தார்.

தன்னால், ஓரங்கட்டப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தவரை, மஹிந்த ராஜபக்ச இராணுவத் தளபதியாக்கி, ஜெனரல் பட்டத்தையும் கொடுத்து, தன்னைக் கீழ் நிலைப்படுத்தி விட்டதாகவே சரத் பொன்சேகா உணர்ந்தார்.

இதனால், மீண்டும் ஜெனரல் பட்டத்தை மீளப்பெறுவதை அவர் ஒரு பெரிய விடயமாகக் கருதவில்லை. அது இலங்கை இராணுவத்தில், "ஒரே ஒருவர்" என்ற பெயரையும் புகழையும் கொடுக்காது என்பது அவருக்குத் தெரியும்.

ஜெனரலாக இருந்து விட்டால் தனக்கு நிகராக இன்னொருவர் அமர்ந்திருப்பார் என்பதை அவர் அறிவார். இதனால்தான், ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதற்கு முன்னதாக, சில நிபந்தனைகளை அவர் முன்வைத்தார்.

இராணுவத்தில் இழந்துப்போன அனைத்து கௌரவங்களும் மீளக் கிடைக்க வேண்டும் என்பதுடன் பீல்ட் மார்ஷல் பட்டத்தையும் தர வேண்டும் என்று கோரியிருந்தார்.

அந்த முன்நிபந்தனைகளுக்கு அமையவே ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், சரத் பொன்சேகாவை குற்றச்சாட்டுக்கள் அனைத்தில் இருந்தும் விடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜெனரல் பட்டத்தையும் அளிக்க உத்தரவிட்டார்.

ஆனாலும், அதையிட்டு சரத் பொன்சேகாவினால் திருப்தி கொள்ள முடியவில்லை. ஏனென்றால், தனக்கு நிகராக இன்னொருவர் இருப்பதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

இந்த நிலையில், இராணுவத் தளபதியாக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற தயா ரத்நாயக்கவுக்கும், புதிய அரசாங்கம் ஜெனரலாகப் பதவி உயர்வை வழங்கியது. அவரும், தனது பதவிக்காலத்தின் கடைசி நாளை ஜெனரலாகவே கழித்திருந்தார். இப்போது, இலங்கை இராணுவத்தில் சேவையில் இருந்த போது ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றவர்களின் எண்ணிக்கை 3 ஆகிவிட்டது.

இந்த "மூன்றில் ஒன்றாக" இருப்பதை சரத் பொன்சேகா விரும்பவில்லை. அதுவும், தனக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் இருவருடன் அந்தப் பெருமையைப் பங்கிடுவதை அவர் விரும்பவில்லை.

கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் சரத் பொன்சேகா பங்கேற்கவில்லை. அதற்கான காரணத்தையும் அவரே கூறியிருந்தார்.

ஜெனரல் ஜகத் ஜயசூரியவும், லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்கவும் பங்கேற்கும் நிகழ்வுகளில் தான் பங்கேற்க மாட்டேன் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

தயா ரத்நாயக்க தனக்கு எதிராக பொய்சாட்சி கூறியவர் என்ற கோபம் சரத் பொன்சேகாவுக்கு இருக்கிறது. அதனால் தான், அவர்கள் இருவருடனும் ஜெனரல் பட்டத்தின் பெருமையைப் பங்கு போட அவர் தயாராக இல்லை.

இந்தநிலையில், பீல்ட் மார்ஷல் பட்டத்துக்காக அவர் அரசாங்கத்தை மறைமுகமாக வலியுறுத்தத் தொடங்கினார். எனினும் தான் அதனைக் கோரவில்லை என்றும், தந்தால் ஏற்றுக் கொள்வேன் என்றும் பேட்டி ஒன்றில் அண்மையில் சரத் பொன் சேகா குறிப்பிட்டிருந்தார்.

என்றாலும், பீல்ட் மார்ஷல் பட்டத்தை உடனடியாக தந்து விட முடியாது என்றும், அது இலங்கை இராணுவத்தில் இல்லாத ஒன்று என்பதால், புதிய செயல்முறைகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும், சரத் பொன்சேகாவே குறிப்பிட்டிருந்தார்.

அதுவே பீல்ட் மார்ஷல் மீது அவர் கொண்டுள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தியது. பீல்ட் மார்ஷல் என்பது எந்தவொரு இராணுவ அதிகாரிக்கும் இருக்கக் கூடிய கனவுதான். ஏனென்றால், அது உலகின் அதிஉயர்ந்த இராணுவ பதவிநிலை. இலங்கையில் அந்தப் பதவி இதுவரை உருவாக்கப்படவேயில்லை.

உலகில் நான்காவது பெரிய இராணுவத்தை வைத்துள்ள இந்தியாவில்கூட, இரண்டே இரண்டு பேர் மட்டும்தான், பீல்ட் மார்ஷல் பதவி உயர்வை பெற்றுள்ளனர். அதுவும் அவர்கள் ஆற்றிய அசாத்தியமான திறமைக்களுக்காக, ஓய்வு பெற்ற பின்னரே அவர்களுக்கு அந்தப்பதவிஉயர்வுவழங்கப்பட்டது.

ஒருவர் பீல்ட் மார்ஷல் காரியப்பா, அடுத்தவர் பீல்ட் மார்ஷல் சாம் மானக்ஷா. அமெரிக்க இராணுவத்தில் இந்த பதவி நிலையே கிடையாது. ஆனாலும் புகழ்பெற்ற இரண்டாம் உலகப் போர்க்கால அமெரிக்கத் தளபதியான ஜெனரல் மக் ஆர்தருக்கு பிலிப்பைன்ஸ் இந்த பதவியை வழங்கியது.

இப்போதும்கூட, உலகம் முழுவதும், சுமார் 25 பேர் வரையில் தான் இந்த பீல்ட் மார்ஷல் பதவியைப் பெற்றுள்ளனர். அத்தகைய பெருமைக்குரிய ஒரு பதவியைப் பெறுவதே சரத் பொன்சேகாவின் விருப்பமாக உள்ளது. ஆனாலும், அவர் மீண்டும் இராணுவத்தில் இருந்தபடியே அந்தப் பதவியைப் பெற முயற்சிப்பதுதான் சிக்கலானது.

ஒருவேளை, இனிவரும் காலத்தில் எந்த தளபதிக்காவது அந்தப் பட்டத்தை கொடுத்து விட்டால் தனது நிலை கீழ் இறங்கிவிடுமே என்று கவலைப்படுகிறார் போலும். எவ்வாறாயினும்; சரத் பொன்சேகா அரசியலிலும், இராணுவத்திலும், தன்னை முன்னிலைப்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகள் வந்தபடியேதான் உள்ளன.

அவர் பாராளுமன்றத்துக்குள் நுழைவதற்கு முயன்றபோது, அதனை மஹிந்த ராஜபக்ச தடுத்துவிட்டார். மஹிந்த ராஜபக்சவின் ஆலோசனைப்படி, ஜயந்த கெட்டகொட எம்.பி பதவியை விட்டுவிலக மறுத்துவிட்டதால், அந்த வாய்ப்பு இல்லாமல் போனது. இப்போதைய அரசுக்குள் அவர் செல்வாக்குச் செலுத்த முனைந்தாலும் அங்கும் சிக்கல்கள் வரத்தான் செய்கின்றன.

கடந்த மாத நடுப்பகுதியில், தனக்கு நெருக்கமான இராணுவ அதிகாரிகள் ஏழு பேரை முக்கிய பொறுப்புகளில் நியமிக்க மைத்திரிபால சிறிசேனவின் மூலம் நடவடிக்கை எடுத்திருந்தார் சரத் பொன்சேகா.

இராணுவ வழக்கத்துக்கு முரணாக, ஜனாதிபதி செயலகத்திலிருந்து வந்த உத்தரவை தான் அப்படியே செயற்படுத்தியதாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க கடந்த வாரம் கூறியிருக்கிறார்.

சரத் பொன்சேகாவினால், மைத்திரிபால சிறிசேனவும் தனது பெயரைக் கெடுத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, பீல்ட் மார்ஷல் விவகாரத்திலும் அரசாங்கத்துக்குள் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இதனால் சரத் பொன்சேகாவின் பரிந்துரையில், இராணுவ நடவடிக்கைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட பிரிகேடியர் கெப்பிட்டிவலன்ன அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஆக, சரத் பொன்சேகாவின் தலையீடுகளை அரசாங்கம்வேண்டா வெறுப்பாகவே பார்க்கத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில், அவர் பீல்ட் மார்ஷல் பட்டத்தைப் பெற்றாலும்கூட, அவர் அரசியலில் கடும் சவால்களையே சந்திக்கக்கூடும்.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் கண்ணீர் உலகிலேயே மிக ஆற்றலுள்ள சக்தி.
- வில்சன் மிஸ்னர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பெண்களைச் சிறை வைக்கும் பண்பாடு பாடை ஏறாதோ!

நிபந்தனைகளின் அடிப்படையில் ஜெயக்குமாரி நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். 362 நாட்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெயக்குமாரிக்கு விடுதலை கிடைப்பதில் மனித நேய அமைப்புகள், பெண்கள் அமைப்புகள் காத்திரமான பங்கை வகித்தன.

எனினும் 362 நாட்கள் ஜெயக்குமாரியை சிறையில் அடைத்து வைத்திருப்பதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் பேருதவி புரிந்தது.

இவ்வாறாக பயங்கரவாத தடைச்சட்டம், அவசர காலச் சட்டம் என்றவாறு சட்டங்களை நிறைவேற்றி அதன் உதவியோடு தமிழர்களைச் சிறையில் அடைக்கின்ற காரியம் இந்த நாட்டில் சர்வ சாதாரணமாக நடந்தேறுகின்றது.

தன் ஒரே மகனைப் பறி கொடுத்த துன்பத்திலும் தன் ஒரே மகளோடு வாழ்ந்து கொண்டிருந்த ஜெயக்குமாரி கிளிநொச்சி தர்மபுரத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார்.

தன் நாளாந்த வாழ்வியலுக்கே வக்கற்றிருந்த அந்த அபலைப் பெண் மீது, விடுதலைப் புலிகள் அமைப்பை மீளக் கட்டி எழுப்ப முயற்சி செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டது.

அட! கடவுளே! எதுவும் அறியாத ஜெயக்குமாரி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார். தாயை விட்டால் வேறு துணை இல்லை என்றிருந்த ஜெயக்குமாரியின் மகள் விபூஷிகா துணையற்றுப் போக, சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தஞ்சம் அடைந்தாள்.

இது என்ன கொடுமை! இராவணன் சீதையை அசோகவனத்தில் சிறைப்படுத்தினான் என்று கம்பராமாயணம் பேசுகிறது. கற்பின் செல்வி மீது காதல் கொண்ட கொடூரத்தால் சிறைப்படுத்தும் சின்னத்தனத்தைச் செய்ததால் இராவணனும் அவன் கிளையும் பரிநாசப்பட்டது.

சிறையில் இருந்த சீதை விட்ட கண்ணீர் இலங்காபுரியை எரித்தது. ஒரு கற்புடையாளின் சிறைப்படுத்தல் கண்டு நாதா! அவளை விடுதலை செய் என்று உரைக்காத கற்புடைத்தேவி மண்டோதரி மாரடைப்பால் மாண்டு போனாள். இராவணனின் சகோதரர்களும் புத்திரர்களும் வானுலகேகினர்.

இவை எல்லாம் ஏன்? சீதையைச் சிறைப்படுத்தியதாலன்றோ நடந்தேறின. அட! இப்போதும் இலங்கையில் பெண்களைச் சிறைப்படுத்தும் சின்னத்தனங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. 362 நாட்கள் தன் பிள்ளைப் பிரிந்து சிறையில் இருந்த ஜெயக்குமாரியின் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

சீதை விட்ட கண்ணீர் இராவண குலத்தை அழித்தது. ஜெயக்குமாரியின் கண்ணீர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரது சகோதரர்கள், பிள்ளைகள் ஆகியோரின் பதவிகளைப் பறித்து அவர்களின் பஞ்சணை மெத்தையையும் முட்படுக்கை ஆக்கியது. இதுவே இந்த நாட்டில் நடந்து கொண்டிருக்கும் உண்மை.

என்ன செய்வது? பெண்களைச் சிறைப்படுத்துவதால்தான் இலங்கையில் ஆட்சி நாசப்படும் என்பது சாபம் என்றால் அதனைத் தடுக்க யாரால் முடியும்?

### யுத்தத்தால் இடம்பெயர்ந்த நாம்

# சூழலியல் அகதிகளாகவும் இடம்பெயர்ந்திடலாகாது

## வடக்கு அமைச்சர் தெரிவிப்பு

கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட யுத்தம் காரணமாக, இலட்சக் கணக்கான தமிழ்மக்கள் இந்த மண்ணை விட்டு இடம் பெயர்ந்துள்ளார்கள். யுத்த அகதிகளாகவும் அரசியல் அகதிகளாகவும் இடம்பெயர்ந்த நாம் வருங்காலத்தில் சூழலியல் அகதிகளாகவும் இடம் பெயர வேண்டிய அவலம் நேர்ந்துவிடக் கூடாது என்று வடக்கு சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தால் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் பல்வேறு கடற்கரை சார் சூழலியல் திட்டங்கள் பற்றிய முன்னேற்ற மீளாய்வு நிகழ்ச்சி நேற்று யாழ்.பொதுநூலக கேட்போர் கூடததில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

யாழப்பாணத்தின் தரை மயோசின் காலத்துச் சுண்ணாம்புப் பாறைகளால் ஆனது. நொய்தலான இந்தச் சுண்ணாம்புத்தரை காரணமாகவே பெய்கின்ற மழைநீர் முற்றாகக் கடலுக்குள் வடிந்தோடிவிடாமல் நிலத்தடி நீராகக் கீழே தேங்குகின்றது. யாழ்ப்பாணத்தில் எமது இருப்புக்கு, இந்த நிலத்தடி நீர்தான் காரணம். ஆனால், வரப்பிரசாதமாக அமைந்த சுண்ணாம்புப் பாறைகள் அதன் நுண்துளைகளினூடாக மாசுக்களையும் கீழே கசிய விடுகின்றது.

நாம் மேற்கொள்ளும் செறிவு வேளாண்மையில் அளவுக்கு அதிகமான இரசாயன உரங்களையும் பீடைகொலலி நஞ்சுகளையும் பயன்படுத்தி வருகிறோம். இந்த நஞ்சுகள் கடைசியில் நிலத்தடி நீரைச் சென்றடைகின்றன. முறையான கழிவகற்று வசதிகள இல்லாததால் மலக்கிருமிகள் நிலத்தடி நீரில் குடியேறுகின்றன. இவை போதாது என்று இப்போது தண்ணீரில் எண்ணெய் மாசும் பூதாகரமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

ஒருபுறம் நிலத்துக்குக் கீழே சூழலியல் அனர்த்தங்கள் நிகழ்ந்தேறும்போது, இன்னொருபுறம் நிலத்துக்கு மேலேயும் பெரும் சூழலியற் படுகொலைகள் நிகழ்ந்து வருகின்றன. கரையோரத்தில் பாதுகாப்பு அரண்களாக விளங்கி வந்த மணல் மேடுகளில் பெரும் பங்கு கொள்ளையடிக்கப்பட்டு விட்டது. கடற்கோள் தடுப்புச் சுவர்களாக விளங்கும் கண்டல் காடுகளும், சவுக்குக் காடுகளும் விறகுத் தேவைகளுக்காகக் காணாமற் போய்க்கொண்டிருக்கின்றன.

யுத்த காலத்தில் இந்த அழிவுகளைத் தடுக்கமுடியாது போயிருந்திருக்கலாம். ஆனால், இனிமேலும் இவை தொடர்ந்தால் நாம் சூழலியல் அகதிகளாக இடம் பெயர்வது தவிர்க்க முடியாததாகிவிடும். ஐக்கியநாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் புள்ளி விபரங்களின்படி சூழல் அகதிகளாக உலகளாவிய ரீதியில் தற்போது 10.2 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். 2020 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 50 மில்லியன்களாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குள் ஒருவராக நாம் அடங்கிவிடக் கூடாது.

சூழல்நெருக்கடிகள் வரும்போது அதற்குள் சில சமயங்களில் அரசியலும் ஒரு மாசாகக் கலந்துவிடும் அபாயம் உள்ளது. இதற்கும் நாம் இடமளித்துவிடக் கூடாது. சூழலில் அரசியல் மாசு நிலைமைகளை மேலும் விபரீதமாக்கி விடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஆக்கத்திறன் கண்காட்சி

கணபதி பாடசாலையின் ஆக்கத்திறன் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை கணபதி படிப்பகத் தலைவர் பூ.அகமணிதேவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## மணிவிழாவும் சேவை நயப்பும்

வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிதம்பரம் கந்தசாமியின் மணிவிழாவும் சேவை நயப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, வடக்கு மாகாண ஓய்வுநிலை மேலதிகக் கல்விப் பணிப்பாளர் நா.தணிகாசலம்பிள்ளை ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

பாராட்டுரையை வலிகாமம் கல்வி லய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. கணேசலிங்கம், தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முக குலகுமாரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-3)



## சத்திய தரிசனம்

### இதுவே சரியான பாதை

❖ அன்பு நிறைந்திருக்கும் இடத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

❖ விடாமுயற்சியுடன் உழைப்பவன் செல்வத்தை அடைகிறான். தர்மச் செயல்களில் ஈடுபடுவன் புண்ணியத்தை அடைகிறான்.

❖ உதட்டிலிருந்து வருவதல்ல பிரார்த்தனை. உள்ளத்தில் இருந்து வரும் பிரார்த்தனையே மகத்தானது.

❖ துன்பத்தையும் கடவுள் அளித்த பிரசாதமாக ஏற்றுக் கொள்வதே உண்மை பக்தனின் இலக்கணம்.

❖ வேகமாகப் போவதை விட, சரியான பாதையில் விவேகத்துடன் செல்வதே புத்திசாலித்தனம்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### நமசிவாய என்பதன் சிறப்பு தெரியுமா?

சி-உடுக்கை ஏந்திய வலக்கரம், வா - தூக்கிய திருவடியைச் சுட்டும் இடதுகரம்.ய - அஞ்சேல் என்றருளும் வலது அபயகரம், ந - அனலேந்திய இடக்கரம், ம - முயலகனின்மேல் ஊன்றிய திருவடி.

உலகப்பற்றை அறவே ஒழித்து திருவடிப்பேற்றை விரும்பும் ஆன்மாக்களுக்காக நிகழ்த்தப்பெறும் ஞானத்திருநடனம் இது. ஞான மார்க்கத்தின் இரண்டாவது படி இது.காரண பஞ்சாக்கரம் - சிவயசிவ ய என்பது உயிரைக் குறிப்பது உயிராகிய ய வுக்கு இருபுறமும் சிவசக்தி காப்பாக இருப்பதால், இம்மந்திரத்தை இதய மாணிக்க மந்திரம் என்பர்.உலகப்பற்றை அறவே ஒழித்து திருவடிப்பேற்றிலே மூழ்கியிருக்கும் தவசீலர்கள், இம் மந்திரத்தை ஜெபிப்பதன்மூலம் இவ்வுடம் போடுகூடிய நிலையில் இவ்வுலகிலேயே பேரின் பத்தைப் பெறுவர்.

மகா காரண பஞ்சாக்கரம்-சிவசிவ
சிவசக்திக்குள்ளே ய கரமாகிய உயிர் ஒடுங்கியுள்ளது.
சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினைமாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ என்னச் சிவகதிதானே

என இம்மந்திரத்தின் மகிமையை திருமூலர் சிறப்பித்துக் கூறுகிறார்.

சிவ சிவ மந்திரத்தை தினமும் ஜெபிப்பவர் சிவனும் தானும் பிரிவில்லாத நிலையான மேலான பேரின்பத்தைப்பெற்று விரைவில் உன்னத முக்தி நிலை பெறுவர்.

மகாமனு பஞ்சாக்கரம் -சி. சி என்பது மகாமனு பஞ்சாக்கர மந்திரம். சி என்ற ஓரெழுத்தில் வ என்னும் அருள் சக்தியும் ய என்னும் உயிரும் ந என்னும் மறைப்பாற்றலும் ம என்னும் மலங்களும் ஒடுங்கியுள்ளன. இது ஓரெழுத்து மந்திரமானாலும் இதில் [illegible]களும் அடக்கம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டினை முன்னிட்டு முதலாவது "JAFFNA MARATHON" எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான பதிவு நடவடிக்கைகள் யாவும் காலை 5.30 மணி முதல் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்று, மரதன் நிகழ்வு காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

மரதன் போட்டியானது இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

1.திறந்த பிரிவு - 21km

2.18 வயதிற்கு குறைந்தோர் - 7km

போட்டியாளர்களுக்கு பிரத்தியேக சீருடை வழங்கப்படும்

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

விண்ணப்பப்படிவங்களைப் பெற வேண்டிய இடம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, பழைய மாணவர் சங்க அலுவலகம், யாழ்ப்பாணம். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



# தொடர்கிறது சங்காவின் சாதனை பட்டியல்

ஸ்கொட்லாந்து அணிக்கு எதிரான போட்டியில் இலங்கையின் சங்கக்கார தொடர்ச்சியாக 4 ஆவது சதமடித்து வரலாற்று சாதனை படைத்தார்.
அவுஸ்திரேலியாவின் ஹோபர்ட் நகரில் இலங்கை- ஸ்கொட்லாந்து அணிகள் மோதும் உலகக் கிண்ண லீக் போட்டி நடைபெற்றது.
இந்த போட்டியில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய டில்ஷான் 104 ஓட்டங்களும், சங்கக்கார 124 ஓட்டங்களும் எடுத்தனர்.
இதன்மூலம் உலகக் கிண்ண வரலாற்றில் தொடர்ச்சியாக 4ஆவது சதமடித்து வரலாறு படைத்தார் சங்கக்கார. தவிர இது, உலகக் கிண்ண அரங்கில் இவரது 5ஆவது சதம். இதன்மூலம் அதிக சதமடித்தவர்கள பட்டியலில், 2ஆவது இடத்தை அவுஸ்திரேலியாவின் பொண்டிங்குடன் பகிர்ந்து கொண்டார்.
உலகக் கிண்ணப் போட்டியில் 4ஆவது சதமடித்த டில்ஷான், 3ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டார். (க)

## மான்செஸ்டர் யுனைடெட்டை வீழ்த்தியது ஆர்சனல்



எப்.ஏ.கோப்பை காலிறுதி போட்டியில் ஆர்சனல் அணி 2-1 என்ற கோல் கணக்கில் மான்செஸ்டர் யுனைடெட் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.எப்.ஏ.கோப்பை காற்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டம் அண்மையில் மான்செஸ்டரில் உள்ள ஓல்ட் ட்ராபோர்ட் மைதானத்தில் நடைபெற்றது.

ஆர்சனல்- மான்செஸ்டர் யுனைடெட் இரு அணிகளும் சமபலம் வாய்ந்தவை என்பதால் தொடக்கம் முதலே ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. முதல் பாதியின் 25ஆவது நிமிடத்தில் ஆர்சனல் வீரர் நாச்சோ மான்ரியல் முதல் கோல் அடித்தார். அடுத்த 4ஆவது நிமிடத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணி பதில் கோல் திருப்பியது. இந்த கோலை மான்செஸ்டர் யுனைடெட் அணியின் நட்சத்திர வீரர் ரூனி அடித்தார் இந்த ஆட்டத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணி வீரர் ஏஞ்சல் டி மரியாவுக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டது. அந்த அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

முதலில் ஆர்சனல் வீரர் ஆரோன் ராம்சேவிடம் முரட்டு ஆட்டத்தை வெளிப்படுத்தியதற்காக அவருக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து, நடுவர் மைக்கேல் ஒலிவரின் முதுகில் ஏஞ்சல் டி மரியா அடித்தார். இதையடுத்து 2ஆவதாக மஞ்சள் அட்டை பெற்ற ஏஞ்சல் டி மரியா களத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்.

10 வீரர்களுடன் விளையாடிய மான்செஸ்டர் யுனைடெட் அணி வீரர்களால் ஆர்சனல் அணியின் தாக்குதல் ஆட்டத்தை தடுக்க முடியவில்லை. இரண்டாவது பாதி ஆட்டத்தில் 61ஆவது நிமிடத்தில் ஆர்சனல் வீரர் டேனி வெல்பேக் அடித்த அட்டகாசமான கோல் மூலம் ஆர்சனல் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று எப்.ஏ.கோப்பை அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது. (க)

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

**நாளைய போட்டிகள்**

| | | |
|---|---|---|
| பங்களாதேஷ் | காலை 9.00 | நியூசிலாந்து |
| இங்கிலாந்து | காலை 9.00 | ஆப்கானிஸ்தான் |

ICC CRICKET WORLD CUP 2015

**இன்றைய போட்டி**

| | | |
|---|---|---|
| தென்னாபிரிக்கா | காலை 6.30 | ஐ.அ.எமிரேட்ஸ் |

## இண்டியன்ஸ்வெல்ஸ் டெனிசில் செரீனா வில்லியம்ஸ் பங்கேற்பு



அமெரிக்காவின் இண்டியன் வெல்ஸ் நகரில் பரிபாஸ் ஓபன் சர்வதேச டெனிஸ் போட்டி நேற்று ஆரம்பமானது. இந்த போட்டியில் 14 ஆண்டுகளுக்கு பிறகு நம்பர் வன் வீராங்கனை அமெரிக்காவின செரீனா வில்லியம்ஸ் பங்கேற்கிறார்.

2001ஆம் ஆண்டு இந்த போட்டியில் விளையாடிய போது ரசிகர்கள் இனவெறியுடன் அவமதிப்பு செய்ததால் இந்த போட்டியை புறக்கணித்து வந்த செரீனா, அதற்கு இப்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளார். (க)

## நெடியகாடு இளைஞர் வி.க உதைபந்தாட்ட போட்டி

நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் Jaffna challengers cup உதைபந்தாட்ட சுற்று தொடரில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து விளையாடிய நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டு கழகம் 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சுப்பர்8 சுற்றுக்குத்தகுதி பெற்றது.

மேரிஸ் அணி சார்பாக யூட், ஜெக்சன்,அன்ரன்சால்ஸ் தலா ஒவ்வொரு கோல்களையும்,ஹென்றீஸ் அணி சார்பாக கலிஸ்டன் ஒரு கோலையும் பெற்றுக்கொண்டார்.

நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டு கழகத்தை எதிர்த்து கம்பர மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகம் மோதியது. இரு அணிகளும் தலாஒவ்வொரு கோல்களை போட்டன.

யங்கம்பன்ஸ் அணி சார்பாக பிரியதர்சன் ஒரு கோலையும், சென்சேவியர் அணி சார்பாக நிறோஜன் ஒரு கோலையும் பெற்று கொண்டனர், பின்னர் தண்ட உதை மூலம் 3:1 என்ற கோல் அடிப்படையில் யங்கம்பன்ஸ் அணி வெற்றி பெற்று சுப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெற்றது. (க)



## ஏ.டி.பி.உலக தரவரிசை; ஆன்டி முரே முன்னேற்றம்

ஏ.டி.பி. உலக தர வரிசைப் பட்டியலில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஆன்டி முரே 4ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

கடந்த வார இறுதியில் நடந்த டேவிஸ் உலக கோப்பை போட்டியில் ஆன்டி முரே சிறப்பாக விளையாடியதன் மூலம் அவர் 4ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

டேவிஸ் உலகக் கோப்பையின் முதல் சுற்றுப் போட்டியில் அமெரிக்காவின் ஜான் இஸ்னர் மற்றும் டொனால்ட் யங் ஆகியோரை வெற்றி கண்டதன் மூலம் ஜப்பான் நாட்டின் கெய் நிஷிகோரியை பின்னுக்கு தள்ளி ஆன்டி முரே 4ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

சேர்பியா நாட்டின் நோவக் ஜோகோவிக் முதல் இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார். 2ஆவது இடத்தில் ரோஜர் பெடரரும், 3ஆவது இடத்தில் ரபேல் நடாலும் உள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

■ சங்கக்கார, டில்சான் அசத்தல் சதம் ■

# இலங்கை அணியின் விளாசலில் துவம்சமானது ஸ்கொட்லாந்து

ஸ்கொட்லாந்துக்கு எதிரான உலகக் கிண்ணத் தொடரின் லீக் போட்டியில் இலங்கை அணி 148 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவின் ஹோபார்ட நகரில் இலங்கை - ஸ்கொட்லாந்து அணிகள் மோதிய உலகக் கிண்ண "ஏ" பிரிவு லீக் போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது, இதன்படி தொடக்க ஆட்டக்காரர்களாக திரிமன்னேவும், டில்ஷானும் களமிறங்கினர்.

தொடக்கத்திலிருந்து துடுப்பாட்டத்தில் திணறிய திரிமன்னே 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் இணைந்த டில்ஷானும், சங்கக்காரவும் இணைந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர், இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக முன்னேறியது.

34ஆவது ஓவரில் 5ஆவது பந்தில் டில்ஷான் சதமடிக்க, கடைசி பந்தில் சங்கக்காரவும் சதமடித்து அசத்தினார்.

இதன்மூலம் உலகக் கிண்ண போட்டிகளில் தொடர்ந்து 4 சதங்களை அடித்தவர் என்ற சாதனையை சங்கக்கார படைத்தார்.

விறுவிறுப்பாக சென்று கொண்டிருந்த ஆட்டத்தில் டில்ஷான் 104 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், சங்கக்கார 124 ஓட்டங்கள் எடுத்த நிலையல் ஆட்டமிழக்கவே அடுத்து வந்த ஜெயவர்த்தன (2) ஏமாற்றினார்.

மத்யூஸ் மட்டும் 51 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்க, மற்றைய வீரர்கள் சொதப்பல் ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 363 ஓட்டங்கள் எடுத்தது.

கடின இலக்கை விரட்டிய ஸ்கொட லாந்து அணிக்கு கோட்ஜெர் (0), மெக்லியாட் (11), மக்கான் (19) ஏமாற்றினர்.

பொறுப்பாக ஆடிய பிரடீ கொலேமென், அணித் தலைவர் பிரஸ்டன் மம்சன் ஆகியோர் அரைச்சதம் கடந்தனர்.

இருப்பினும் இலங்கை அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் பிரடீ கொலேமென் 70 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் மம்சன் 60 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழக்கவே, அவ்வணி 43.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 215 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன்மூலம் இலங்கை அணி 148 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் சங்கக்கார தெரிவானார். (க)




## மண்டைதீவில்...

மன் ஆலயத்துக்குச் சொந்தமான சுமார் 30 பரப்புக் காணியை சுவீகரிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சி சமய சுதந்திரத்தில் கைவைக்கும் நடவடிக்கையென மண்டைதீவு [illegible]முறைக்கழகம் சுட்டிக் காட்டியுள்ளது.

இடப்பெயர்வு, உயர்பாதுகாப்பு வலயம் எனப் பல பிரச்சினைகளை அனுபவித்த மண்டைதீவில், காணி சுவீகரிப்பு என்பதை முற்றாகக் கைவிட வேண்டும் என பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன்,

இதுவிடயத்தில் யாழ் அரச அதிபர், வேலணை பிரதேச செயலா மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தலையிட்டு காணி சுவீகரிப்பை நிறுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடியின் யாழ்ப்பாண விஜயம் நாளை நடைபெறவிருக்கும் வேளையில் ஒரு இந்து ஆலயத்திற்குச் சொந்தமான காணியை சுவீகரிப்பதற்கு முயற்சிப்பது குழப்பத்தை ஏற்படுத்துவதற்கானது என அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந)

## நாளை...

மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள், எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதிநிதிகள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட பல்வேறு தரபினரையும் எதிர்வரும் வெள்ளி மறறும் சனிக்கிழமை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இதன்போது நல்லிணக்க செயற்பாடுகள், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, இருதரப்பு வர்த்தக, பொருளாதார மற்றும் முதலீடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனம் கொழும்பில் ஏற்பாடு செய்துள்ள வர்த்தக மாநாட்டிலும் இந்தியப் பிரதமர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். அத்துடன் யாழ்ப்பாணம், தலைமன்னார் மற்றும் அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவுள்ள அவர், இலங்கை நாடாளுமன்றத்திலும் உரையாற்றவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இந்திய பிரதமர் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சனிக்கிழமையன்று சந்தித்து பேச்சு நடத்துவார். இதன்போது அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது இந்தியாவின் தார்மீக பொறுப்பு என்று இந்தியப் பிரதமரிடம் வலியுறுத்தவுள்ளதாக விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்திய பிரதமர் ஒருவர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வரவுள்ளமை இதுவே முதல் தடவையாகும். இதற்கு முன்னர் 2008ஆம் ஆண்டு முன்னாள் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் இலங்கையில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்தாலும், அரச விஜயமாக வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## ஜனநாயக...

இருப்பதாக அமெரிக்க உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இககருத்தை இந்தியாவின் கொலகத்தா நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கருத்தரங்கு ஒனறில் கலந்து கொண்டு உரையாற்றிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிராந்திய விவகாரங்களுக்கான பிரதிப் பணிப்பாளர் நீல் குரோமஸ் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நீண்டகாலமாக இருந்து வந்த சர்வாதிகார ஆட்சி தூக்கியெறியப்பட்டுள்ளது. இதனை அடுத்து இலங்கையில் புதிய அரசாங்கம் பதவி ஏற்றதைத் தொடர்ந்து அங்கு சாதகமான மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் ஜனநாயகத்தை மீண்டும்நிலைநாட்டுவதற்கும், இனப பதற்றத்தால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கும் இலங்கயின் புதிய அரசாங்கத்துக்கு தன்னாலான அனைத்துஉதவிகளையும்அமெரிக்கா வழங்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## தமிழின...

கும் அதிகார பரவலாக்கலை வழங்கி இந்திய தேச மக்கள் ஒரே நாட்டு மக்களாக மகிழ்ச்சியான வாழ்வொன்றினை வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இவ்வாறான வாழ்வொன்றினை இலங்கையில் நாம் வாழ முடியாது உள்ளது.

முதற் தடவையாக இலங்கை வருகின்ற இந்திய பிரதமர் நரேந்திர மோடி எமது மக்களின் உண்மைகளின் அடிப்படையில் சிந்தித்து நீதியின் அடிப்படையில் செயற்பட்டு நல்லிணக்கத்திணையும சமாதானத்தினையும் கொண்டு வருவதற்கு ஆழ்மனதில் பதித்து ஒரு தீர்மானத்தை எடுப்பார் என நான் நினைக்கின்றேன்.

எங்களுக்கு வேறெதுவும் வேணடாம். எங்களை மக்களாக எங்களின் உரிமையோடு தனித்துவமான மொழி கலாசாரங்களோடு வாழவிட்டாலே போதும். உலகத்திலேயே செம்மொழிகளில் ஒன்றாகவுள்ள தமிழ் மொழியினை தாயமொழியாக கொண்ட ஆழ்ந்த கலாசாரத்தினை கொண்ட இனம் உரிமை இழந்த மக்களாக இருப்பது மன வேதனையாக இருக்கின்றது என்பதனை இந்திய பிரதமர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இரண்டு தேசியங்களை கொண்டுள்ள இலங்கையில் அக சுயநிர்ணய உரிமைகளுடன் அதிகாரப் பகிர்வுடன் வாழ்வதற்கு உண்மையின் அடிப்படையில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வினை இந்திய பிரதமர் எமக்கு வழங்க வேண்டும் என தெரிவித்தார் மன்னார் ஆயர். (செ-4)

## வார்த்தைகள்...

இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த ஐ.நா செயலாளர் நாயகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர ஜெப்ரி பெல்ட்மன் நியூயோர்க்கில் ஐ.நா தலைமையகத்தில்கடந்த செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும்குறிப்பிடுகையில், இலங்கையில் இடம்பெற்ற போரினால் எல்லா சமூகங்களும், அனைத்துப் பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. வடக்கில் உள்ள மக்களின் மனங்களை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியது அவசியம். இலங்கையின்எல்லா இன மக்களின் கவலைகளுக்குத் தீர்வு காண அது வழிவகுக்கும்.

இலங்கையில் இடம்பெற்ற சந்திப்புகளின் போது, அந்த நாட்டுக்கான ஐ.நா செயலாளர் நாயகத்தின் ஆதரவு மற்றும் இலங்கைக்கான ஐ.நாவின் ஒத்துழைப்புகள் தொடரும் என்பதையும் நான் தெரியப்படுத்தினேன். 2009ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டறிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறினேன்.

இலங்கை அரசாங்கம் உடனடியாக சில நடவடிக்கைகளை மேற்கொள்வதை நான் ஊக்குவிக்கிறேன. இலங்கை படையினரின்கட்டுப்பாட்டின் கீழுள்ள நிலங்களை விடுவிப்பது போன்ற சாத்தியமான விடயங்கள் உள்ளன. இதன்மூலம், இலங்கையின் புதிய அரசாங்கம் வடக்கில் தனது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

ஐ.நா மனிதவுரிமைகள்ஆணைக குழுவிலும் இலங்கை அரசாங்கம் தனது கடப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளதன் மூலம், இலங்கையின் புதிய அரசாங்கம் தன்னைக் கவனிப்புக்கு உரியதாக்கியுள்ளது. ஆனால், வார்த்தைகளை விடவும், செய்ய வேண்டியது அதிகமானதாகும். பொறுப்புக்கூறல் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

அங்குள்ள மக்களிடையே இனனமும் அவநம்பிக்கைகள் உள்ளன. இலங்கையின் புதிய அரசாங்கம் தனது கடப்பாட்டை நிறைவேற்றுமா என்பது குறித்து வடபகுதி மக்களிடையே சந்தேகம் உள்ளது. இதுதொடர்பிலான புதிய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு உண்மையானது என்ற நம்பிக்கையுடன் வந்திருக்கிறேன்.

இலங்கை அரசாங்கத்துக்கு தேவைப்பட்டால் தொழில்நுட்ப உதவிகளை வழங்க ஐ.நா தயாராக இருக்கிறது. இலங்கை மக்களுக்கு இது மிகவும் முக்கியமானது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஜனாதிபதி...

யர்களை சந்தித்திருந்தார்.

ஜனாதிபதி அமர்ந்து கொண்டதும் அங்கு வருகை தந்திருந்தவர்களுக்கான வரவேற்புரை நிகழ்ந்தது. ஐக்கிய இராச்சியத்துக்கான இலங்கைத் தூதரக ஏற பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வைத் தொகுத்து வழங்கிய தூதரக ஊழியர் அனைவரையும் வரவேற்றுவிட்டு ஜனாதிபதியையும வரவேற்ற போது பழக்க தோசத்தில் "அதி மேதகு ஜனாதிபதி மகிந்த" என்று வாய் தவறிக் கூறிவிட்டார். இதைக் கேட்டதும் பகட்டுக்காகவன்றி உண்மையிலேயே சுமார் ஒரு நிமிடத்துக்கு மேலாக ஜனாதிபதி வாய்விட்டுச் சிரிக்கவே கூடியிருந்தோரும் தொடர்ச்சியாக சிரிக்க ஆரம்பித்தனர். இதனால் தான் செய்த தவறையும்மறந்த நிலையில் அறிவிப்பாளரும் சிரித்துச் சமாளித்து தொடர்ந்து மைத்திரிபால சிறிசேன உரையாற்றுவார் என கூறி முடித்தார். (செ-11)

## போர்க்குற்ற...

என்று படத்தின் தயாரிப்பாளர் கெலம் மெக்ரே கோரியுள்ளார்.

சிங்கள மொழியில் பிரதி செய்யப்பட்ட இந்த படம் பிரித்தானியா வின நாடாளுமன்றத்தில் காண்பிக் கப பட்டது.

இதன்போதே இலங்கையின் தொலைக்காட்சிகள் இந்த படத்தை காண்பிக்க வேண்டும் என்று மெக்ரே கோரிக்கை விடுத்தார்.

இதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தடுக்கக்கூடாது என்றும் அவர் கோரினார்.

இதன்மூலம் போரின் போது நடந்த உண்மைகளை சிங்கள மக்கள் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் மெக்ரே குறிப்பிட்டார்.

சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்கள் உண்மையை அறிந்துவிடக்கூடாது என்பதை பிழை செய்தோர் எண்ணம் கொண்டுள்ளனர் எனத் தெரிவித்த மக்ரே, தமது படத்தின் மூலம் விடுதலைப் புலிகளை நியாயப் படுத்த வில்லை என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
திருமதி மகாதேவா
பத்மாதேவி

உயிராகி
31.01.1948

விதையாகி
10.02.2015

கருவாக வந்து உயிராகினாய்
தருவாக நின்று நிழலாகினாய்
எமை ஆளவந்து உயர்வாகினாய்
சுமையாக முன்னர் விதையாகினாய்

கடந்த 10.02.2015 செவ்வாய்க்கிழமை இறைநிழல் எய்திய அமரர் திருமதி மகாதேவா பத்மாதேவி (கமலா) அவர்களின் 31-ம் நாள் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.03.2015) வியாழக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(9739)

இங்ஙனம் :
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியமாணவி திருமதி லங்கினி ஜெயசீலன் அவர்களின் பாசமிகு தந்தை **அமரர் கனகரட்ணம் இரத்தினசபாபதி** அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(9759)

இணைப்பாளர், முதுகல்விமாணி மாணவர்கள் (11ஆம் அணி),
உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

# யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்



அருள் ஒளி தர்சன மாலையும் பங்குனி மாத சிறப்புப் பூஜையும்
இடம் : இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி நல்லூர்.
காலம் : 15.03.2015.
ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணி



வரமருளிக் காத்தருள் மனோன்மணி அம்மனாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையரின் அருள் ஒளி தர்சன மாலையும் பங்குனி மாத சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

**ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும். பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.**

குறிப்பு : ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சாந்தசோலை வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் இடம்பெறுகின்றன.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பி.ப 4.30 மணிக்கு இலங்கை வானொலி தமிழ் சேவையில் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறுகின்றது.

(9750) யாழ் தொடர்புகளுக்கு 0779825004 ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192

# மரண அறிவித்தல்

## திருமதி ரதி மயிலேறும்பெருமாள்



யாழ்.பருத்தித்துறை நாகலிங்கம் முதலியார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரதி மயிலேறும்பெருமாள் அவர்கள் நேற்று (11.03.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொறியியலாளர் மாணிக்கம் ஞானாம்பிகை தம்பதி களின் அன்பு மகளும், வல்வெட்டித்துறை கனகசுந்தரம் இளையாச்சி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் ஓய்வுபெற்ற மாவட்ட வைத்திய அதிகாரி Dr.க.மயிலேறும்பெருமாள் அவர்களின் அன்பு மனைவியும், அருண், மயூரன், சிவபாலன் ஆகியோரின் பாச மிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2015) வியாழக்கிழமை பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நாகலிங்கம் முதலியார் வீதி,
பருத்தித்துறை.

(C-334)

தகவல் :
குடும்பத்தினர்

# 45ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
10.07.1985

மறைவு
27.01.2015

வவுனியாவில் 27.01.2015 அன்று அகால மரணமடைந்த

**அமரர் சுதாஜினி (சுதா)**

பண்பின் திருவுருவாய்
பாசத்தின் உறைவிடமாய் – வாழ்ந்த உம்மை
கண் இமைக்கும் நேரத்தில்
காலனவன் கவர்ந்து சென்ற
கொடுமை எண்ணிக் கலங்குகின்றோம்

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

பட்டாணிச்சூர் புளியங்குளம்
வவுனியா

(9710)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org